

அச்சு மத்திய தீபம்
2013
சுடர் 3
பரிசில் நாள் - 2012
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

# யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

## அச்சுவேலி

EVER SHINING LIGHT

1892

ATCHUVELY CENTRAL COLLEGE

# அச்சு மத்திய தீபம்

## சுடர் - 03

# நூல் தரவுகள்


நூலின் பெயர் :- "அச்சு மத்திய தீபம்"

நூலாசிரியர் :- செல்வி யோ. செல்லமுத்து

பதிப்புரிமை :- மலர்க் குழு

தாள் :- *B5, 70g*, வெள்ளைத் தாள்

பக்கங்கள் :- XIV - 96

முதல் பதிப்பு :- 2009, ஐப்பசி

அச்சுப் பதிப்பு :- ஷாம்பவி பதிப்பகம்.
தீர்வேலி & யாழ்ப்பாணம்.
077 6184425, 021 2224143




# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வான மறிந்த தனைத்தும் மறிந்து
வளர் மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

# கல்லூரிக் கீதம்

அச்சுவேலி மத்திய கல்லூரி அன்னையே வாழி
இச்செகத்தில் கல்விகலை இன்பமுடன் ஊட்டும் எங்கள்
(அச்சுவேலி)

மெச்சு தமிழ் பண்புடனே பண்பாடும் நல்கியே
அச்சமின்றி வாழ்ந்திடவே அறிவொளியை ஊட்டும் எங்கள்
(அச்சுவேலி)

எழுத்தறி வித்திடும் இறைவனைப் பணிகுவோம்
வழுத்தியே வாத்துவோம் வாழும் கல்வி ஊட்டுவாள்
பழுத்திடும் செந்தமிழ் பழச்சுவை மாந்துவோம்
செழித்திடும் மெஞ்ஞானம், விஞ்ஞானம் நல்குவாள்
(அச்சுவேலி)

ஒன்று எட்டு ஒன்பதிரண்டு ஒருங்கிணைந்த ஆண்டிலே
அன்றொளிர்ந்த தீபமே அறிவுதரும் நிலையமே
அதியர் ஆசிரியரை அனுதினம் பணிகுவோம்
துதி செய்தே என்றும் நாங்கள் இனிய கீதம் பாடுவோம்.
(அச்சுவேலி)

# மலரின் உள்ளே...


- குரு. வை. சிவஸ்ரீ விருத்தகிரீசக் குருக்களின் ஆசிச்செய்தி - I
- அருட்பணி திரு. கு. யே. அன்ரனி அடிகள் பங்குத்தந்தை அவர்களின் ஆசிச்செய்தி - II
- தென்னிந்திய திருச்சபை அருட்பணி I. S. ஆனல்ட் அவர்களின் ஆசியுரை - III
- மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி - IV
- வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி - V
- கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி - VI
- அதிபரின் வாழ்த்துச்செய்தி - VII
- பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி - VIII
- Message from Retired Principal - IX
- இளைப்பாறிய அதிபர் திருமதி. ச. கனகராசா அவர்களின் வாழ்த்துச்செய்தி - X
- பழைய மாணவர் சங்க செயலாளரின் வாழ்த்துச்செய்தி - XI
- A Message - XII
- இதழாசிரியரின் பேனாவில் இருந்து - XIII
- நீர் இன்றி அமையாது உலகு - 01
- அன்னை - 03
- எமது ஆலயங்களும் இசை வழிபாடும் - 04
- நாட்டிய சாஸ்திரம் கூறும் இரசக்கோட்பாடு - 07
- நமக்குள் ஒரு புதையல் - 10
- விழுமியக் கல்வியும் மாணவர் ஒழுக்கமும் - 11
- மழுங்கிய குரல் - 15
- பள்ளிப் பருவம் - 17
- கல்விச் சுற்றுலாவும் அதன் பயன்பாடுகளும் - 19
- வெள்ளைக் கொக்கு - 21
- நம் தேசம் - 22
- பெண் சமுதாயத்தை காயப்படுத்தும் வன்முறைகள் - 24
- கணனி மொழிகள் - 26

- தாயின் பிரிவு - 29
- நட்பின் பெருமை - 30
- எனது நண்பன் - 32
- கவிதைத் தமிழ் - 33
- புத்திசாலி (சிறுகதை) - 34
- வரும் படிப்பு - 35
- விடியலை நோக்கி (சிறுகதை) - 36
- கண்டறியாத சுடுதண்ணீர்ப் போத்தல் - 38
- தேடல்கள் ஓய்வதில்லை - 39
- பெண் சிங்கம் ஜான்சி ராணி லட்சுமிபாய் - 40
- இந்து அறிவியல் - 44
- சேவையின் சின்னம் அன்னை திரேசா - 48
- உடலுக்கு கேடு விளைவிக்கும் புகைப்பிடிக்கும் பழக்கம் - 50
- நுண்கலை வரிசையில் ஆடல்கலையின் முக்கியத்துவம் - 52
- இலங்கையின் நாட்டியக் கலை வளர்ச்சியும் அதன் பாங்கும் - 54
- உருவ வழிபாட்டின் சிறப்பு - 57
- இலட்சியம் - 58
- இது தானா மனிதப் பண்பு - 59
- தாய் மனசு - 60
- பல்கலைக்கழக அனுமதியும் Z புள்ளியும் - 62
- சிந்தனைத் துளிகள் - 64
- பொது அறிவு - 65
- மனித உணர்வுகள் ஒன்று பட்டால் - 66
- பெற்ற கடன் நான்கு லட்சம் - 67
- ஊமை இராகங்கள் - 69
- எனது எதிர் கால இலட்சியம் - 71
- துன்பமாலையில் அவலச்சுவையின் சிகரம் - 73
- திருக்குறள் கூறும் நட்பு - 75
- மாணவர்களின் ஒழுங்குணர்வும் பாடசாலையின் தூர நோக்கும் - 78

☞ முதலாம் குடியரசு யாப்பில் சட்ட சபையான தேசிய அரசுப் பேரவை - 83
☞ குறுந்தகை காட்டும் வாழ்வியல் கோலங்கள் - 86
☞ Transportation - 90
☞ Peace - 91
☞ The Sinharajah Forest - 92
☞ My Fauorite Game - 93
☞ Red Fort - 94
☞ News Pepars - 95
☞ The Supramanijam Park - 96





## அச்சுவேலி உலவிற்குளம்
## சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு
# சிவஸ்ரீ கு. வை. விருத்தகிரீசக் குருக்கள்
## அவர்களின் ஆசியுரை

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" மனிதனின் உயர்ச்சிக்கு வழிகோலும் ஓர் செயற்பாடாகும். வேகமாக முன்னேறிவரும் உலகில் இச்செயற்பாடுகள் வேகமாக இடம் பெறுவதல் தவிர்க்கமுடியாததாகும். இவ்வாறான வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அச்சுவேலி மத்திய கல்லூரி "அச்சுமத்தியதீபம்" என்னும் சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடை வதோடு அதற்கு ஆசிச்செய்தி வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெரிந்து கொள்வதல்ல தெரிந்து கொண்டே இருப்பது தான் கல்வி. தெரிந்து கொண்டு இருப்பதை வலுவூட்டுவதாக இருப்பதும் தெரிவித்துக் கொண்டிருப்பதும் தான் பேனா. பேனாமுனை குனியும்போது தான் சமுதாயம் தலைநிமிர்கிறது. ஆலமரம் ஒன்றின் ஆற்றல் முழுமையும் ஆலமரவிதையினுள் அடங்கியிருக்கும் ஆற்றலுக்கு சமம் என்பது போல இந்த சஞ்சிகை மத்திய கல்லூரியின் திறமையை முழுமையாக வெளிப்படுத்துவதாக அமையும் என்பது எனது எண்ணம். இம்முயற்சிகள் மேலும் வளரவும் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் செயற்பாடுகள் மேலும் மேலும் வளர எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

கு. வை. விருத்தகிரீசக்குருக்கள்,<br>
குருக்கள் வளவு,<br>
அச்சுவேலி.



# அருள்பணி திரு. கு. யே.அன்ரனி பாலா அடிகள் பங்குத்தந்தை அவர்களின் ஆசிச்செய்தி

யா/அச்சுவேலி மத்திய கல்லூரியால் வெளியிடப்படும் மூன்றாவது "அச்சு மத்திய தீபம்" என்னும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

உண்மையிலேயே அச்சுநகரின் மத்திய தீபமாக விளங்கும் இக் கல்விக்கூடம் 1892 ஆம் ஆண்டு ஆண்கள் பாடசாலையாகத் தென்னிந்தியத் திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்டு, 1960 இல் இலங்கை அரசு, தனியார் பாடசாலைகளை நாடுமுழுவதிலும் மக்களின் எதிர்ப்புகள் மத்தியில் சுவீகரித்த வேளை யா / அச்சுவேலி மகாவித்தியாலயம் என மாற்றம் பெற்று தற்போது யா / அச்சுவேலி மத்திய கல்லூரி என இயங்கி வருகின்றமை, இக்கல்லூரியின் வளர்ச்சி, மாணவர்களின் திறமை, பெற்றோர் பெரியோரின் ஒத்துழைப்பு என்பவற்றைச் சுட்டி நிற்பதோடு அச்சுவேலி நகருக்கும் பெருமை சேர்க்கின்றது.

கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட "அச்சுமத்தியதீபம்" சஞ்சிகைகள் இக்கல்லூரியின் சேவைபற்றிப் பறை சாற்றுகின்றன. எனவே எதிர்கால வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அருட்பணி கு. யேசுதாஸ் அன்ரனி பாலா,<br>
பங்குத்தந்தை,<br>
புனித சூசையப்பர் ஆலயம்,<br>
அச்சுவேலி.



யாழ் /அச்சுவேலி தென்னிந்திய திருச்சபை

# அருட்பணி I. S. ஆனல்ட் அவர்களின் ஆசியுரை

இந்துவின் நித்திலத்தில் இறங்கிய ஆங்கிலேயர் சிந்து போல் மக்கள் நாவில் கல்வியை நிலைக்கச் செய்த செயற்றிறமைக்கு யதார்த்த சின்னங்களாக மிளிர்வன அச்சுவேலி மத்திய கல்லூரி போன்ற பழம் பெருமைமிக்க வித்தியாலங்களாகும். 120 வருடங்களாக ஞானச் சுடர் பரம்பும் இச் செம்மைசால் வித்தியாலயம் தன் இயல்பூக்கங்களின் அறுவடையாக இதயங்கள் மலர்வது போல் மலர் ஒன்று எங்கரங்களில் தவழ்வது பெருமைக்குரியதே.

அரிது என்ற ஒரு பதத்தை ஒளவை பயன்படுத்த முனைந்த போது "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்றார்" அதன் ஈற்றடிகளிலே "ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது" என்றார். இந்த ஒப்பரிய அறை கூவலுக்கு நீள் கரம் நீட்டிய மிஷனரிமார் தந்த அவையத்து முந்தியிருக்கும் அச்சுவேலி மெல்லியலாள் பூத்துக் குலுங்கும் பேரழகு கண்டு பெருமைப்பட வேண்டியது. ஒன்றேயாம். "வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய துயர்வு" என்ற வள்ளுவன் வாக்குக்கமைய உள்ளத்துடிப்பும் ஊக்கத்திறனும் உயரிய சிந்தனை வளமும் கொண்டு மாணவ செல்வங்களை தேசமன்னராக்கும் தேசுற்ற ஆசிரிய குழாத்தை இச்சந்தர்ப்பத்தில் மெச்சுகிறேன்.

இக்கல்லூரி கல்வியில் வளர்ச்சிப் பாதையில் செல்வதை எண்ணி மகிழ்வடைகிறேன். பல்வேறு திறமைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் இந்த சஞ்சிகை அமைந்திருக்கின்றது. இப்பணி மேன்மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறேன். தொடர்ந்து இந்தக் கல்லூரி வீறு நடை போட்டு முன் நோக்கிச் செல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருளாட்சி இக் கல்லூரியில் ஒளிர்ந்து ஓங்குவதாக.

இறைபணியில்

அருட்பணி I. S. ஆனல்ட்
தென்னிந்திய திருச்சபை,
அச்சுவேலி.



# மாகாணக்கல்விப் பணிப்பாளர் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

அச்சுவேலி மத்திய கல்லூரியினால் வெளியிடப்படும் "அச்சு மத்திய தீபம்" மலருக்கு வாழ்த்துவரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வருடாந்தம் மலரும் அச்சு மத்திய தீபத்தின் மூன்றாவது சுடர் இவ்வாண்டு பிரகாசிப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

முப்பரிமாண ஊடகங்களின் வேகமான வளர்ச்சியினால் நம்மிடையேயான வாசிப்பு ஆர்வம் அருகி வருவது யாவரும் அறிந்த வொன்றாகும். ஆயினும் மாணவர்களின் எழுத்தார்வத்தையும், கற்பனா சத்தியையும் வளர்ப்பதற்கு மலர் வெளியீடு உதவுகிறது. இவ்வுயரிய இலக்கை நிறைவேற்றும் வகையில் பாடசாலைகள் தோறும் வருடாந்தம் பல மலர்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வகையில் அச்சுவேலி மத்திய கல்லூரியினால் வெளியிடப்படும் "அச்சு மத்திய தீபம்" மாணவர்களதும், கல்வியாளர்களதும் ஆக்கங்களை உள்வாங்கி வெளியிடப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

"அச்சு மத்திய தீபம்" சுடர்விட்டுப் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்.

திரு.வ. செல்வராசா,<br>
மாகாணக்கல்விப்பணிப்பாளர்,<br>
யாழ்ப்பாணம்.



# வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அச்சுவேலி நகரின் மத்தியில் அமைந்திருந்து இப்பிரதேச மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் யா/அச்சுவேலி மத்திய கல்லூரியினது ஆசிரியர்கள், மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் அச்சு மத்திய தீபம் இதழிற்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

"அச்சுமத்தியதீபம்" இவ் இதழானது இவ்வருடம் தனது 3 வது இதழை வெளியிட்டுள்ளது. இப்பாடசாலையினது ஆசிரியர்கள், மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இவ் இதழானது ஆசிரியர்கள், மாணவர்களது திறன்களை வளர்ப்பதில் பெரும் பங்காற்றும் என்பது திண்ணமாகும்.

ஆசிரியர்கள், மாணவர்களது கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றைத் தாங்கி வெளிவந்துள்ள இந்த இதழானது மாணவர்களது வாசிப்புப் பழக்கத்தினை வளர்த்து அவர்களது அறிவை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. இவ் இதழ் தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றேன்.

திரு. செ. உதயகுமார்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



## கோட்டக்கல்விப்பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

## தீப ஒளி பிரகாசிக்கட்டும்

அச்சுவேலிக் கிராமத்துக்கு அறிவொளி ஊட்டிக்கொண்டிருக்கும் அச்சுவேலி மத்திய கல்லூரியின் கல்லூரிச் சஞ்சிகையான "அச்சுமத்திய தீபம்" சுடர் மூன்றிற்கு வாழ்த்துச் செய்தி வாழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். அச்சுவேலி கிராமத்திற்குப் பெருமை சேர்க்கும் ஒரு கல்விக் கூடமாக விளங்கும் அச்சுவேலி மத்திய கல்லூரி ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பித்து அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, அச்சுவேலி மகா வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்று வளர்ந்து தற்போது ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப் பட்டிருப்பது அதன் வளர்ச்சிக் கட்டத்தின் ஒரு மைல் கல்லாகும். இதன் மூலம் கணித விஞ்ஞான பாடங்களில் உயர்கல்வியை வழங்கும் ஒரு இடைநிலைப்பாடசாலையாக வளர்ச்சி பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்வடைகிறேன். இக்கல்லூரியில் கல்வி பயின்று உயர்பதவிகளை அலங்கரிக்கும் பலர் கல்லூரி அன்னையின் வளர்ச்சி கண்டு பூரிப்படைவர் என்பதில் சந்தேகம் இல்லை. கல்லூரியின் தரத்தை மேம்படுத்துவதில் தற்போதைய அதிபர் திரு. வே. அரசகேசரி அவர்கள் காட்டிவரும் அர்ப்பணிப்பும், ஆர்வமும், பாராட்டத்தக்கது.

கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிவரும் ஆசிரியர்களின் சேவையும் பாராட்டுதற்குரியது. மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் என அனைத்துச் செயற்பாடுகளிலும் அவர் காட்டும் அர்ப்பணிப்பும் ஆர்வமும் பாராட்டுதற்குரியது.

நல்லதொரு எதிர்காலத்தைக் கொண்டிருக்கும் இக்கல்லூரி இப்பிரதேசத்தில் பெருமை மிக்க கல்லூரியாக மிளிரும் என்பதில் சந்தேகம் இல்லை.

கல்லூரி கலாசாரத்தின் ஒரு சின்னமாக விளங்கும் இச் சஞ்சிகை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் ஒரு களமாக அமைந்துள்ளது. இக்கல்லூரி மேன்மேலும் வளர வேண்டும். சஞ்சிகை தொடர்ந்து வளரவேண்டும் என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடை கிறேன்.

**திரு. வே. பாலசுப்பிரமணியம்**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்**
**கோப்பாய்.**



# அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியால் வருடம் தோறும் வெளியிடப்படும் அச்சு மத்திய தீபத்தின் மூன்றாவது சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச் சியடைகின்றேன். எமது கல்லூரியில் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் இச்சஞ்சிகையில் வெளிவருவதன் மூலம் அவர்களது திறமைகளை வெளிக்கொணர்வதற்கு ஒரு களமாகவும் அமைகின்றது.

மாணவர்கள் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு நூற் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது, கல்வி இணைப்பாடவிதானச் செயற்பாடு களிலும் தங்களது ஆற்றலை வெளிப்படுத்த இச்சஞ்சிகை ஒரு ஊடகமாக அமைகின்றது.

மாணவப் பருவத்தில் பாடசாலைச்சஞ்சிகைகளில் தமது ஆக்கங்களை வெளியிட்ட மாணவர்களிற் பலர் பிற்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாகவும் மிளிர்ந்துள்ளமையை நான் அறிவேன். இவ் வகையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள் எனப்பல துறைகளில் மாணவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்தவும் வளர்த்துக் கொள்ளவும் சஞ்சிகைகள் களம் அமைத்துக் கொடுக்கின்றன. பரந்துபட்ட வாசிப்புக்கான சாதனங்களாகவும் இவை அமைகின்றன.

எமது கல்லூரியின் அச்சுமத்தியதீபம் சஞ்சிகையை வெளிக் கொணர்வதற்கு ஒத்துழைத்த ஆசிரியர்கள், மாணவர்களிற்கு எனது நன்றியை தெரிவிப்பதோடு இச்சஞ்சிகையின் தரம் நோக்கி மனம் மகிழ்வதுடன் எதிர் காலத்திலும் இப்பணி தொடர்ந்தும் சிறப்பான சஞ்சிகையாக வெளிவர வேண்டும் எனவும் நல்லாசிகள் கூறி வாழ்த்துகிறேன்.

திரு. வே. அரசகேசரி,
அதிபர்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.



# பிரதி அதிபர் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

"அச்சுமத்தியதீபம்" இதழ் - 3 இற்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வருடந்தோறும் இச் சஞ்சிகையைச் சிறப்பாக வெளியிட வேண்டும் என்ற எமது நோக்கு நிறைவேறி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இதழ் 3 வெளியிடுவதற்கு மலர் வெளியீட்டுக் குழுவின் செயற்பாடு அளப்பரியது. மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி இச்சஞ்சிகை வெளிவருவது காத்திரமானது. இச் சஞ்சிகை ஆக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தோர் பலர். தொடர்ந்தும் வருடாவருடம் இச் சஞ்சிகையின் இதழ்கள் மலர மனதார வாழ்த்துகிறேன்.

திருமதி. யோ. சந்திரகுமார்
பிரதி அதிபர்
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.



# *Message From Retired Principal*

It is with a sense of exceptional pride I send you my felicitation on the release of your annual College Miscellany.

I commend and congratulate the editors for their untiring effort the school administration for their keenness in promoting the publication and to the children for their worth contributions.

The College Miscellany undoubtedly keeps everybody informed of its numerous activities and achievements of the school in fulfilling the needs of educational developments and extra curricular activities.

Through your publication it will be fascinating to see the Steady growth & accomplishment of the school - Atchuvely Central College.

I firmly believe that the school will grow even further to greater level in the years to come and support our community immensely.

*Wish you all well.*

Mrs. B.Kanapathippillai,
Emeritus Principal



# இளைப்பாறிய அதிபர்
# திருமதி. ச. கனகராசா அவர்களின்
# வாழ்த்துச்செய்தி

"என்றும் ஒளிரும் தீபம்" என்ற மகுட வாக்கியத்தைக் கொண்ட அச்சுவேலி மத்திய கல்லூரி 1892 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 120 வருடங்களாக தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றிப் பெருமைசேர்த்து வருகிறது. இக்கல்லூரியின் முதல் மாணவராக விளங்கிய சுவாமி ஞானப்பிரகாசர் காலத்தில் கிறிஸ்தவக்கல்லூரியாக மிசனறியால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி 1961 ல் தேசியமயமாக்கப்பட்ட போது அச்சுவேலி மகாவித்தியாலயம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இக்கல்லூரியின் பழைய மாணவியாகிய நான் 1975 ல் உதவி ஆசிரியராகக் கடமை ஏற்றேன். பின்னர் 1998 - 2004 ம் ஆண்டுவரை அதிபராகக்கடமையாற்றிய பொழுது 1999 ம் ஆண்டு நூற்றாண்டு விழா மலர் வெளியீடு செய்யும் அரியவாய்ப்புக்கிடைத்தது கனடா வாழ் பழைய மாணவர்சங்கத்தின் நிதியுதவியுடன் 2001ம் ஆண்டு கல்லூரியுடன் இணைந்த விளையாட்டு மைதானம் கொள்வனவு செய்யப்பட்டது. 2002 ம் ஆண்டு அச்சுவேலி மகாவித்தியாலயம் மத்திய கல்லூரியாக உயர்ச்சி அடைந்தது போர்க்காலச் சூழலில் கணணிக்கூடம் , புதிய மேல்மாடிக் கட்டிடம் என்பன அமைக்கப்பட்டமை கல்லூரியின் வளர்ச்சிப் போக்கையே சுட்டிக்காட்டுகிறது.

இன்று வெளியாகும் "அச்சு மத்திய தீபம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பழைய மாணவியாகிய நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மிக விரைவாக எமது கல்லூரி ஒரு தேசிய பாடசாலையாக வளரவேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

**திருமதி. சகுந்தலாதேவி கனகராசா,**
**இளைப்பாறிய அதிபர்.**



# பழைய மாணவர் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி.

ஆண்டு தோறும் ஒளி வீசும் அச்சுமத்திய தீபத்தின் 3 வது சுடரானது வெளி வருவதையிட்ட பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அச்சுவேலி மத்திய கல்லூரியானது மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் விழுதூன்றி நிழல்பரப்பி வருகின்றது. அத்துடன் நின்று விடாது மாணவர்களின் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும், அவர்களின் படைப்பாற்றல் திறமைகளான கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றையும் வெளிப்படுத்தும் விதமாக ஆக்கங்களை தாங்கி இச்சுடர் ஒளி வீசுகின்றது.

இவ்வாறான மாணவர்களின் கல்வி சாதனைகள், இணைப்பாட விதான சாதனைகள் வெளிப்படுத்துவதன் மூலமாக மாணவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக அமைவதோடு வரலாற்றுப் பதிவேடாகவும் பேணப்பட வேண்டிய இதழாக அமைவது சிறப்பாகும்.

இச் சுடர் மேலும் பல்வேறு சிறப்புக்களை பெற்று தொடர்ச்சியாக வெளிவர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

திரு. ச.முகுந்தன்
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.



# A Message

It is indeed a great pleasure to send this message to a historic souvenir being published to mark the completion of its one hundred and twenty years.

An Educational Institution which has withstood the trials and tributions of a hundred year period and imparted an excellent Education to thousands of the students deserves commendation by one and all. I am sure every body who had ties with the great school agree that school owes a lot to the founders.

The school which is one of the oldest educational institutions in the country, has over the past century made and unrivalled contribution towards the educational development of the children of this area. Its products occupy eminent positions in all walks of life in this country and abroad today.

The old students whatever their affainments, will always have an abundance of good will, admiration and respect for their Alma Mater and I join them pray that the grace of God may abide with all those called upon to serve this college, give them strength and guide them in their work.

*I Wish the school all success.*

U. S. A. Ratnam
(Old Student)
Management Ass. Officer
Zonal Education office,



# இதழாசிரியரின்

# பேனாவில் இருந்து

நூற்றியிருபது ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் மூன்றாவது இதழாக "அச்சு மத்திய தீபம்" என்ற சஞ்சிகை இவ்வருடமும் மலர்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வளர்ச்சி என்பது மாறிவரும் காலவோட்டத்திற்கு ஏற்றால் போல அமைவது காலத்தின் கட்டாயம் ஆகும். அந்த வகையில் ஒரு பாடசாலையின் வளர்ச்சியை நிர்ணயிப்பது சஞ்சிகையின் பங்கு அளப்பரியது. அதுமட்டும் அல்லாது மாணவர்களது வகுப்பறை கற்றல் செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்கும் சிந்தனைத்திறன் வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் சஞ்சிகைகள் வெளியீடு மிகவும் துணை புரிகின்றது. எனவே எமது பாடசாலையின் வளர்ச்சி நிலைக்கும் மாணவர்களின் அறிவு நிலை வெளிப்பாட்டிற்கும் களமாக இச் சஞ்சிகையின் வெளியீடு அமையும் என்பது ஐயமில்லை.

மேலும் மத்திய தீபத்தை ஒளிரச்செய்வதற்கு உதவி புரிந்த நெஞ்சங்கள் அனைத்திற்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவிப் பதுடன் அச்சு மத்திய தீபம் தொடர்ந்தும் ஒளி வீசி வெளி வருவதற்கு அனைவரது ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

இதழாசிரியர்,

செல்வி. யோ. செல்லமுத்து,

# OUR PRINCIPAL



**Mr. V. Arasakesari - BSc.Dip. in. Ed., MSc. (Sc. Ed.)**

# எங்கள் அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு. கே. சின்னத்தம்பி | 1892 - 1909 |
| 02. | திரு. கே. செல்லையா | 1910 - 1915 |
| 03. | திரு. எஸ் சின்னத்தம்பி | 1916 - 1917 |
| 04. | திரு. வீ. ஆசிர்வாதம் | 1918 - 1919 |
| 05. | திரு. ஏ. கே. குருவிலா | 1920 - 1941 |
| 06. | திரு. எஸ். வீரசிங்கம் | 1942 - 1943 |
| 07. | திரு. எஸ். பி. இராசரத்தினம் | 1944 - 1950 |
| 08. | திரு. ஆர். சிங்கரத்தினம் | 1951 - 1971 |
| 09. | திரு. சீ. குணபாலசிங்கம் | 1972 - 1973 |
| 10. | திரு. ஏ. இராமசாமி | 1974 - 1975 |
| 11. | திரு. எம். பத்மநாதன் | 1976 - 1978 |
| 12. | திரு. எஸ். துரைசிங்கம் | 1979 - 1986 |
| 13. | திரு. க. சிவசுப்பிரமணியம் | 1987 - 1990 |
| 14. | திரு. சி. செல்லையா | 1991 - 1993 |
| 15. | திரு. க. இராசதுரை | 1994 - 1993 |
| 16. | திருமதி. பு. கணபதிப்பிள்ளை | 1996 - 1997 |
| 17. | திருமதி. ச. கனகராசா | 1998 - 2004 |
| 18. | திரு. வே. பாலசுப்பிரமணியம் | 2004 - 2010 |
| 19. | திரு. வே. அரசகேசரி | 2011 - |

# Teachers Lest

| Name of Teachers | | Grade |
|---|---|---|
| 01. | Mr. V. Arasakesari | SLPS - 1 |
| 02 | Mrs. Y. Santhirakumar | SLTS - 1 |
| 03. | Miss. Y. Sellamuthu | SLTS - 1 |
| 04. | Mrs. T. Sivapalaligam | SLTS - 2-1 |
| 05. | Mrs. R. Yoganathan | SLTS - 2-1 |
| 06. | Mr. V. Navaloganathan | SLTS - 2-1 |
| 07. | Mr. T. Rajaranjan | SLTS - 2 - 1 |
| 08. | Mrs. A. Saravanapavan | SLTS - 3-1 |
| 09. | Mrs. S. Ainkaran | SLTS - 2-1 |
| 10. | Mrs. P. Ratnakanthan | SLTS - 3-1 |
| 11. | Mr. R. Ravi | SLTS - 2-11 |
| 12. | Mrs. S. Selvaratnam | SLTS - 2-11 |
| 13. | Mr. V. Vijayakumar | SLTS - 2 - 11 |
| 14. | Mrs. P. Balakrishnan | SLTS - 2 - 11 |
| 15. | Mrs. P. Gunakaran | SLTS - 2 - 11 |
| 16. | Mr. S. Sasitharan | SLTS - 3 - 1 |
| 17. | Miss.S. Bavani | SLTS - 2-11 |
| 18. | Mrs. P. Jegatheesvaran | SLTS - 2 - 11 |
| 19. | Mrs. P. Rajasegar | SLTS - 2 - 11 |
| 20. | Mrs. K. Nanthakumar | SLTS - 3 - 1 |
| 21. | Mrs. V. Mukunthan | SLTS - 3 - 1 |
| 22. | Mrs.K. Santhirakumar | SLTS - 2 - 11 |
| 23. | Mrs. R. Jegatheesvaran | SLTS - 2 - 11 |
| 24. | Mr. S. Vimalaraja | SLTS - 2 - 11 |
| 25. | Mr. S. Panchanathan | SLTS - 1 |

| | | |
|---|---|---|
| 26. | Mr. T. Murukaija | SLTS - 1-1 |
| 27. | Miss. S. Kosala | SLTS - 3-1 |
| 28. | Miss. N. Sailaja | SLTS - 2 - 11 |
| 29. | Mr. S. Pirakasan | SLTS - 2 - 11 |
| 30. | Miss. M. Theyvarajah | SLTS - 3 - 1 |
| 31. | Miss. Y. Uthayakumar | SLTS - 2 - 11 |
| 32. | Miss. K. Kajatheepan | SLTS - 3 - 1 |
| 33. | Mr. S. Kesavan | SLTS - 3 - 1 |
| 34. | Mrs. S. Baskaran | SLTS - 3 - 1 |
| 35. | Mrs. P. Nakuleswaran | SLTS - 3 - 1 |
| 36. | Miss. T. Annalingam | SLTS - 3 - 1 |
| 37. | Mr. V. Akilan | SLTS - 3 - 1 |
| 38. | Mr. P. Elanko | SLTS - 2 - 11 |
| 39. | Miss. S. Sivarasa | SLTS - 2 - 11 |
| 40. | Mr. V. Ainkaran | SLTS - 3 - 1 |
| 41. | Mrs. V. Muththulingam | SLTS - 2 - 11 |
| 42. | Mrs. K. Kanagalingam | SLTS - 2 - 11 |
| 43. | Miss. U. Thisothinni | College |
| 44. | Miss. Y. Vaisravi | College |
| 45. | Mr. P. Suthes | College |

# ஆசிரிய குழாம்

## இருப்பவர்கள் இடமிருந்து வலம்

திருமதி. வே. முகுந்தன், திருமதி. பு. பாலகிருஸ்ணன்,
திரு. தி. முருகையா, திரு. வீ. விஜயகுமார், திரு. சி. பஞ்சநாதன்,
திரு. வ. நவலோகநாதன் (பகுதித்தலைவர்),
திரு. வே. அரசகேசரி (அதிபர்),
திருமதி. யோ. சந்திரகுமார் (பிரதி அதிபர்),
செல்வி. யோ. செல்லமுத்து (பகுதித்தலைவர்),
திருமதி. சு. செல்வரட்ணம் (பகுதித்தலைவர்),
திருமதி. பி. ஜெயகதீஸ்வரன், திருமதி. அ. சரவணபவன்,
திருமதி. த. சிவபாலலிங்கம், செல்வி. ப. சின்னையா,

## மத்தியில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்

திருமதி. றோ. யோகநாதன், திருமதி. பு. இராஜசேகர்,
திருமதி. ப. நகுலேஸ்வரன், திருமதி. க. கஜதீபன்,
திருமதி. சி. ஐங்கரன், செல்வி. தி. உதயகுமார்,
திருமதி. பி. இரட்ணகாந்தன், திருமதி. க. நந்தகுமார்,
செல்வி. வை. யோகராஜன், திருமதி. இ. ஜெகதீஸ்வரன்,
செல்வி. மி. தேவராஜா, திருமதி. ர. ரவி,
செல்வி. சை. நடேசலிங்கம், திருமதி. யோ. உதயகுமார்,
செல்வி. கோ. சின்னையா, திருமதி. ப. பாஸ்கரன்,
செல்வி. த. அன்னலிங்கம்,

## நிற்பவர்கள் பின்வரிசை

செல்வி. சி. சிவராஜா, திருமதி. மு. முத்துலிங்கம்,
திருமதி. கோ. கனகலிங்கம், திரு. சி. பிரகாஷன்,
திரு. வ. அகிலன், திரு. சி. விமலராஜா, திரு. து. ராஜரஞ்சன்,
திரு. செ. கேசவன், திரு. S. மணிதீபன், திரு. ச. சசிதரன்,
திரு. பா. குணாகரன்,

# ஆசிரியர் குழாம்





# நீரின்றி அமையாது உலகு

திருமதி. க. நந்தகுமார்,
ஆசிரியர்,
யா / அச்சுவேலி மத்திய கல்லூரி.

உலகிலுள்ள எல்லா வளங்களுக்கும் மூலவளமாக அமைவதும் உயிருள்ள அனைத்து ஜீவன்களினது இயக்கத்திற்கு ஆதாரமாக அமைவதும் நீராகும். நீரே உயிர்கள் அனைத்திற்கும் ஜீவாதாரமாகும். உலகின் முதலாவது உயிரியின் தோற்றம் நீரிலேயே நிகழ்ந்துள்ளது. அங்கிகளின் பிறப்புக்கு முந்திய பருவமும் நீருடகத்தினாலேயே சூழப்பட்டுள்ளது. நீரில்லை என்றால் இவ்வுலகில் உயிரினங்களின் நிலவுகையே இருக்க மாட்டாது.

உலக நீர்ப்பரப்பில் 97.5% உப்பு நீராகவும் 2.5% நன்னீராகவும் உள்ளது. நன்னீர்ப் பரப்பின் 60% துவப் பகுதிகளிலும் 30% நிலக்கீழ் நீராகவும் 3% ஏரிகளாகவும் நதிகளாகவும் எஞ்சிய பகுதி ஈரலிப்பான தரைப் பகுதிகளாகவும் உள்ளன. உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது நீரை அதிகளவில் பயன்படுத்தும் துறை விவசாயமாகும். விவசாயத்துறை 85 சதவீதத்தையும் கைத்தொழில்துறை 10 சதவீதத்தையும் பயன்படுத்துவதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. எஞ்சிய 5 சதவீதமே அன்றாட வீட்டுப் பாவனைக்குரியது.

மனித சமுதாயத்திற்கு நீரின் பயன் அளப்பரியது. பிறப்பிலும் வாழ்விலும் இறப்பிலும் கூட இணைபிரியாத இன்றியமையாத சாதனமாக விளங்குவது தண்ணீர். நீரின் மகத்துவத்தை மதங்களும் மகிமைப்படுத்து கின்றன. நீர்வளத்தின் முக்கியத்துவம் எல்லாக்காலத்திலும் உணரப்பட்டு வந்துள்ளது. உலக வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் போது புகழ் பெற்ற உலக நாகரிகங்கள் எல்லாம் நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்டே தோன்றியுள்ளமை புலனாகும். இதற்கு உதாரணமாக நைல் நதி, சிந்து நதி, யூப்பிரடீஸ், டைகிறீஸ் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ள நீரைப் பெறுவதில் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை தற்போது தோன்றியுள்ளது.

பூமியின் ¾ பகுதி நீரினைக் கொண்டிருந்தபோதிலும் உலக சனத்தொகையின் ஒவ்வொரு நான்கு பேரில் மூவர் அருந்துவதற்கு தூய நீரின்றி அவதிப்படுகின்றனர். முழு உலகையும் நோக்கும் போது பாதுகாப்பான நீரின்றி 8 செக்கன்களுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நீர் தொடர்பான நோய்களால் இறக்கும் பெரியவர்களின் எண்ணிக்கையும் வருடந்தோறும் அதிகரித்துச் செல்கிறது. உலகின் வறிய நாடுகளில் பாதுகாப்பான நீரினைப் பெறுவதில் தொடரும் இடர்களே அப்பகுதியில் உடல்

நலக்கேடுகளின் அதிகரிப்புக்கு காரணமாகின்றது. சனத்தொகைப் பெருக்க வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு வேகமாக வளர்ந்து வரும் நகராக்கம் மற்றும் நீர் மாசடைதல் என்பன சுத்தமான நீரைப் பெறுவதில் பாரிய சிக்கல்களை உருவாக்கியுள்ளன.

இலங்கை போதிய நீர்வளம் கொண்ட நாடு போலத்தோன்றினாலும் பருவகாலத்திற் கேற்பவும் பிரதேச வேறுபாட்டிற்கேற்பவும் நீரினைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சவால்கள் உள்ளதென்பதை மறுக்க முடியாது. எமது நாட்டின் 25 மாவட்டங்களில் 14 மாவட்டங்களிலுள்ள மொத்த சனத்தொகையின் 33 சதவீதமானவர்களுக்கு தூய குடிநீர் கிடைப்பதில்லை குறிப்பாக நிலத்தடி நீரை நம்பியிருக்கும் யாழ் குடாநாட்டில் சவர்நீராதல் இரசாயன மாசாக்கம் போன்றன தற்போது அதிகரித்து வரும் பிரச்சினைகளாகும். ஆழ்குழாய்க்கிணறுகளிலிருந்து நீரை அதிகளவில் பெறுதல், விவசாய இரசாயனப் பொருட்களின் கட்டுப்பாடற்ற பயன்பாடு என்பன இதற்கான பிரதான காரணங்களாகும். நீரோட்டத்தினை மாசுபடுத்தாத விதத்திலும் சுற்றாடல் இயல்புகளை சீர்குலைக்காத வகையிலும் நீரைப் பயன்படுத்தல் தொடர்பாக விவசாயிகள் போதிய அளவு வழிநடத்தப் படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

புவியின் வெப்பநிலை அதிகரிப்பு, மழை வீழ்ச்சி குறைதல் போன்ற பல்வேறு காரணங்களால் நிலத்தடி நீரின் இருப்பும் நீர் நிலைகளிலுள்ள நீரிருப்பும் குறைந்து வருகிறது. நீரின்மையாலும் நீரைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு நீர் மாசடைவதாலும் உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் பாகிஸ்தானின் சில பகுதிகள் சீனா மற்றும் பல ஆபிரிக்க நாடுகளில் இத்தகைய நிலையைக் காணலாம்.

பயன்படுத்தக் கூடிய நீரின் அளவு குறைவடையும் அதேவேளை நீருக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் இன்று நீர் போட்டிப் பொருளாகவும் சந்தைப் பொருளாகவும் மாறிவிட்டது. தூய நீரின் வளம் குறைவடைதலை கட்டுப்படுத்தாது விடின் விவசாயம் மற்றும் மனிதனின் தனிப்பட்ட பாவனைக்குரிய துயநீருக்கு பெரும் பற்றாக்குறை ஏற்படும். இதனால் மனித இனம் தண்ணீருக்காகப் போராடும் நிலை தோன்றும். எனவே நீர் மாசடைவதற்குக் காரணமான நடவடிக்கைகளை தவிர்த்தல், வனவளத்தைப் பாதுகாத்தல் நீரின் பாவனையை மட்டுப்படுத்தி விரயமாவதைத் தடுத்தல் போன்றவற்றில் அனைவரும் பொறுப்புணவுடன் செயற்படுவது அவசியம். "நீரின்றி அமையாது உலகம் யார் யார்க்கும் வானின்றி அமையாது ஒழுக்கு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை மனதிலிருத்தி நாம் அனைவரும் செயற்படுவோமாயின் விலைமதிக்க முடியாத நீர் வளத்தைக் காக்க முடியும்.

**எவன் ஒருவன் தன்னுடைய கடமையை உணர்ந்து**
**செயலாற்ற நினைக்கின்றானோ அவன் தான்**
**உண்மையான வாழ்வு வாழ்கிறான்.**



# அன்னை

செல்வன். கு.உசாந்தன்
தரம் 7C

தொட்டிலில் தாலாட்டி உன்னை
தூக்கி வளர்த்தாள் உன் அன்னை
பட்டினி போட்டு தன்வயிற்றை
பாலூட்டி வளர்த்தாள் உன்னை
கெட்டியாய் வளர்த்திட உன்னை
புட்டிப்பால் ஊட்டினாள் முன்னே
முத்தங்கள் கொடுத்தாள் உனக்கு
மதி நுட்பமும் ஊட்டினாள் உனக்கு
கஷ்டங்கள் வந்திட்ட போது
கணத்தினிலே மறப்பாள்மாது
புஷ்பங்கள் போலவே உன்னை
புது ஆடைகள் உடுத்தியே மகிழ்வாள்
இஷ்டமாய் வாழ உன்னை
இகத்தினில் வளர்த்திட்டாள் அன்னை

உன் வயிறு நிரம்பாதபோது
தன்வயிறு மறந்தேபோவாள்
உன்னையே நினைத்து உருகிப்போவாள்
தன்னையே வருத்தி வற்றியே போவாள்
கண்களைப் போலவே உன்னை
காத்தும் வளர்த்திட்டாள் உன் அன்னை
அண்டங்கள் அத்தனை சேர்த்தும்
கொடுத்தாலும் ஆகுமா ஈடாய் அதற்கு.



# எமது ஆலயங்களும் இசை வழிபாடும்

செல்வி. த. உருத்திகா,
A/1 2012,
கலைப்பிரிவு.

இந்து ஆலயங்கள் வளர்த்தெடுத்த நுண்கலைகளில் இசைக் கலையும் ஒன்று. இறைவனே இசை வடிவானவன் என்பதே இந்துமத நம்பிக்கை. இசையானது செவிகளிற்கு இன்பத்தை தருவதோடு ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றைத் தரும் கலையாக விளங்குகின்றது. இவ்வாறு விளங்கும் இசைக்கலையானது இந்துப்பண்பாட்டு வளர்ச்சியிலே உன்னத நிலை அடைகிறது.

சிந்துவெளி காலப்பகுதியின் ஊடாக இந்து ஆலயங்களில் இசையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி மிகவும் நன்றாக அறிந்து கொள்ளமுடியும். அதாவது சிந்துவெளிப் பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற துளையிடப்பட்ட வாசிக்கும் நிலையில் உள்ள ஊதுகுழல், மத்தளம் போன்ற இசைக்கருவிகளும், வேறுசில இலட்சனைகளிலே சிலர் இசைக்கருவிகளை இசைக்க சிலர் அதற்கேற்ப நடனமாடுவது போன்று பொறிக்கப்பட்டிருந்தமையும் கி.மு 3750 2750 வரையான காலத்தில் இசைக்கலை இந்து ஆலயங்களில் வளர்ச்சி நிலையை காட்டிநிற்கிறது. வேத இலக்கியங்களில் சாமவேதம் இசைவடிவிலே உள்ளது. இவ்வேதமே பிற்காலத்தில் இசைவழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்தது. மற்றும் இதிகாச புராணக் கதைகளிலே இறைவன் இசைவடிவானவர். இறைவனை இசையினால் இசைவாக்க முடியும் எனும் கருத்துக்களும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அது மட்டுமல்லாது, புராணக் கதைகளின்படி கிருஸ்ண பரமாத்மா அருச்சுனனுக்கு "வேதங்களில் நான் சாமவேதமாக உள்ளேன் எனவும் ஸ்ரீமத் நாராயணன் நாரத முனிவருக்கு "நான் ஸ்ரீ வைகுண்டத்திலும் இல்லை, சூரிய சந்திரமண்டலத்திலும் இல்லை, ஞானிகளது உள்ளங்களிலும் இல்லை ஆனால் பக்தர்கள் எங்கெங்கு கானம் இசைக்கின்றார்களோ அங்கு வீற்றிருப்பேன்" என கூறுவதன் மூலம் இறைவனுக்கும் இசைக்கும் இடையிலான தொடர்பையே அது காட்டுகிறது. மற்றும் இதிகாசங்களிலும் இசைக்கலை சிறப்பித்து கூறப் பட்டுள்ளது. இதற்கு சான்றாக வேதசபையில் இந்திரனிற்கு முன்னால் ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை போன்ற தேவலோக கன்னியர் இசைபாடி ஆடல்கள் ஆடியதாக குறிப்புக்கள் உள்ளன.

மேலும் இராமாயணக் குறிப்பின்படி இராவணன் இறைவழிபாட்டோடு இசைவடிவமானவன். இவன் சாமகானம் இசைப்பதில் வல்லவன். இவன் தனது

பத்துத்தலைகளில் ஒன்றினை ஒடித்து நரம்புகளின் துணை கொண்டு இசை மீட்டி சிவனருள் பெற்றதாக வரலாறு உள்ளது. மற்றும் குப்தர் காலத்தில் கிடைக்கப்பெற்ற நாணயங்களின் அடிப்படையில் அக்காலப்பகுதியின் இசைக்கலை ஆலயங்களில் வளர்ச்சி நிலை பெற்றிருந்தமையினை எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் சங்ககால மக்களது வாழ்வியலோடு இசையானது இணைந் திருந்தது. சங்கநூல்களாகிய பரிபாடல், பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவற்றில் இசைக்கலை பற்றிய கருத்துக்கள் உள்ளன. சங்ககால மக்கள் தத்தம் நிலத்திற்குரிய பண்களையும் இசைக்கருவிகளையும் ஆலயங்களில் இசைத்திருந்தனர். இவ்வகையில் குறிஞ்சிப்பண், முல்லைப்பண், பாலைப்பண், நெய்தல்பண், மருதப்பண் என்ற வகையில் தத்தம் நிலங்களில் சங்கீத மரபைக் கொண்டிருந்தனர்.

மேலும் சங்கமருவிய காலப்பகுதியினை நோக்கும் போது. சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் காரைக்கால்அம்மையாரது பாடல் களிலும், முதல் மூன்று ஆழ்வார்களின் பாசுரங்களிலும் ஆலயங்களில் இசைபற்றிய கருத்துக்கள் கூறப்பட்டிருந்தன.–

பல்லவர்காலப் பகுதியிலும் இசைக்கலையானது சிறப்புநிலை பெற்றிருந்தது. சிறப்பாக நாயன்மார்களது இசைசார்ந்த கருத்துக்கள் காணப்படு கின்றன. “பண்ணும் பதமேழும்....” என்ற தேவார அடியில் சம்பந்தரும் “ஏழிசையாய் இசைப்பயனாய்....” என்று சுந்தரரும் இறைவனையும் இசையினையும் பற்றிக் கூறியுள்ளனர். அதுமட்டுமல்லாது பல்லவர்காலத்தில் காணப்பட்ட மன்னர்கள் ஆலயங்களினூடாக இசைக்கலையினை வளர்ச்சி அடைவதற்கு காலாய் அமைந்தனர். இதற்கு சான்றாக மகேந்திரவர்மன், இராஜசிம்மபல்லவன் போன்ற மன்னர்களை குறிப்பிடலாம்.

மேலும் சோழர்காலம் இசைக்கலை வளர்ச்சி பெற்ற காலமாக கருதப்பட்டது. இக்காலத்தில் இசைக் கருவிகளுடன் கூடிய சிற்பங்கள், இசைமண்டலங்கள், இசைக் கலைஞர்களுக்குரிய நிலபுலன்கள் என்பன ஆலயங்களிற்குரியனவாக காணப்பட்டது. மற்றும் முதலாம் இராஜராஜசோழன் திருமுறைகளை ஆலயங்களில் ஓதும் வழக்கத்தை நடைமுறைப் படுத்தினான்.

மேலும் பிற்காலத்தில் நாயக்கர்களது காலப்பகுதியில் இஸ்லாமியரின் ஆட்சியில் இசைக்கலை நலிவடைந்த போதிலும் அக்காலத்தில் எழுச்சி பெற்ற மடாதீனங்களின் ஊடாக இசைக்கலை மீண்டும் மறுமலர்ச்சி அடைந்தது. நந்தனார் கீர்த்தனை, இராமநாம கீர்த்தனை போன்ற கீர்த்தனைகள் இசைக்கலையில் அறிமுகப்படுத்தப்பட்டன. பிற்காலப் பகுதியில் சங்கீதரத்னாகரம், சங்கீத சுதாகரம்

போன்றன இசை நூல்களாக குறிப்பிடத் தக்கது. விஜயநகரநாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்ட மதுரை அழகர் கோவிலில் இசை எழுப்பும் இசைக்கற்றூண்கள் அமைக்கப்பட்டன. மற்றும் தென்னிந்திய இசைக்கலை கர்நாடக சங்கீதம் எனவும், வட இந்திய இசைக்கலை ஹிந்துஸ்தானி எனவும் அழைக்கப்பட்டது.

மற்றும் அருணகிரிநாதரால் பாடப்பட்ட திருப்புகழ், சந்தலயமுள்ள பாடலாக அமைகிறது. இவருடைய பாடல்கள் ஆலயங்களில் இசைக்கலையின் உச்ச வளர்ச்சியினைக் காட்டுகிறது. தற்காலத்தில் கர்நாடக இசையினை வளர்த்தவர்களில் சங்கீத மும்மூர்த்திகள், மாரிமுத்துபிள்ளை முத்துதாண்டவர், அருணாசல கவிராஜர் போன்றோர் ஆலயங்களில் இசைவளர்ச்சி பெறுவதற்கு பல இசைவடிவங்களை ஆக்கியுள்ளனர். இன்றைய காலத்தில் பாடசாலையில் ஆரம்ப வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரை சங்கீதம் ஒரு பாடமாக புகட்டுவதனூடாக மாணவர்களிடம் இசைபற்றியும் இறைவழிபாடு பற்றியும் சிந்தனைகள் எழுச்சியுற்றுள்ளன. மற்றும் ஆலயங்களிலே பஜனைகள் பிரார்த்தனைகள் நாமசங்கீர்த்தனம், புராணபடனமோதல், பஞ்சபுராணம் பாடுதல், வில்லிசை, இசைக்கருவிகள் என்பன ஆலயவழிபாட்டில் பிரதான இடம் வகித்திருந்தமை இன்று இசைக்கலையானது ஆலயங்களில் பெறும் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்தியாவில் செந்நெறி அரங்காக நாட்டிய சாஸ்திரஅரங்கு காணப்படு கிறது. நாட்டிய சாஸ்திர அரங்கினை "மார்க்க அரங்கு" என அழைப்பார். பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரம் எனும் நூலை ஆக்கியுள்ளார். இது கி.மு 2ம் நூற்றாண்டிற்கும் கி.பி 2ம் நூற்றாண்டிற்கும் இடையில் தோற்றம் பெற்ற நூலாக நாட்டிய சாஸ்திரம் காணப்படுகிறது. "பட்டலோடர்" என்பவர் நாட்டிய சாஸ்திரத்திற்கு உரை எழுதியுள்ளார். இந்தியாவின் வளர்ச்சி பெற்ற அரங்கினை நாட்டிய சாஸ்திரம் எடுத்துக் காட்டுகிறது.

**அறிவால் தேர்ந்தெடுப்பது அடக்கத்தைத்தான்**
**ஒருவன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் நண்பன்**
**மூலம் மட்டுமல்ல அவன் பகைவன் மூலமும் அறியலாம்.**



# நாட்டிய சாஸ்திரம் கூறும் இரசக்கோட்பாடு

செல்வி. எஸ். கோசலா,
ஆசிரியர்,
அச்சுவேலி மத்திய கல்லூரி.

நாட்டிய சாஸ்திர அரங்கின் அழகியல் சிந்தனையாக இரசக்கோட்பாடு அமைகிறது. இரசம் என்ற சொல்லின் பொருள் சுவை என்பதாகும். அரங்கின் சுவை பற்றிக் கூறுவதே இரசக்கோட்பாடு ஆகும். பரதர் கூறும் இரசக் கோட்பாடு ரஜடி நாடகத்தில் வெளிப்படும் கதாசிஸ் கோட்பாட்டுடனும் ஜப்பானிய நோ நாடகத்தின் யூகன் (லுரபநெ) எனும் சிந்தனையுடனும் ஒப்பிடப்படுகிறது. "விவாவ அனுபாப வியாபிச்சாரிபாவ சம்யோகத் ரஸ நிஸ்பத்தி" என பரதர் இரசத்தின் தோற்றம் பற்றிக் கூறுகின்றார். "விவாபம் ¸ அனுபாவம் ¸ வியாபிச்சாரிபாவம் என்பவற்றின் சேர்க்கையினால் இரசம் தோற்றம் பெறுகின்றது என்பதே இதன் கருத்தாகும். "விவாபம் அனுபாவம் வியாபிச்சாரி பாவம் என்பவற்றோடு இரசம் தோற்றம் பெறுவதற்கு அவசியமாக "ஸ்தாயி பாவம்" காணப்பட்டது. ஸ்தாயி எனும் மதத்தினை பரதர் வெளிப்படையாக பயன்படுத்தாத போதிலும் ஸ்தாயி பற்றி நன்கு விளக்கியுள்ளார்.

ஸ்தாயி பாவம் இரசத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. ஸ்தாயி எனும் பதம் அடிப்படையானது, நிலையானது எனும் பொருளைத் தருகின்றது. ஒவ்வொரு மனிதனிடமும் நிலையாக அமைத் திருக்கும் பாவமே ஸ்தாயி பாவம் என்பது பரதரின் கருத்து ஆகும். பிறவிகள் தோறும் ஸ்தாயி பாவம் எடுத்துச் சொல்லப்படுகிறது. என பரதர் மேலும் ஸ்தாயி பாவம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

எண் வகை இரசங்களுள் அடிப்படையாக எண் வகை ஸ்தாயமி காணப்பட்டது. பரதர் சிருங்காரம் அடிப்படையாக இரசத்தினை குறிப்பிடு கின்றார். அதனை சம்யோகம், விம்ரலம்பம் என இரண்டாக வகுக்கின்றார். சம்யோகம் என்பது தலைவனும் தலைவியும் ஒன்றாக இருக்கும் பொழுது தோன்றும் உணர்வு வெளிப்பாடாகும்.

சிருங்காரம் எனும் இரசத்திற்கு துதி ஸ்தாயியாக அமைகிறது ஹாஸ்யம் எனும் நகைச்சுவை ரசம் ஹாஸம் எனும் ஸ்தாயிலிருந்து தோன்றுகிறது. பயனாக எனும் ஸ்தாயிலிருந்து பயம் எனும் இரசம் உருவாகின்றது. வீரம் எனும் இரசம் உருவாக உற்சாகம் எனும்ஸ்தாயி அடிப்படையாக அமைகிறது. ஆச்சரியம் எனும் ஸ்தாயிலிருந்து ரௌத்திரம் எனும் இரசம் தோற்றம் பெறுகின்றது. கருணை எனும் ஸ்தாயிலிருந்து கருணா எனும் சோக இரசம் பிறக்கின்றது.

ஸ்தாயி பாவம் தொழிற்படுவதற்கு விபாவம் தூண்டியாக அமைகிறது. விபாவம் எனும் பதம் உணர்வு வெளிப்பாட்டினை குறித்து நிற்கவில்லை. காரணம் அல்லது நிமித்தம் என விபாவம் பொருள்படுகிறது. அதாவது இரசம் தோன்றுவதற்கு காரணமாக அமைவது விபாவம் ஆகும். விபாவம் இரசத்தினை தோற்றுவிப் பதற்குரிய சூழ்நிலையை வழங்குகிறது. இதனை ஆலம்பன விபாவம், உத்திவன விபாவம் என இரண்டாக வகுப்பார். ஆலம்பன விபாவம் என்பது கதாநாயகன் கதாநாயகி எனப் பொருள்படுகிறது. உத்தீபன விபாவம் நிலம், பொழுது எனும் பொருளினை வழங்குகின்றது. கதாநாயகன் இடத்தே உணர்வு தோற்றம் பெறுவதற்கு கதாநாயகி காரணமாக அமைவர். கதாநாயகி இடத்தே உணர்வு தோற்றம் பெறுவதற்கு கதாநாயகன் காரணமாக அமைவர். இவர்களது உணர்வு வெளிப்பாட்டினை அவர்கள் சிந்திக்கும் இடமும், பொழுதும் வளர்த்துச் செல்லுகின்றன.

ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டும் போது மேற்கூறப்படும் உணர்வுகள் புறத்தே வெளிப்படுத்துகின்றன. அவற்றை நாம் அனுபாவம் என்கிறோம். அனுபாவத்தினை நாம் இரண்டு வகையாக வகுக்க முடியும்.

01. நடிகனால் உருவாக்கப்படும் அனுபாவம்

02. நடிகனிடத்தே இயல்பாக தோற்றம் பெறும் அனுபாவம்

நடிகனிடத்தே இயல்பாக தோற்றம் பெறும் அனுபாவங்கள் சாத்வீக பாவங்கள் என அழைக்கப்படுகின்றன. இது எட்டு வகையான வெளிப்பாடுகளை வழங்குகின்றது.

01. மயிர் கூச்செறிதல் (மெய்மயிர்சிலிர்த்தல்)
02. வியர்வை
03. நடுக்கம்
04. நிறமாற்றம்
05. குரல் மாற்றம்
06. கண்ணீர் வருதல்
07. நிலைக்குத்தி நிற்றல்
08. மயக்கம்

என்பன நடிகனிடத்தே இயல்பாக தோற்றம் பெறும் அனுபாவங்கள் ஆகும். கண் சிமிட்டுதல், புருவங்களை சுருக்குதல் பற்களை நறுமுதல் என்பன நடிகனால் தோற்றுவிக்கப்படும் அனுபாவத்திற்கான உதாரணங்களாக அமைகின்றன.

ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டும் போது வெளிப்படுத்தப்படும் அனுபவத்துடன் வியாபிச்சாரிய பாவம் இணைகின்ற போது ரஸம் தோற்றம் பெறுகின்றது. வியாபிச்சாரி பாவம் ஒரு நிலையற்ற பாவமாகும். கணந்தோறும் மாற்றம் அடைந்து செல்லும் வெளிப்பாட்டினை வியாபிச்சாரி பாவம் என பரதர் சுட்டுவார். அதாவது கடலின் அலைகள் தோன்றி மறைவது போன்று வியாபச்சாரி பாவமும் நடிகனிடத்தே தோன்றி

மறைகின்றது. என பரதர் கூறுகின்றார். வியாபிச்சாரி பாவம் 33 வகையான உணர்வுகளின் வெளிப்பாட்டினை தன்னுள் கொண்டுள்ளது. அனுபாவத்தினை செழுமைப் படுத்தி அக்கணமே மறைந்து செல்லும் தன்மையினை வியாபிச்சாரி பாவம் கொண்டுள்ளது.

ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டுவதன் ஊடக வெளிப்படுத்தப்படும் அனுபாவத்துடன் வியாபிச்சாரி பாவம் இணைகின்றபோது ரஸம் உருவாகின்றது. இச்செயற்பாடு நடிகனிடத்தே நிகழ்கின்றது. ஆனால் ரஸம் முழுமை அடைவதற்கு நடிகனால் வெளிப்படுத்தப்படும் ரஸம் பார்வை யாரைச் சென்றடைவதற்கு. அவசியமானது என பரதர் கூறுகின்றார்.காய்ந்த விறகில் தீப்பொறி பற்றி விறகே தீப்பிளப்பாகின்றது போன்று நடிகனால் வெளிப் படுத்தப்படும் ரஸம் பார்வை யாளரது மனங்களைப்பற்றி அவர்களையும் ரஸமயமாக்கின்றது என பரதர் ரஸத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி தெளிவாக கூறியுள்ளார்.

**அழிவுக்கு முந்தியது அகந்தை**
**வீழ்ச்சிக்கு முந்தியது வீண் பெருமை.**

**உயர்வான மனிதர்கள் வார்த்தைகளை வெளியிடுவதில் நிதானமாகவும் நடத்தையில் உறுதியாகவும் இருக்க விரும்புவார்கள்.**





# நமக்குள் ஒரு புதையல்

செல்வன். இ. ஸ்ரீராம்
தரம் 8C

ஒரு சந்தை, அது பலபேர் போகும் இடம் அங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சை எடுத்தபடி நின்று கொண்டிருந்தான். நீண்ட காலமாக ஒரே இடத்தில் நின்றவாறே பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அவன் வாயைத் திறந்து எனக்குப் பிச்சை போடுங்கள் என யாரையும் அவன் கேட்டதில்லை. அவன் அந்தக்குறித்த இடத்திலே நின்றவாறு ஒரு கையை நீட்டுவான். அவன் மீது அனுதாபப்பட்ட சிலர் சிலசில்லறை நாணயங்களை அவனது கையிலே கொடுப்பார்கள். அவ்வாறே இருபது வருடங்களாக பிச்சை எடுத்து கொண்டிருந்த அவனுக்கோ மிக வயது முதிர்ந்து விட்டது. அவன் திடீரென அவ்விடத்திலே ஒருநாள் இறந்து விட்டான். அவன் மீது அனுதாபப்பட்ட மக்கள் அவனுக்கோர் கல்லறை கட்டுவது என முடிவு செய்தனர்.


முடிவு செய்த மக்கள் கல்லறைக்காக கிடங்கு ஒன்று தோண்டினர். அவ்விடத்தில் "டங் டங்" என சத்தம் கேட்டது. எல்லோரும் பார்த்தனர் பல பொற்காசுகள் காணப்பட்டன. மக்கள் ஆச்சாரியம் அடைந்தனர்.

அவ்வழியில் வந்த துறவி ஒருவர் நடந்ததை கேள்வியுற்று இவ்வாறே மனிதர்களும் தமக்குள் இருக்கும் திறமைகள் அவர்களாலே மறைக்கப்பட்டது என கூறியவாறு அவர்வழியில் சென்றார்

**கோபம், பேராண்மை, பொறாமை, பகைமையின்மை, அமைதியின் பகைவர்கள், தன்னம்பிக்கை, கூட்டுறவு, கருணை, பழிவாங்காமை, ஆகிய நற்பண்புகள்**
**(சுவாமி விவேகானந்தர்)**



மலர் வெளியீட்டுக்குழு



ஆசிரியர் கழகம்



கல்விசாரா சேவையாளர்



முகாமைத்துவக் குழு



# விழுமியக் கல்வியும் மாணவர் ஒழுக்கமும்

**திருமதி.மேரிராஜேஸ்கனி ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்,**

விழுமியக்கல்வியின் முக்கியத்துவம் பற்றி அதிகமாக இக்கால கட்டத்தில் வலியுறுத்தப் படுகின்றது. பாடசாலைகளில் சேவையாற்றும் எல்லா ஆசிரியர்களும் விழுமியங்களையுடைய ஆசிரியர்களென்று சொல்லக்கூடிய அளவுக்கு கல்வியும் விழுமியங்களும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன.

விழுமியம் என்பதனை நோக்கும் போது value என்னும் ஆங்கிலப்பதம் பெறுமதி, மதிப்பு, விழுமியம் எனப் பொருள்படும். பொருட்களுக்குப் பெறுமதி அல்லது மதிப்பளித்தல் விசேட மனிதப்பண்பாகும். ஏதோ ஒரு பொருளுக்கு மதிப்பளிக்கப்படும் போது அம்மதிப்பை ஏற்றுக் கொள்ளும் நபருக்கு அது ஏனைய பொருட்களை விட விசேட தன்மை பெறுகிறது. மனிதர்கள் பல பொருட்களுக்கு மதிப்பளித்து வருகின்றனர். அதற்குக் காரணம் அதனது பயன்பாடு, செயலுக்குப் பொருத்தமான தன்மை, அதன் அழகு, அளிக்கும் திருப்தி, நல்ல தன்மை, சக்தி போன்ற குணங்களாகும்.

இன்றைய வர்த்தக உலகில் மதிப்பு விலைமூலம் காட்டப்படுகின்றது. ஆனால் பொருளினது அல்லது மனிதனது எல்லா இயல்புகளையும் விலை மூலம் மதிப்பிட முடியாது. நல்லசெயல்கள், தீயசெயல்கள், அழகு,அழகின்மை, உயர்வுகள், பின்னடைவுகள், பொதுவானது, பொதுவானதல்ல என்ற வகையில் மதிப்பளிக்கப்படுகின்றன. இங்கு மதிப்புக்கள் நேர்க் கணியமாகவும் எதிர்க்கணியமாகவும் மதிப்பிடப்படுகின்றன.

விழுமியங்கள் என்பது தனிநபர், சமூகம், வாழ்க்கை என்பவற்றைப் போஷிக்கின்ற, வளம்படுத்துகின்ற, அர்த்தமுள்ளதாக்குகின்ற மனித குணப்பண்புகள் ஆகும். இதன்படி எல்லா விழுமியங்களும் நல்லவை, மீளத்தோன்றக் கூடியவை. அதாவது உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், மற்றவர்களிடம் கேட்டறிதல், தைரியமும் உண்மையும் நிறைந்து காணப்படல், சாந்தம், சமாதானம், அறிவு, காருணியம், கெட்டித்தனம், நினைவு, சுயகற்றல், அகிம்சை, ஒழுக்கமுறை, நேர்மை, சமத்துவம், இன்சொல், சிநேகபூர்வம் போன்றவையாகும். "விழுமியம்" சுய ஆத்மாவுடன் தொடர்புபட்டதாகும். என பிரபல மானிடவாத உளவியலறிஞரான ஆப்ரஹாம் மாஸ்லோ குறிப்பிடுகின்றார்.

விழுமியம் என்றவுடன் எம்மனதில் எழுபவை ஒழுக்காறு, மனப்பாங்கு, நல்லொழுக்கம் என்பனவாகும். இவை நீண்ட விழுமியக் கற்றற் செயலொழுங்கின் அம்சங்களாகும். மனப்பாங்குகள் பல சேர்வதன் மூலம் விழுமியம் உருவாகின்றது. இவ் விழுமியம் மனிதனின் நல்லொழுக்கக் கற்றலிலும் நடத்தையிலும் உள்ள விடயமாகும். விழுமியங்கள் நல்லொழுக்கத் தீர்மானங்களுக்குத் தேவையான காரணிகளை வழங்குகின்றன. நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒழுக்காறு தோன்றுகிறது.

மாணவர்களை நல்லொழுக்க முடையவர்களாக நெறிப்படுத்த பாடசாலையில் விழுமியக் கல்வியில் பங்களிப்பு மிக அவசியமாகும். இன்றைய பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழுமிய உணர்வுகள் அஸ்தமித்துக் கொண்டிருக் கின்றன. என்பதே உண்மையாகும். ஆரம்ப கால கட்டத்தில் குரு சீடர் கல்வி முறையில் ஒழுக்கக்கல்வி சிறந்து விளங்கியது. சீடன் தன் குருவின் மீது அன்பும் மரியாதையும் நிறைந்தவனாக வாழ்ந்து நல்லொழுக்கமுடைய மாணவனாகவும் குருவிற்குப் பெருமை சேர்ப்ப வனாகவும் விளங்கினான். ஆனால் இன்றைய கல்வி பெறும் மாணவர்கள் தங்கள் செயல்களுக்கும் தீர்மானங்களுக்கும் ஆசிரியர்கள் பிறழ்வுடைய வர்களாக மாற வேண்டும் என்ற அற்ப சிந்தனையை வளர்த்து வருகின்றனர்.

பரசுராமரிடம் வில்வித்தை கற்கச் சென்ற மாணவன் கர்ணன் தன் குருவின் உறக்கத்தைக் கலைத்துவிடக் கூடாது என்பதற்காக வண்டு தன் கால்களைத் துளைத்து இரத்தம் ஓடும்வரை பொறுமையுடன் காத்திருந்ததை மகாபாரதத்தில் காண்கிறோம். ஆனால் இன்றைய மாணவருலகில் குருவின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ள முடியாத இயல்புடைய நிலைகளையே கண்கூடாகக் காண்கின்றோம்.

ஒரு மாணவன் நல்லொழுக்கத் தீர்மானங்களுடன் நடத்தலை ஒழுக்காறு எனலாம். ஒழுக்காறு "ஒருவரிடம் வளர்கின்ற சுய கட்டுப்பாடே அவரது சிறந்த ஒழுக்காற்றைக் காட்டுகிறது" என்ற ஹெல்லிடே கூறியுள்ளார். இதிலிருந்து நாம் அறிவது உண்மையான ஒழுக்காறு சுயகற்றலினால் தோன்றுகிறது என்பதாகும்.

பெண் ஆய்வாளர் ஒருவரின் கருத்துப்படி ஒழுக்காறு என்பது ஒருவரிடமுள்ள கட்டுப்பாட்டு முறைமையின் உயர் வளர்ச்சியின் பயனாகத் தோன்றுகின்ற தமது நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் உதவுகின்ற சமுதாயம் ஏற்றுக் கொண்டவைகளினூடாக தமக்குப் பாதுகாப்புப் பெற்றுத் தருகின்றது மான நடத்தைக் கோலமாகும். உண்மையான ஒழுக்காறு தனியாளின் வளர்ச்சிக்கும் பாது காப்புக்கும் காரணமாகின்றது. ஒழுக்காறு மாணவர்கள் சுயவிளக்கம் பெறவும் பிழையற்ற செயல்களை ஆற்றவும் வழகாட்டுகின்றது. இத்தகைய அறிவுசார் நடத்தை ஒருவன் தனது

வாழ்க்கை அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்ட வாழ்க்கைத் தத்துவமாகும். முக்கியமாக ஒழுக்காற்று முறைமைகளிலிருந்து விலகி நடக்கும் மாணவருடன் பேசிப் பார்த்தால் அம்மாணவன் சிற்சில விடயங்கள் பற்றி அவர் எண்ணும் விதத்தையும் தனது செயல்கள் நியாயமானவை எனக்காட்டுவதற்காக வாதிடுவதனை அவதானிக்க முடியும். இத்தகைய செயற்பாடுகள் தனியொருவரது மனப்பாங்கினால் நிலவுகின்றது. இதன்படி ஒருவரின் மனப் பாங்கையும் விழுமியத்தையும் மாற்றுவதில் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகவும் நுணுக்கமாகவும் கவனமாகவும் செயலற்றுதல் இன்றைய காலத் தேவைகளாகும்.

விசேடமாக நவீன கட்டிளமைப்பருவ மாணவர்கள் உலகையும் வாழ்வையும் புரிந்து கொள்ளக் கூடிய நல்லவை கெட்டவைகளை வேறுபடுத்து வதற்கு வழி காட்டுகின்ற அடிப்படை வாழ்க்கைத் தத்துவத்தை தேடுகின்றார்கள். ஆனால் இத்தகைய அறிவுசார், கல்விசார் தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் கற்பிக்கப்படும் பாடங்கள் உதவுவதில்லை என்பது குறைபாடாகும். இத்தகைய பாடவேளையில் சில நிமிடங்கள் புரியும் கடமையுள்ள புரிந்துணர்வு மிக்க அறிவூட்டலின் மூலம் நிவர்த்தி செய்ய முயற்சிக்க முடியும் என்பது பயனுள்ள கருத்தாகும்.

அநேகமான பாடசாலை மாணவர்கள் தாம் எத்தகைய இலக்குடன் கற்றலில் ஈடுபட வேண்டும். பாடசாலையில் எத்தகைய பண்புகளுடன் ஒருவரை ஒருவர் அணுக வேண்டும் என்ற எண்ணக்கருக்கள் அற்றவர்களாக நடந்து கொள்கின்றார்கள். இவர்கள் தாம் வாழும் குடும்பத்தில் சூழலில் பெற்ற அனுபவங்களை அப்படியே செயற்படுத்துதல் விழுமியக்கல்வி போதித்தலில் ஏற்பட்ட குறைபாடாகும். பிள்ளைகளிடத்தில் விழுமியத்தை வளர்த்து விருத்தி செய்வதற்கான பாடசாலையின் கடமைகளுக்கு மேலாக மிக முக்கிய செயலாற்ற வேண்டியவர்கள் பெற்றோர்களாவர். ஆனால் இன்றைய நவீனத்துவ நாகரிக நகரமயமாக்கல் செயற்பாடுகள் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளை அந்நியப் படுத்தி வருகின்றன. இத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பதற்குப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் நல்மனப்பாங்குகளை வளர்க்கக் கூடிய வார்த்தைகளைப் பேசி ஒழுக்காற்றைப் பேணி நல்லொழுக்கத்துடன் வாழ நெறிப்படுத்த வேண்டும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஆன்றோர் பழமொழி மலையேறி "தாயும் தந்தையும் பின்னடிக்கு இடஞ்சல் என்னும் மன எண்ணத்தை மாற்றுவது பெற்றோரின் கடமையாகும்.

ஒழுக்கவியலின் தந்தை என்றழைக்கப்படும் சோக்கிரட்டீஸ் "மனிதன் யாருமே தவறு செய்வதில்லை தவறு செய்யக்காரணம் அவன் சரி பிழை பற்றி அறிந்திராததே காரணம்" என்றார். இவ்வகையில் ஒழுக்கவியலில் விழுமியம் செயற்பட

அறிவு என்பது அவசியமாகும். அறிவினை ஊட்டும் முக்கிய பொறுப்பு ஒவ்வொரு மாணவனதும் தந்தையின் பாங்காகும். உலகிற்கே நீதி சொல்லிய வாழ்க்கைத் தத்துவநூலாகிய திருக்குறள் "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்ப செயல்" என்பதற்கேற்ப ஒரு தந்தை தன்பிள்ளைக்குச் செய்யவேண்டிய நன்றி அறிஞர் கூடும் சபையில் தன் மகனை பேரறிஞ்ஞனாக ஆக்குதல் என்பதனை பெற்றோர் மறந்து விடலாகாது.

மாணவர்கள் நல்லொழுக்கத் தீர்மானங்களை எடுப்பதற்கு அத்திவார மாக அமைவது அவர்களிடம் பதிந்துள்ள விழுமியங்களாகும். பாடசாலையில் மாணவ சமூகம் சிறப்பானதாக உருவாகாது விட்டால் நாட்டில் நல்ல பிரஜைகள் உருவாக முடியாது. நல்ல நல்ல பிள்ளைகள் தோன்றாத வாழ்வில் காலாசார சீரழிவு, சமூக அநீதி, சமூக ஒற்றுமையின்மை வளரும். எதிர்காலம் சிறந்து விளங்காது. இதனால் ஏற்படும் விளைவுகள் எமக்குப் புதியனவல்ல.

ஒழுக்காற்றின் மூலம் பயனுள்ள கற்றல் அனுபவங்களை மாணவர்கள் பெற முடியும். உதாரணமாக மாணவர்கள் நன்றாகப் படிக்காதுவிட்டால் பரீட்சையில் சித்தியடைய மாட்டீர்கள் என போதிக்கும் போது மாணவர்கள் படிக்க வேண்டும் என்னும் கரு கட்டியெழுப்பப்படுகின்றது. இந்த நோக்கில் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு நல்ல மனப்பாங்கை கட்டியெழுப்புவதுடன் அதற்கொப்பான மனவெழுச்சிகளை மலரச்செய்ய வேண்டும். பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களிடம் விழுமிய அபிவிருத்தியை ஏற்படுத்தலாம். அழகியல் பாடங்கள் ஊடாக (சித்திரம், சங்கீதம் நடனம்) கீறுதல், இசையை இசைத்தல் சமயப் பாடம் மூலம் சமயக் கொண்டாட்டங்கள், கலாசார விழாக்கள் ஏற்பாடு செய்தல், நாடகம், சிறுகதை விளையாட்டுப் பயிற்சிகள் மூலம் ஒழுக்கமுள்ள மாணவ சமூகத்தை உருவாக்கமுடியும்.

தற்கால மாணவர்களிடத்தில் விழுமியக் குறைவுக்கு மாணவர்களின் மனங்களை சின்ன வயதிலிருந்து பக்குவப்படுத்த வேண்டிய தேவைப் பாடுள்ளது. மாணவர்கள் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கும், ஆசிரியர்களை மதிப்பதற்கும், பெற்றோரைப் பேணுவதற்கும், சமூக சிந்தனையாளராக நற்குடிமகனாக மாற ஏற்ற கல்வியை அளிக்க வேண்டியது மிக அவசியமாகும். இதற்குப் பெற்றோர், பாடசாலைச்சமூகம், பெரியவர்கள் அனைவரும் உளவிருப்பத்துடன் சேவையாற்ற முன்வர வேண்டியது காலத்தின் தேவையாகும்.



# மழுங்கிய குரல்

செல்வன். எஸ். நிதர்சன்
கலைப்பிரிவு 2014

கும்...கும்...கும்...கும்.... உரலில் இருக்கும் தானியத்தின் மீது உலக்கை விழுந்து ஒலி எழுப்பி கொண்டு இருக்கிறது. பொழுது கருகி இரவு பன்னிரெண்டு மணியானால் பாலன் பிறப்பு. அந்த ஊரிலே அதிகமாக வாழ்வோர் கிறிஸ்தவர்கள் ஆதலால் அடுத்த நாள் மலரும் நத்தார் திருநாளை கொண்டாடுவதற்காக ஆயத்தங்களை செய்வதில் ஊரேகளை கட்டி இருந்தது. நாலாம் வருடம் யாழ்ப்பாணப் பகுதியில் வீசிய பயங்கரச் சூறாவளிக்கு கணவனை இரையாக்கிய பின்பு மரியம்மா வின் வாழ்க்கை தடம் மாறியது.

மறைந்த கணவன் ஞாபக மாக அவளிடம் அளித்து விட்டு சென்ற ஒரு பெட்டைக்குஞ்சு மரியம்மாவோடு ஒட்டிக் கொண்டு வாழ்கிறது. அந்த பெட்டை குஞ்சுக் காக மரியம்மா வாழ்க்கையை போராட்ட களமாக்கி கொண்டாள். கும்...கும்...கும்... பெருநாள் அடுத்த நாளாக இருந்த தனால் மரியம்மா வுக்கும் இன்று நல்ல உழைப்பு மதியம் சாப்பிடக் கூட இல்லை. ஆருக்காக இத்தனை கஸ்ரங் களையும் ஏற்று கொண்டாளோ அந்த சீவன் கடுமையான காய்ச்சலில் இருக்கையில் அவளுக்கு உணவா பெரிது?

பகல் பொழுது வீட்டிற்கு போன மரியம்மா மகளுக்கு கடையில் வாங்கிப் போன றஸ்கையும் கொடுத்து தேநீரும் வைத்துக் கொடுத்து விட்டு வந்தாள். தான் இன்னும் வீட்டு பக்கம் தலைகாட்ட வில்லை. "பட்.... பட்.... பட்.....படார்..." ஊரே பெருநாள் வருகையை நினைத்து மகிழ்ந் திருந்தது. பட்டாசு கொளுத்தி சிறுவர்கள் எல்லோரும் திருநாளை வரவேற்று கொண்டிருந் தார்கள். கும்......கும்.......கும்...... மரியம்மாளின் உறுப்புக்கள் இயந்திர மாக மாறி இயங்கிக் கொண்டிருந்தன. அவளது மனம் மதியம் வீட்டுக்கு போயிருந்த சமயம் தனது வயிற் றில் உதித்த இளங்குருத்து அந்த சுகவீனத் திற்குள்ளும் கேட்டதை நினைத்தே சுற்றி கொண்டிருந்தது. "அம்மா..... பக்கத்து வீட்டு றோஸின்ர அப்பா அவளுக்கு பட்டுச் சட்டை யொண்டு வாங்கி குடுத்தாராம்....... எங்க அப்பாவுமிருந்தா வாங்கித் தந்திருப் பார் தானேம்மா.

இந்த வார்த்தைகளை அந்த வருத்தத்தினூடும் மகள் உச்சரிக்கும் போது மரியம்மாளுக்கு ஆயிரம் சம்மட்டிகளால் மண்டை யைப் பிளப்பது போன்ற பிரனம் ஏற்பட்டது. எவ்வளவுதான் கஸ்ரபட்டாலும் தனது மகளின் மனதை திருப்திப் படுத்த முடியவில்லையே என்ற ஏக்கம் அவளது மனதைக் குடைந்தது. இருந்தாலும் ஏலாத் தன்மை

தலையெடுத்தபோது அவளால் வந்த கோபத்தை தடுக்கவும் முடியவில்லை "உனக்கு பட்டு சட்டையா வேணும் சனியன்.... உனக்காக நான் படுற பாட்டைப் பாத்து கொண்டும் பட்டுச் சட்டையைக் கேக்கிறாய்... ஏன் உயிரோடயிருந்து என்ரை உயிரை வாங்கிறாய்? தன்னுடைய இயலாத் தன்மையை அந்த குழந்தையில் இறக்கிக் கொண்டதனால் மறைத்துக் கொண்டாள் மரியம்மா. இப்பொழுது அந்த சம்பவத்தை நினைத்து அவளது மனம் வேதனைபடுகிறது. குழந்தை யைத் தீண்டிய கைகளை பார்த்து விட்டு உலக்கை மீதே மோதிக் கொள்கிறாள்.

டும்......பட்......படார்...புஸ்....டும் பாலன் பிறப்புக்கான நேரமும் நெருங்க ஊரிலும் கலகலப்பு மிஞ்சு கிறது. மரியம்மாளும் கடமையை முடித்துக் கொண்டு உழைப்பில் கிடைத்த ஊதியத்தை கணக்கிடு கிறாள். மொத்தமாக முப்பது ரூபா தேறுகிறது. அவளுக்கு ஒரு எண்ணம் தோன்ற பெரிய கடைக்கு கால்களை விரைவாக எடுத்து வைத்து நடக்க ஆரம்பித்தாள். நேரமும் நன்றாக கழிந்திருந்ததால் ஒரு சில கடைகள் மட்டுமே திறந்திருந்தது. ஒற்றைக் கதவில் திறந்து கிடந்த புடவை கடையொன்றுள் நுழைந்த மரியம்மாள் முப்பது ரூபாவையும் கொடுத்து மகளுக்கு அளவான சட்டை வாங்கி கொண்டு விரைகிறாள். வழி நெடுகிலும் அவளை வரவேற்பது போன்று ஊரெல்லாம் வெடி கொளுத்தி ஆரவாரித்தது. ஆனந்த முடன் வந்து கொண்டிருந்த மரியம்மாள் குடிசையுள் நுழையும் போது மதியம் வளத்திவிட்டு போன கிழிந்த பாயின் மீதே கிடந்தாள் மகள் மீனா. அவளுக்கென வாங்கி வந்த சட்டையை பின்புறமாக மறைத்து வைத்து கொண்டு மீனா.... மீனா....எழுந்து இஞ்சை பார்... அம்மா என்ன கொண்டு வந்திருக் கிறணெண்டு. உடம்பில் தட்டியும் பிள்ளை எழுந்திருக்கவில்லை. தூக்கி நிறுத்துகிறாள் வேரற்ற மரமாக சக்தியற்று சாய்கிறது உடல் மரியம்மாள் இத்தனை காலமும் எந்த உயிருக்காக வாழ்ந்தாளோ அவ்வுயிர் அவளை தனிக்கவிட்டு பிரிந்து விட்டது. "ஐயோ... என் ராஜாத்தி" என சொல்லிக் கொண்டே தன் உடலை விட்டு மரியம்மாவின் உயிரும் பிரிந்தது.

*கடமையைச்செய் பலனுக்காக கையேந்தாதே இதுவே மிகப்பெரிய வேள்வியாகும்.*



# பள்ளிப்பருவம்

செல்வி. A. ஜதிலா
தரம் *10 C*

சிறகடிக்கும் பட்டாம் பூச்சிகளாய்
பள்ளிச் சாலைக்குள் நுழைந்தோம்
எண்ணி முடியா எண்ணங்கள் சூழ்ந்திடவே
ஆரம்பப் பிரிவில் அடி எடுத்து வைத்தோம்

அதிபரின் புன்முறுவலான வரவேற்புடன்
ஆசானின் அரவணைப்பில் அடிமையானோம்
என் சக மாணாக்கர் சூழ்ந்திருக்க
வெண்புறா கூட்டமாய் வீற்றிருந்தோம்

நாட்களும் செல்லச் செல்ல
நண்பி என ஒருத்தியின் கரம் பிடித்து
பாடசாலை எல்லைக்குள்
பல குறும்புகள் செய்திட்டோம்

ஓடி ஆடி திரிந்த எமக்கு
சோதனையாய் வந்தது
முதலாம் தவணை பரீட்சை
சிந்தனைக்கு ஓர் சவால்

புள்ளிகளைக் கண்டு
புன்னகை முகத்துடன்
அடுத்தவர் புள்ளிகளை
அடிபட்டு பார்த்திட்டோம்.

ஒவ்வொரு வருடமும்
புதிய புதிய வகுப்புக்கள்
அனுபவமும் புதியதாக இருந்தது
அறிவும் பெருகியது

கல்வி எங்கள் கண்களாக இருந்தது
கற்கும் போது கசக்கத்தான் செய்தது
கண்ணீர் மழை சிந்தி கற்றோம்.
கல்வியும் பயிராக வளர்ந்தது

க.பொ.த சாதாரண தரத்தில்
கடின முயற்சியுடன் கற்றோம்
உழைப்பின் பயனால்
உயர்ந்திட்டோம் வாழ்வினிலே

உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று
பள்ளி வாழ்வை விட்டு
கல்லூரி வாழ்வை தொடர
கண்ணீருடன் பிரிந்திட்டோம்

பலநிற மலர்கள் சேர்ந்து
மலர்ச்செண்டாக அழகு தந்தது போல்
பல மாணவர்கள் சேர்ந்து
பள்ளியை அழகு செய்தோம்.

பிரிவொன்று வந்ததால்
அதிபர் ஆசானை விட்டு
அன்புத் தோழிகளையும் பிரிந்து
பள்ளியையும் விட்டு பிரிந்திட்டோம்.

கசப்பான கல்வியை
கருத்துடன் எமக்கு ஊட்டி
எம்மை உயர்திட செய்த
பள்ளியை மறவாது நன்றி பெருக்குடன்
வாழ்த்துகிறோம்.



# கல்விச் சுற்றுலாவும் அதன் பயன்பாடுகளும்

செல்வன்.ச. ரவிவர்மன்
கலைப்பிரிவு 2013

குன்றுகளின் மேலே நின்ற கோயில் கொண்ட கந்தனை வணங்க கதிர்காமத்திற்கு எளிமைக்கோலம் பூண்டு பக்திப்பரவசத்தோடு செல்கின்றனர் பக்தர்கள். மடுமாதாவை வணங்கவும், சிவனொளிபாதமலையில் இருக்கும் இறைவனின் அடிப்பாதத்தை தரிசிக்கவும் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அனைவரும் பக்தியை மையமாகக் கொண்டே பிரயாணம் செய்கின்றனர். பல செல்வம் படைத்த தனவந்தர்கள் தமது வாழ்நாளின் ஓய்வுகாலங்களிற் பற்பல இடங்களைப் பார்க்கச்செல்கின்றனர். இவ்விதம் பல்வேறு வகையிலான மனங்களோடும் பற்பல குறிக்கோளினாலும் பிரயாணங்களை பலவகையாகப் பிரிக்கலாம். இவ்வகையிலே பாடசாலையில் கல்வியின் மூலம் இடங்களை கூறியும் மாணவர்கள் எமது கண்களினால் பாடப்புத்தகத்திலுள்ள வரலாற்றுப் பண்பாட்டு, சமய, பிரசித்திபெற்ற இடங்களை கான மேற்கொள்ளும் ஒரு வகைப்பிரயாணமே கல்விச்சுற்றுலா ஆகும்.

பிரயாணங்களின் பயனைப்பற்றி பேக்மன் என்ற ஆங்கில மேதை "இளமையிற்கல்வியும் முதுமையில் அனுபவமும் பிரயாணத்தாற் கிடைக் கின்றன. என்று கூறியுள்ளார். இளமையிற் கல்வி பெற உய்யும் உயரிய பொருள்களில் ஒன்றே கல்வி சம்பந்தமான சுற்றுலாப்பயணமாகும். நான்கு சுவருக்குள்ளே அடைந்து கிடந்த புத்தகக்கல்வி பயிலும் மாணவனால் பூரண சிந்தனை அறிவைப் பெற முடியாது. புத்தகப்பூச்சியாய் கிணற்றுத்தவளைகளாய் இருப்பதனாலும் கல்லூரிப்படிப்பே போதுமென்று நம்புவதனாலும் அறிவு வளராது. பல்வேறு வளர்ச்சிகளை நோக்கிக்கால்பதிக்கும் இவ் நூற்றாண்டிலே விஞ்ஞான சாதனங்களான வானொலி தொலைக்காட்சி என்பனவற்றை விட சிறந்ததான உண்மைகளையும் இடங்களையும் உள்ளபடி காட்டி அவற்றை அனுபவமாக மாற்றி அவற்றை கல்வியின் போக்கில் அறிவாக மலரச்செய்யும் உன்னத சிறப்பே கல்விச் சுற்றுலாவின் சிறப்பாகும். அதனாற்தான் காட்சிமூலம் காணும் விடயங்களை அறிவிற்பெரும்பகுதி மூளையிற் பசுமரத்தாணி போல பதியச்செய்கின்றதென்பது உள அறிஞர்களின் உண்மையான கருத்தாகும்.

கல்விச் சுற்றுலாப்பயணமானது பாடசம்பந்தமான அறிவைப்பெற உதவுகின்றது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அதாவது பெருமளவிற் காட்சி தொழிற்படும் பாடங்கள் புவியியல், வரலாறு, விஞ்ஞானம் என்பனவாகும். வகுப்பறையிலே தேசப்படங்களின் துணை கொண்டு புவியியலைக் கற்கமுயலும் மாணவன் எவ்வளவு திறமையோடும் கற்றாலும் உண்மையறிவைப் பெறமாட்டான். ஏனெனில் அவனது அறிவு அனுபவத்தோடு ஏற்படவில்லை. காரணம் லக்சபானா நீர்வீழ்ச்சி மின்சார திட்டத்தையோ விக்ரோறியாத் திட்டங்களை கண்டு உணராத மாணவன் அதன் அமைப்பை விளக்கப்படம் வரைந்து கற்றாலும் உணரமாட்டான். அத்தோடு குளங்களின் பாகங்களை நேரில் காணாத மாணவனும் வரையமுடியாது அல்லலுறுவான். மற்றும் பொலநறுவை, சிகிரியா, தம்பதெனியா, கோட்டை என்பன ஏன் காலத்திற்குக்காலம் தலைநகராக்கப்பட்டன? கண்டியரசை அந்நியர் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்துவது ஏன் கடினமாய் இருந்தது? என்பன போன்ற வினாக்களுக்கு விடைகான வேண்டுமானால் அவ் இடங்களைக்கண்டு அவற்றின் நிலையத்தை அறிதல் வேண்டும். மற்றும் சோழ ஆட்சியாளர்கள் தொடர்பினால் இலங்கை கலைவளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தை அறிய வேண்டுமானால் பொலநறுவை சிவன் கோவிலைக்காண வேண்டும்.

தாவரவியல் கற்கும் மாணவர்களுக்கு பேராதனை, கக்கலை எனும் இடங்களிலுள்ள தோட்டங்கள் மிகப்பாரிய ஆய்வு கூடங்களாக விளங்கி உதவி புரிகின்றன. இவற்றை நேரிலே கண்டறிவதன் மூலம் பாடங்களிலுள்ள விடயங்கள் பசுமரத்தாணி போல சுலபமாக மனதிற்பதிகின்றன. கல்விச் சுற்றுலாவின் போது மாணவர்களாகிய நாம் நூதனசாலைக்கு செல்வோ மானால் எமது நாட்டின் தொல்பொருள் சின்னங்களான நாணயங்கள் முற்கால அரச சிம்மாசனங்கள் அரசர்களின் ஆடைகள் யுத்தத்திற்கு பயன்படுத்திய உபகரணங்கள் நினைவுச்சிலைகள் ஆபரணங்கள் என்பவற்றைக் கண்டு நாம் அவற்றைப் பாடத்தோடு தொடர்புபடுத்தி விளங்கிக்கொள்ளமுடியும்.

மாணவர்களாகிய எம்மிடத்தில் சகிப்புகத்தன்மை, தன்நம்பிக்கை, பொறுப்புணர்ச்சி என்பவற்றை வளர்ப்பதற்கு சுற்றுப்பிரயாணங்கள் உதவுகின்றன. மற்றும் தங்களுக்கு தேவையான விடயங்களை தாமே உணர்ந்து ஆசிரியரின் உதவியின்றி விடயங்களை ஆராயும் இயற்கை உணர்வை வழங்கும். சுற்றுப்பிரயாணங்களில் நாமும் இணைந்து கல்வியை மனதிற் பதிப்போமாக.


**அனுபவக்கல்வியால் ஆற்றல் சிறக்கும்.**




தகவல் தொழில் நுட்பக்கழகம்



கணித விஞ்ஞான மன்றம்



பான்ட் அணியினர்



மாணவ தலைவர்கள்



# வெள்ளைக் கொக்கு

செல்வி. பா. கியானுசா
தரம் 8C

ஒற்றைக் காலில் கொக்கு நின்று
ஓடும் நீரைப் பார்க்குது
குட்டை குளம் ஆறு எங்கும்
கொக்கு மீனை தேடுது

வாடுகின்ற கொக்கு இங்கே
தேடுகின்ற மீன்கள் எங்கே
ஓடுகின்ற நீரில் அங்கே
ஒதுக்கிப் பதுங்கிப் பார்க்குது

வெள்ளைக் கொக்கு சிறகசைத்து
வேறு குளம் தேடுது
நல்ல இரை மீனைத் தேடி
நீண்ட காலில் நிற்குது

கச்சிதமாய் நீண்ட அலகால்
கவ்வி மீனைச் சுமக்குது
பச்சை வயலில் வெள்ளைக் கொக்கு
பறந்து வந்து நிக்குது.



# நம் தேசம்

செல்வி. ச. சுரேகா
கலைப்பிரிவு 2012

உழைத்து வாழ்வோரை உயர வைக்கும்
சாதி மதபேதங்களை சாய்த்து விட்ட தேசம்
மிடுக்கான அருவியில் மின்சாரம் கண்ட
முத்துக்கள் இரத்தினங்கள் மூழ்க விட்ட தேசம்

கலங்கரை விளக்குகள் கண்சிமிட்டும்
நீண்ட கடலோரம் கொண்டமைந்த தேசம்
வரலாற்று பொக்கிசங்கள் பொதித்து
வந்தாரை வரவேற்கும் அழகான தேசம்

வெளிநாட்டு கைத்தொழில்கள் விளையாடும்
குறைவான மக்களை கொண்டமைந்த தேசம்
பண்பாடும் பறவைகள் பரந்து விட்ட – நல்
மயிலாட மந்திகளும் மலிந்த நம் தேசம்

கபடியும் கிரிக்கெட்டும் கால் பதித்த
சர்வதேச சாதனைகளை நிலைத்த தேசம்
அமைதி சுவாசத்தை அரவணைக்கும்
புன்னகையால் புதுயுகம் படைக்கும் எம் தேசம்

யானையும் குரங்கும் குதித்தாடும் தேசம்
வண்ணவண்ண மீன் வகைகள் வாழுகின்ற தேசம்
வண்ண துணிவகைகள் வடிவமைக்கும்
வளமில்லை என்று சொல்ல வாய்ப்பில்லாத் தேசம்

பாலை வனங்களை பார்த்தறியா
கொதித்திடும் வெந்நீர் ஊற்று கொண்ட தேசம்
நீலக் கடலாலே நித்திலமாய் அமைந்த
கத்துகின்ற கடலை கரை கொண்ட தேசம்

ஈழத்தவர் நாம் என்னும் இறுமாப்பு கொண்ட
மாந்தர்கள் பல வாழுகின்ற தேசம்
அயல் நாட்டை அரவணைத்து அன்பு காட்டும்
தூரநோக்கு கொள்கையை தூக்கி வரும் தேசம்

இயற்கை துறைமுகங்கள் இருக்கின்ற
அபிவிருத்தியால் அனைத்தையும் வென்றிடும் தேசம்
மதிகொண்ட தலைவர்கள் மண்படைத்த
வலு வென்ற நம்பிக்கை வழி கொண்ட தேசம்

தேயிலை தோட்டத்தினால் தேநீரை வென்று
இறப்பர்ப் பாலாலே ரயர் கொண்ட தேசம்
பழவகையும் பூக்களும் மலிந்த நல்
மாணிக்கமும் இரத்தினமும் மயங்க வைக்கும் தேசம்

நலமாக நாம் என்றும் சிறந்து வாழ
நம் தேசம் என்றென்றும் சிறப்புற்றோங்க
வாழி நம் தேசம் சிறப்புற்று என்று
வாயாற வாழ்த்துகின்றோம் வாழி வாழி.

**நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ மற்றவர்களின் முதுகில் ஏறிப்போக விரும்பாதே அது உனக்கு ஆபத்து.**



# பெண் சமுதாயத்தை காயப்படுத்தும் வன்முறைகள்

செல்வி. அ. கபிலவேணி
கலைப்பிரிவு 2012

பூப்போன்ற புனித நெஞ்சங்களில்
தீப் போன்ற செந்தீ தணல்கள்
செந்தீ பரவி கனலாகி புனலாகி
சிறை வைத்தது சமுதாயத்தை

கறை வைத்தது பெண்ணியத்தை
மண்ணின் மரபுக்கும்
மண் சார்ந்த பெண்ணின் மரபுக்கும்
சிலம்புடைத்த சிலப்பதிகார கண்ணகியும்

சிந்தையை அள்ளும் இராமாயண சீதையும்
பெண்ணியத்தின் கலாசாரக் குறி சென்ற நூற்றாண்டிலே
அபிமன்யுவை போல் வியூகங்களை உடைத்தெறிவாள்
திரும்பி வெளியேற முடியாமல் அடைபடுவாள்

சிறைப்பட்டவாள் மூக்கு உடைபடுவாள்
வன்முறைக் கணைகளால் விழுப்புண் அடைந்திடுவாள்
பெண்ணியத்தின் கவலைக்குறி இந்த நூற்றாண்டிலே
பெண் அடக்கு முறை கண்டு பாரதி மீசை துடித்தென்ன

பார்த்தீபன் வில்லிலிருந்து அம்பு பறந்தென்ன
பார் பார்க்க வைத்த பேர் போற்றும் பெண்ணினத்தை
ஏர் கொண்டு உழுதிங்கு
ஊர் ஊராய் விதைக்கின்றனர் பாழ்பட்ட வன்முறையை

உணர்ச்சியுடன் கருத்தும் தான் கவிதை உயிரென்று
பாவேந்தர் உரைத்ததன் பெண்ணிய வடிவம் சிலப்பதிகாரம்
இப்போ .....................
உணர்ச்சியுடன் அடக்குமுறையும் தான் வன்முறை ஆதிக்கம் என்று

மூடர் உரைத்ததன் நுண்ணிய வடிவம் கயமையின் கலப்பு அதிகாரம்
நிமிர்ந்த நன்நடையும நேர் கொண்ட பார்வையும் பாரதியின் வாக்கு
நிமிர்ந்தால் அடியும் பார்த்தால் உதையும் மூடர்களின் வாக்கு
பாரதியின் வாக்கு மூலையில் கிடக்க

மூடரின் வாக்கு முன்னேறிச் செல்ல
முழுதாய் காயப்படுத்துகிறது எங்களின் சமுதாயத்தை
அன்னை திரேசா கல்பனா சாவ்லா அதிரடி நாயகி பூலான்தேவி
அடக்கு முறை உடைத்தெறிந்து அமைத்தனர் வெற்றி தூண்களை

வெற்றித் தூண்கள் அமைக்க எழும் பெண்ணுக்கு
கம்பியை கொடுக்க மறுக்கிறது மூடச்செக்கு
சுற்றிவரும் செக்கு வட்டத்தை எப்போ உடைக்குமிந்த பெண்வட்டம்
செத்து சருகாகி உக்கி உருக்குலைந்து

ஊனமுற்று ஊன்றுகோலில் நடக்கின்றது பெண்ணுரிமை
வன்முறையில் ஊறிய மூடரிற்கு விளங்கவில்லை பெண் அருமை.
புண்பட்ட புலியாய் புயலாய் எழுவாள் என்றோ ஒருநாள்
பண்பற்ற மூடர் புல்லாய் பறப்பர் அன்றே திருநாள்.



# கணனி மொழிகள்
# (Computer Lanuage)

செல்வன். செ. தனுஷன்
வர்த்தகப்பிரிவு 2013

கணனி மொழி என்பது வரையறுக்கப்பட்ட சில விதிமுறைக்கேற்ப குறிப்பிட்ட சில நியமச்சொற்களைக் கொண்டு உருவாகும் அறிவுறுத் தல்கள் கணனியின் இயக்கத்தை ஆற்ற வழி செய்யும் மென்உறுப்பாகும். மனிதனுடன் நெருங்கிக் காணப்படும் அல்லது மனித மொழியுடன் ஒன்றித்துக் காணப்படும் மொழிகள் உயர்மட்டமான மொழிகள் எனப்படும். மனித மொழியுடன் நெருக்கமான தொடர்பற்ற மொழிகள் தாழ்மட்டக் கணனி மொழிகள் எனப்படும். உயர்மட்ட கணனி மொழிகள் 3 ம், 4 ம், 5 ம் கணனி மொழிகள் அடங்கும். தாழ்மட்டக் கணனி மொழிகள் 1ம் 2ம் தலைமுறைக் கணனி மொழிகளும் அடங்கும் இவற்றிலே உயர்மட்டமொழிகள் சிறந்த மொழிகளாக வளர்ச்சி பெற்றுவருகின்றன.

கணனி மொழிகள் காலத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டது. எனினும் அவற்றின் பண்புகள் இயல்புகள் போன்றவை சிறத்தல் அடைந்து வந்துள்ளன. தற்காலத்தின் கணனிமொழிகள் மனிதனுடைய மொழிகளை ஒத்துக்காணப்படுகின்றன எனலாம். கணனி மொழிகளின் வளர்ச்சிகட்டம் கீழே விரிவாக காட்டப்பட்டுள்ளன.

- 1ம் தலை முறைக் கணனி மொழி
- 2ம் தலை முறைக் கணனி மொழி
- 3ம் தலை முறைக் கணனி மொழி
- 4ம் தலை முறைக் கணனி மொழி
- 5ம் தலை முறைக் கணனி மொழி

1ம் தலைமுறைக்கணனி மொழி (இயந்திரமொழி) கணனி மொழியிலே இரண்டினமான எண்களைக் கொண்டே நிகழ்ச்சி நிரல்கள் உருவாக்கப்பட்டு அவை கணனி மென்பொருளாக பதிவு செய்யப்பட்டன. இங்கே பயன்படும் இரண்டின்மமொழிகள் (O,1) என்பன ஆகும். இவற்றை கணனியால் புரிந்து கொள்ள முடிந்தது எனினும் மனிதனினால் புரிந்து கொள்வது கடினமாகவே காணப்பட்டது.

இயந்திரமொழி (Computer Lanuage) இயல்புகள் எனப் பின்வரும் விடயங்களைக் காட்டமுடியும் நிகழ்ச்சி நிரல்கள் இரண்டினதும் எழுத்துக்கள் மூலமே எழுதப்படுகின்றன. இதனால் நிகழ்ச்சி நிரல்களை உருவாக்குவது என்பது மிகமிக கடினமாகவே காணப்பட்டது. நிகழ்ச்சி நிரல் வழுக்களை கண்டு திருத்தம் செய்தல் கடினமான காரியம். இதற்கு வன் உறுப்பு /வன்பொருள் பற்றி அறிதல் அவசியம் ஆகும்.

முதலாம் தலைமுறைக் கணனி மொழியிலே காணப்படும் குறைபாடுகள் பல்வேறுபட்ட கணிணிகள் பல்வேறு முறைமைகளைக் கொண்டமையால் அவற்றை வடிவமைப்பதில் ஏற்படுகின்ற கடினத்தன்மை கணனியின் வன்னுறுப்புக்களை இயந்திரமொழியாக மாற்றுவதாலே இலகு வாக மாற்றங்களை மேற்கொள்ள முடியும். ஒவ்வொரு கணனி முறைமையில் எழுதப்பட்ட இவ்வகை நிகழ்ச்சி நிரலினை இன்னோர் கணனிமுறைமையில் நேரடியாகப் பயன்படுத்தப்பட முடியாது.

இரண்டாம் தலைமுறைக்கணனி மொழி என்பது இயந்திரமொழிக்கு பதில் வந்த அசெம்பிளி மொழி என அழைக்கப்பட்டது. இம்மொழியானது இயந்திர மொழியை விட மிகவும் சாதுரிஜமான மொழியாகக் காணப்பட்டது. எனினும் இம்மொழியிலும் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்பட்டன. அவையாவன இம்மொழியானது முற்றுமுழுதாக இயந்திரத்தில் தங்கியுள்ள ஓர் மொழி. இயந்திரமொழியைக் காட்டிலும் விசேடமான மொழி இம்மொழியை நிகழ்ச்சியாக மாற்றம் செய்வதற்கு (Assembler) எனப்படும். ஓர்மொழிமாற்றி அவசியமானது. முதல் இரு தலைமுறைக்கணனி மொழிகளை தாழ்மட்டக் கணனி மொழிகள் என அழைப்பார்.

மூன்றாம் தலை முறைக்கணனிமொழி என்பதும் முதலாம், இரண்டாம் தலைமுறைக் கணனியிலே காணப்பட்ட குறைபாடுகளை நீக்க உருவாக்கப்பட்டன. சாதாரண சொற்களினை கணனி மொழியிலே பயன்படுத்துவதால் மனிதனால் இலகுவிலே விளங்கிக் கொள்ள முடியும். இதனால்தற்காலத்திலே கணனி எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்றது அல்லது பயன்பெறுகின்ற சாதனமாக கணனி விளங்குகின்றது. இதற்கு அடித்தளம் இட்டது மூன்றாம் தலைமுறைக்கணனிமொழி ஆகும். கணனி நிகழ்ச்சி நிரல்களை எல்லா கணனிகளிலும் பயன்படுத்தமுடியாது வன்னுறுப்பு தொடர்பான அறிவு அவசியம் இல்லை. தரவு வகைப்படுத்தி ஒழுங்கமைத்தல் இலகுவானது ஆனாலும் இதிலும் சில குறைபாடுகள் காணப்பட்டன. இவற்றிலே வளங்களை முற்றாகப் பயன்படுத்துதல் மிகவும் கடினமானவை மொழிமாற்றியினைப் பயன்படுத்துவதால் அதிகநேரம் தேவைப்படும். மூன்றாம் தலைமுறைக்கணனி மொழிகளாக Ada oL- 1 Pascal போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம். இவை மிகவும் திறமையான மொழிகள்.

நான்காம் தலைமுறைக் கணனி மொழிகள் எனப்படுபவை மனிதனி நட்புறவு மொழி எனப்படும். இவை மனிதமொழிக்கு மிகக்கிட்டியவை இத்தலை முறைமொழியிலே நிகழ்ச்சி நிரலினை எழுதுவதும் வழுக்களைத் திருத்துவும் இலகுவானது. Forms and Layouts போன்றவசதிகள் மேலதிகமாக இணைக்கப்பட்டிருக்கும். மிகவும் குறைவான அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலமாக கணனியை இயக்கும் வசதிகளைக்கொண்டது. இது இயந்திரத்தை சாராத மொழியாகும். 4ஆம் தலை முறைக்கணனி மொழிக்கு உதாரணமாக Jaba Oeacle Ally போன்றனவாகும். இவை கணனிமொழியில் அற்புத வளர்ச்சிக்கட்டம் எனலாம்.

ஐந்தாம் தலைமுறைக்கணனிமொழி மனிதனுடைய மொழியிலே நிகழ்ச்சியினை அமைத்து கொள்ள முடிகின்றது. மனித மொழிக்கு அமைவான ஒழுங்கற்ற கட்டமைப்பு காணப்படினும் இயங்கும் நிகழ்ச்சி நிரலை இயக்க அதிகம் நேரம் தேவைப்படும். இயந்திரத்தில் தங்காத மொழிகள் இவ் ஐந்தாம் தலைமுறைக் கணனி மொழியிற்கு உதாரணமாக LISP (Listing Processing) குறிப்பிடலாம். 5 ம் தலைமுறைக் கணனி மொழிகள் மனிதனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது ஐந்தாம் தலைமுறைக்கணனி மொழியில் தீர்மானமான தகவல்களைப் பெற பெரிதும் உதவுகின்றது. தற்போது 6 ஆம் தலைமுறைக்கணனி மொழியை உருவாக்கப் பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**தோல்வியைக் கண்டு அஞ்சாதே அதிலிருந்து நீ கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது.**





# தாயின் பிரிவு

செல்வன். அ. மதிராஜ்
கலைப்பிரிவு 2014

கண் விழித்த முதல் நாளில்
கண்டு கொண்ட உன் உருவம்
கண் முன்னே தோன்றிய
கலங்கரை விளக்கம்மா
கரை சேர வழிசெய்த
துடுப்பு நீயம்மா
நீயிருக்கும் போது உனை
நானும் சினந்திருப்பேன்
நீ இறந்த போது தினம்
நானும் தனித்திருக்கேன்
கைக்குள்ளே அடைகாத்த
கண்ணிமை போல்
வளர்த்தெடுத்தாய்
கைக்குள்ளே நான் வளர்ந்து
கண்முன்னே தெரியு முன்பே
காலன் கணக்கெழுதி
முடிந்ததும் ஏனம்மா
நீயிருக்கும் போது சேர்ந்திருந்த
பல சொந்தம் உனைப் பிரிந்த உடன்
காணாமல் போனதம்மா
தனிமரமாய் ஆனேனம்மா
சுகமான வாழ்வென்றால்
சுமை தாங்கும் உன்மடிதான்
மீண்டும் ஒரு தடவை
ஏங்குகிறேன் உன் மடிக்காய்
தலை வருட வருவாயா
விடை கூறு என் தாயே.



# நட்பின் பெருமை


செல்வி. த. அபிராமி

தரம் 11C


நட்பு என்ற சொல்லே புனிதம் வாய்ந்ததாகும். இரண்டு உயிர் ஜீவன்களுக் கிடையில் ஏற்படும் தொடர்பே நட்பு ஆகும். நட்பானது எதையும் எதிர்பார்க்காது அன்பை மட்டும் எதிர்பார்ப்பதாகும். நட்புக்கு வயது அந்தஸ்து சாதி மதம் நிறபேதங்கள் எதுவுமே கிடையாது. நட்புக்குள் தன்னலம் இருக்காது. நட்புக்கு ஆண் பெண் வித்தியாசம் கிடையாது.

நாம் அனைவரும் இப்பூமியில் நல்ல வாழ்வு வாழ்ந்திட ஒரு நல்ல நட்பு அவசியம் நட்பு மிகவும் புனிதமாகும்.

*"உடுக்கை இழந்தவன் கை போலாங்கே*
*இடுக்கண் களைவது நட்பு"*

*"முகநக நட்பது நட்பு அன்று நெஞ்சத்த*
*அகநக நட்பது நட்பு"*

ஆம் இது வள்ளுவர் கூறும் நட்பு. உண்மை நட்பு என்பது தன்னுடைய நண்பனுடைய சந்தோசங்களில் சேர்ந்து பங்கேற்றலும் அவனது துன்ப வேளையில் அவனை விட்டு நீங்காமல் அவன் கூடவே இருந்து ஆறுதல் கூறுவதே ஆகும். மொத்தத்தில் நண்பனின் சந்தோசம், துன்பம் ஆகிய இரண்டிலும் இணைபிரியாது இருப்பதே உண்மை நட்பாகும். நண்பர்களாய் இருப்பதற்கு புரிந்துணர்வு கட்டாயம் அவசியம் ஆகும்.

நட்பென்பது ஒருவனது இன்பகரமான நிகழ்வுகளில் மாத்திரம் பங்கேற்று அதாவது அவன் கூடவிருந்து இன்பம் அனுபவித்து விட்டு அவன் துன்பத்துக் குள்ளாகும் போது அவனை விட்டுப் பிரிவது உண்மை நட்பு அன்று. மற்றும் நாம் எமது நண்பர்களுடன் நகையாடல் பொருட்டு மட்டும் நட்பு கொள்ளாது அவன் தீயவழியில் சென்றால் அதனைச் சுட்டிக்காட்டி அவனை திருத்துவதும் நட்பின் பண்பாகும். முகத்தோடு முகம் மகிழ்ச்சி கொள்ளும் நட்பு நட்பன்று. மனதோடு மனம் மகிழ்ச்சி கொள்வதே உண்மையான சிறந்த நட்பு ஆகும். நட்புக் கொண்டவர்க்கு துன்பம் வரும் போது தொடர்ந்து அவர் துன்பத்தை நீக்கி நல்ல வழியில் செலுத்தி அவனைத் தாங்கி தன்னால் செயலாற்றாவிடத்து அவனோடு உடனிருந்து தானும் துன்பத்தை அனுபவித்தலே உண்மை நட்பு ஆகும்.

ஆடை குலைந்தவனுக்கு விரைவில் கை சென்று உடை நழுவாமல் காத்தல் போல நண்பனுக்குத் துன்பம் வந்த போது சென்று உதவுவதே நட்பு. இன்றைய இளம் சமூகத்தவர் தமது வாழ்வியல் பாதையில் பல விடயங்களை சாதிப்பதற்கு நண்பர்களது துணையைப் பெற்றுக் கொள்கின்றனர். நட்பிற்காக எத்தனையோ தகுதி வாய்ந்த சிறப்பு

வாய்ந்த பல விடயங்களையெல்லாம் தூக்கி எறிந்து விடுகின்றார்கள். பண்பாடு, கலாசாரம், விழுமியம் அனைத்தும் தொலை தூரம் சென்று விடுகின்றன. நண்பனின் உயரிய வாழ்விற்காய் ஒளிமயமான எதிர்காலத்துக்காய் தன்மானம் சுயகௌரவத்துக்காய் முழுமூச்சாக துணைநிற்பது தூய நட்பின் குணமாகும்.

அத்தகைய புனித நட்பு மரணத்தின் பின்னும் வாழும் ஆனால் இன்று பலர் நட்பைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்கின்றார்கள். இத்தகையோரால் நட்பு என்ற சொல்லுக்கே களங்கம் ஏற்பட்டு விடும். இன்று நாம் உண்மையான நண்பர்களைக் காண்பது அரிது. ஆனாலும் ஆங்காங்கே சிலர் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

நாம் நட்பின் சிறப்பை எடுத்து நோக்கினால் எமது சமய இதிகாச புராணங்களில் சித்தரித்துக் காட்டப்பட்டள்ளன. பண்டைய காலத்தில் எல்லோரும் பகைமை மறந்து நட்பாய் பழகினார்கள். அதனால் அவர்களது வாழ்வு சிறந்து விளங்கியது. எமது இந்து சமய இலக்கியங்களான இராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றில் பல இடங்களில் நட்பு பற்றி வெளிக்காட்டப்படுவது சிறப்பானது ஆகும். உதாரணமாக கர்ணன் மற்றும் துரியோதனனது நட்பு இராமன் மற்றும் குகன் ஆகியோரது நட்பு என்பன சிறப்பான பாத்திரங்களாகும்.

இனி புனித நட்பின் சின்னமாய் விளங்கும் சம்பவங்கள் சிலவற்றை காண்போம். மகாபாரதத்திலே குந்திதேவி தனது மகன்தான் கர்ணன் என அறிந்து கர்ணனிடம் சென்று தங்களுடன் (பாண்டவரோடு) சேர்ந்து கொள்ளுமாறு கூறுகின்றாள் ஆனால் கர்ணன் என்ன கூறுகின்றான் தெரியுமா? இத்தனை நாட்களும் என்னை பாதுகாத்த நண்பனான துரியோதனனை விட்டு ஒரு கணமும் நீங்க மாட்டேன் என்று கூறுகின்றான். இதன் மூலம் துரியோதனன் மீது கர்ணன் கொண்ட நட்பு வெளிக்காட்டப்படுகின்றது.

இனி நாம் இன்னுமொரு முக்கிய சம்பவத்தைப் பார்ப்போம். ஒரு நாள் துரியோதனனின் மனைவியும் கர்ணனும் தாயம் விளையாடிக் கொண்டிருக் கின்றார்கள் ஆட்டம் சுவாரஸ்யமாய் போய்க் கொண்டிருக்கிறது. அவ்வேளை பார்த்து துரியோதனன் அவ்விடம் வருகிறான். அவ்வேளை தன் கணவன் வந்து விட்டானே என துரியோதனனது மனைவி அவளது கணவனுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று திடீரென ஆட்டத்தைவிட்டு எழுகின்றாள். அதை கண்ட கர்ணன் ஆட்டம் இடையிலேயே நிற்கப்போகிறது என எண்ணி அவளது இடையில் கட்டப்பட்டிருந்த இடுப்புக்சங்கிலியைப் பற்றி இழுக்கின்றான். உடனே அது அறுந்து முத்துக்கள் அனைத்தும் நிலம் முழுக்க சிதறின. அதைக்கண்ட துரியோதனன் என்ன கூறுகின்றான்? முத்துக்களைப் பொறுக்கவா? அல்லது கோர்க்கவா? என்று கூறுவதன் மூலம் துரியோதனன் கர்ணன் மீது கொண்ட உண்மையான நம்பிக்கையான நட்பு வெளிவருகின்றது.

மேலே குறிப்பிட்ட இரு சந்தர்ப்பங்கள் மூலம் நாம் நட்பின் சிறப்பை உணரக்கூடியதாய் உள்ளது. எனவே நாம் அனைவரும் எமது நண்பர்களுடன் விட்டுக் கொடுத்து புரிந்து கொண்டு உலகே போற்றும் வகையில் நண்பர்களாய் இருப்போம் என உறுதி பூணுவோமாக.

"நட்பு என்ற மூன்றெழுத்தில் பூமியைக் கட்டி நீ நிறுத்து"



# எனது நண்பன்

செல்வன்.ர. கீர்த்திகன்
தரம் 7C

வசதி கொண்டு நாங்களும்
வாழ்ந்து வரும் போதிலே
உடன் சேர்ந்து கொள்பவன்
உண்மையான தோழனா?

துன்பம் கொள்ளும் நேரத்தில்
துயர் துடைக்கும் நோக்கிலே
தன் கரத்தை நீட்டுவான்
தூய என் நண்பனே

யதுசன் என்ற நல்லவன்
நான் விரும்பும் தோழனே
அடுத்த வீட்டு காதரும் அன்பு
கொண்ட நண்பனே

கனிந்த உள்ளம் கொண்டுடின்
காகம் கூட நண்பனே
உலகிலுள்ள உயிர்களை
உண்மையுடன் நேசிப்பாய்

**குழம்பிய குட்டையில் முகம் தெரியாது**
**குழப்பமான உள்ளத்தில் நியாயம் தெரியாது.**



# கவிதைத் தமிழ்

செல்வன். கு.நேருஜன்
கலைப்பிரிவு 2012

எங்கும் எதிலும் நிறைந்திருக்குது தமிழ்
வீரத்தலைவன் அவன் உரைக்கின்றான் – பெரும்
தேசம் எங்கும் எதிரொலிக்கும் – நீதியின் குரல்
ஏற்றம் காண உழைத்திடும் உழவர் செயல்

கண்ணும் கருத்தும் இவை அனைத்தும்
எண்ணும் எழுத்தும் இவை இரண்டும்
மண்ணின் மைந்தன் எனை மயக்கும்
தமிழ் அமுதம் தந்த குரல்

நாமகளின் நாவிலிருக்கும் கலைகள்
அறுபத்து நான்குணர்த்தும்
தமிழ் அதுவின் பொருள்கள்
நாற்திசையும் வீசும் தென்றல் – அது
நாமிருக்க வாழ்த்தும்.

**தவறை ஒப்புக் கொண்டு அதனைத் திருத்திக் கொள்பவன் வெற்றி பெறுவது நிட்சயம்.**



# புத்திசாலி

செல்வி. க. நிலச்சனா
தரம் 9 C

தமிழ்மாறன் என்ற ஒருவன் மீன் பிடித்தொழில் செய்து கொண்டிருந்தான். ஒருநாள் அவன் மீன்களைப் பிடித்து கூடையில் போட்டுக் கொண்டு வந்தான். அப்போது சிறிய கரடிக்குட்டி ஒன்று இறந்து கிடந்ததைப் போல் நடித்தது. அதைப் பார்த்து விட்டு சிறிது தூரம் வரை நடந்து வந்ததும் திரும்பிப் பார்த்து விட்டு அவ்விடத்திற்கு மீண்டும் சென்று அக்குட்டிக் கரடியை கூடையில் போட்டுக்கொண்டு நடந்தான்.

செத்துக் கிடப்பதைப்போல பாசாங்கு செய்த கரடி கூடையில் அவன் பிடித்திருந்த மீன்களை கவ்விக் கொண்டு கூடையிலிருந்து தப்பியோடியது. இதனைக் கண்ட தமிழ்மாறன் கவலையுடன் சென்று கொண்டிருந்தான். அப்போது நிறைய மீன்களுடன் கரடிக்குட்டி வருவதைப் பார்த்த ஓநாய் ஒன்று எப்படி இவ்வளவு மீன்கள் உனக்கு கிடைத்தது எனக்கேட்டது. அதற்கு கரடி நான் செத்தது போல் நடித்தேன் . தமிழ்மாறன் கூடையில் மீன்களுடன் என்னையும் பிடித்துக்கொண்டு போனான். நான் மீன்களைக் கவ்விக்கொண்டு கூடையில் இருந்து தப்பி வந்தேன் என புத்திசாலிக் கரடி கூறியது.

அடுத்த நாள் ஓநாயும் செத்தது போல் கிடப்பதைப் பார்த்தான். கரடி ஏமாற்றி மீன்களைப் பறித்துச் சென்றதால் கோபமுற்ற தமிழ் மாறன் பெரும் கோலினால் ஓநாயை நையப்புடைத்தான். ஓநாய் தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடியது. புத்திசாலித்தனம் மட்டும் போதாது சமயோசித புத்தியும் வேண்டும் என்ற கூற்றை மனிதர்களாகிய நீங்கள் மறந்து விடாதீர்கள்.



# வரும் படிப்பு

செல்வன். எஸ். கோயிதன்
தரம் 8C

விழித்திரு தூங்காது
விடிவு வரை படித்திரு
அப்போது வரும் படிப்பு

பசித்திரு பகல் முழுதுமே
புசிக்காதிருந்து படி
அப்போது வரும் படிப்பு

தனித்திருந்து தவமாக
தாகம் தீரும் வரை படி
அப்போது வரும் படிப்பு

சுத்த மனதுடனே
சூழலை உருவாக்கி
தக்க வயதினிலே படி
அப்போவரும் படிப்பு

காலத்தே பயிர்செய்
கடந்தகாலம் வராது
ஞாலத்தே இறைதொழுதுபடி
அப்போ வரும் படிப்பு

ஆசானை நேசி உன்
ஆசிரியரை பூசித்து பாடம்
யோசனதெனப்படி
அப்போ வரும் படிப்பு



# விடியலை நோக்கி

செல்வி. சி நிறோஜி

தரம் 11C

வயலூர் என்ற ஒரு அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் தான் செல்வராசாவின் குடும்பமும் இருந்து வந்தது. செல்வராசாவின் குடும்பத் தில் அவனது மனைவி கமலமும் மகன் ராஜாவும் மட்டுந்தான். அவனது குடும்பம் பெயருக் கேற்றாப் போலல் லாது வறுமை யிலேயே வாடியது. செல்வராசா ஒரு தொழிலாளி. அவனது வியர்வைதான் அவர் களுக்கு உணவு போட்டது.

ராஜா பத்துவயதுச் சிறுவனாக இருந்தான். ஒருநாள் அவனது தாய் அவனைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டு சமைத்துக் கொண்டிருந்தாள். அப்போது பக்கத்து வீட்டுப் பார்வதி கமலத்தை அவசரமாக அழைத்தாள். உடனே கமலம் வாசலை நோக்கி விரைந்து சென்றாள். "என்ன பார்வதி அக்கா என்ன விடயம்" பார்வதி தயங்கினாள். கமலத்தின் மனம் ராஜாவை எண்ணி திகிலடையத் தொடங்கியது. அக்கா ஏன் மறைக் கிறியள் சொல்லுங்கோ என்றாள். பார்வதி ஒருவாறு செல்வராசா கல்லுடைத்துக் கொண்டி ருக்கும் போது மேலே உருண்டு வந்த கல்லி னால் தாக்கப்பட்டு மரண மடைந் ததைக் கூறிமுடித்தாள். இதைக் கேட்ட கமலம் மயங்கி விழுந்தாள். செய்வ தறியாது திகைத்த பார்வதி கமலத்தின் மயக்கத்தை தெளிவித்து பின் அயலவருக்கு அறிவித்து செல்வராசா விற்கு செய்ய வேண்டிய இறுதிக் கடன்களையும் செய்வித் தாள்.

சில நாட்கள் சென்றன. கமலம் மெல்ல மெல்ல துயரிலிருந்து மீண்டாள். தன்னை நம்பி ஒரு இளம் ஜீவன் வாழ்வதை எண்ணி வேதனை யடைந்தாள். இதனால் அவள் வீட்டு வேலைக்கு செல்ல எண்ணினாள். பார்வதியின் கணவரது உதவியுடன் ஒரு மைல் தொலைவில் உள்ள வீட்டில் சமையல் வேலைக்கு செல்லத் தொடங்கினாள். அவளுக்கு மாத சம்பளமாக வீட்டுக்காரர் பத்தாயிரம் ரூபா கொடுத்தார். இதனைப் பெற்று தனது மகனை பாடசாலைக்கு அனுப்பினாள். அவனும் நன்றாகப் படித்து கெட்டிக்காரன் ஆனான். கமலம் தனது வேலைநேரத்தை விட மேலதிநேரமும் வேலை செய்து பணம் பெற்று அதை வங்கியில் போட்டு தனது மகனின் எதிர்காலப் படிப்புக்கென ஒதுக்கி யிருந்தாள்.

காலம் வெகுவிரைவில் உருண்டு ஓடியது. மகன் ராஜா படிப்பில் கெட்டிக்காரன் என்றாலும் அவன் சேரும் நண்பர் கூட்டம் தவறானதாக இருந்தது. அவர்கள் படிப்பில் மட்டுமல்லாது குணத்திலும் தவறானவர்கள். ராஜாவை அடிக்கடி விளையாட அழைப்பார்கள். பீடி பிடிக்கச் சொல்லிக் கேட்பார்கள். ஆனால் ராஜா பீடியெல்லாம் பிடிக்க மாட்டான். தாய்க்குப்பயம். இருந் தாலும் அவர்கள் தொடர்பை தாய் விடும்படி கேட்டாலும் அவர்களுடனேயே பொழுது போக்கி வந்தான். இதனால் வீட்டில் சிறுசிறு சச்சரவுகள் வரும். இருந்தாலும் தாய் கமலம், தந்தையும் இல்லாமல் தன்னை எவ்வளவு கஸ்டப்பட்டு வளக் கிறாள் என்று அவனுக்கு தெரியும். அப்போது சாதரண தரத்திலே கல்வி பயின்று கொண்டிருந்தான். முதலாம் தவணைப் பரீட்சையில் அவன் பத்தாம் பிள்ளைக்குத் தள்ளப் பட்டிருந்தான். இதனை அறிந்த அவனது வகுப்பு ஆசிரியர் பெற்றோர் கூட்டத்தில் கமலத் திடம் அவனைப் பற்றி குறையாகக் கூறினார். கமலம் ஆசிரியரிடம் "இல்லை ரீச்சர் என்ர மகன் நல்லவன். அவனுக்கு இது ஒரு படிப்பினை யாக இருக்கட்டும். என்னில் அவனுக்கு

ரொம்பவும் பிரியம். என்னை விட்டாவேறை யார் அவனுக்கு? அவன் அடுத்தமுறை முதலாம் பிள்ளையாக வருவான் என்றாள்" இதை பயத்தால் ஒளித்துக் கொண்டிருந்த ராஜா காதில் கேட்டது. அன்றிலிருந்து தனது தீயநண்பர் களைக் கைவிட்டான். தாயின் மனம் கோணாது நடந்து கொண்டதுடன் நன்றாக மீண்டும் படிக்கத் தொடங்கினான்.

பலமாதங்கள் சென்றன. ராஜா சாதாரணதர பரீட்சையில் தோற்றி யிருந்தான். தனது பெறுபேற்றுக்காகக் காத்திருந்த அவனுக்கு ஒன்பது பாடங் களிலும் முதல்தரசித்தி என்பதில் அளவில்லா மகிழ்வைத்தந்தது. தாய் கமலம் மிகவும் மகிழ்ச்சி யடைந்தாள். அவன் உயர்தரப் பரீட்சை எழுதி மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப் பட்டிருந்தான்.

அடுத்து அவன் பல்கலைக்கழகம் செல்ல வேண்டியிருந்தது. இதற்கிடையில் கமலமும் உழைத்து உழைத்து பட்டினிகிடந்து எலும்பும் தோலுமாகிப் போனாள். அவளால் இனி உழைக்க சக்தி இல்லை. எனவே அவ்வூரில் இருந்த சத்தியவான் என்ற செல்வந்தரிடம் ஒரு தொகைப் பண உதவி கேட்டாள். அவர் இரக்கமுள்ளவர். ராஜாவின் திறமை பற்றி அவருக்கு தெரியும். எனவே இவன் திருப்பித்தருவான் என்ற நம்பிக்கை இருந்தது. எனவே ஒரு தொகை பணத்தை ராஜாவிற்கு ஐந்து வருடங்களில் ஒப்படைக்குமாறு கொடுத்தார். காலங்கள் ஓடிக் கொண்டு சென்றன.

ராஜாவும் பல்கலைக் கழகத் திலிருந்து மருத்துவராக வெளியே றினான். இதைத் தெரிவிக்க தனது தாய் கமலத்திற்கு ஒரு கடிதம் அனுப் பினான். தான் பட்டணத் திலிருந்து தாயிடம் எதிர்வரும் சனிக்கிழமை வருவதாகவும் அவரை அங்கு அழைத்து சென்று ஒரு வீட்டிலே வாழப்போவதாகவும் தயாராக இருக்குமாறும் கடிதத்தில் குறிப்பிட்டி ருந்தான். இதைப் பார்த்த கமலத்துக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. கண்ணீர் விட்டு ஆனந்தமாக அழுதாள். இறைவனைத் தொழுதாள். சனிக்கிழமை வந்தது. அன்று அதி காலை எழுந்து ஆலயம் சென்று வழிபட்டு விட்டுவந்தாள் கமலம். மகனின் வரவை எண்ணி வாசலில் பார்த்துக் கொண்டிருந் தாள் அப் போது அங்கே ஒரு கார் வேகமாக வந்தது. அவளது வீட்டின் முன் வந்து நின்றது. அதிலிருந்து ராஜா வந்தான். தாயைக் கண்டதும் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுவிட்டு கட்டி யணைத்துக் கொண்டான். பின்பு வீட்டினுள் சென்று கமலத்துடன் உரையாடிவிட்டு தாயுடன் சென்று தனக்குப் பணம் தந்த சத்தியவானுக்கு வட்டியுடன் பணத்தை திருப்பிக் கொடுத்து நன்றி கூறிவிட்டு வந்தான். பின்பு பார்வதி அக்கா வீட்டுக்கும் சென்று அவர்களின் நலம் விசாரித்து விட்டு தாம் பட்டணம் செல்லும் விடயத் தையும் கூறினர்.

பார்வதி அக்காளும் கவலையுடன் விடை கொடுத்தாள். தனது வீடு வந்த கமலம் தனது பொருட்கள், உடைகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு மகனுடன் வெளியேறி னாள். இதை யெல்லாம் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந் தனர் அவ்வூர் மக்கள். "கமலம் பட்ட கஸ்டத்திற்கு அவளுக்கு கடவுள் ஒரு கஸ்ரமும் விடார்" கமலம் கஸ்ரப் பட்டாலும் மகனை நல்ல வனாத்தான் வளர்த்திருக் கிறாள்." "பெத்தவையை எப்ப விட்டுட்டு போகலாம் என்று இருக்கிற இப்பத்தே பொடி யளுக்கு ராஜா பெத்த தாயை மறக்காமல் அடக்க ஒடுக்கமாக நிற்கிறானே அவனைப் போல எல்லோரும் இருக்கனும்" என்ற வார்த்தைகள் அம்மக்களின் வாயின் மூலம் ஓடி ஓடி விளையாடின.

தாய் கமலம் தனது மகனுடன் பட்டணத்தை நோக்கி காரில் புறப்படும் காட்சியை மக்கள் கவன மாக பார்த்துக் கொண்டிருந் தனர். தாமும் தமது பிள்ளைகளை இவ்வாறு ஆக்க வேண்டும் என்ற ஆவலுடன் ஆம்.... கமலம் இன்று தன் மகனுடன் சென்று கொண்டிருக் கிறாள் விடியலை நோக்கி.



# கண்டறியாத சுடுநீர்ப் போத்தல்


செல்வி. ம. கம்சாஜினி

தரம் 11C


**கந்தையா:-** குரோதியிலே கொடிய புயல் கும்மாளம் போட்டதன் பின் மாரியிலே மழையற்று மாவிளைச்சல் அழித்தபின் மார்கழியும் பிறக்கிறது. மறுமலர்ச்சி துளிர்கிறது. மகிழ்ச்சியுடன் மனித இனம் மாண்படையமுனைகிறது.

**வடிவேலு:-** கவிபாடும் கந்தையா கனகோடி வணக்கங்கள். புதிதாக வாங்கிய வெந்நீர்க் குடவை எப்படியோ?

**கந்தையா:-** சிலகாசு போனாலும் அசல்ச்சாமான். அடடா தடுதாலிப்பட வேண்டாம் அதிகாலை சுடுகோப்பி குடி நீயும். இதனுடைய தார்பரிய தத்துவத்தை விரிவாக விளங்காது விழலாநீ கதைக் கிறாய்.

**வடிவேலு:-** தரமான கோப்பி தான் அது போக இதை நீ கேள் திரவமாக்கிய வாயு தேக்கி வைத்திடவென்று ஜேம்ஸ் டீவார் என்பவரின் திறமையால் தோன்றியது வெந்நீர்க் குடவையெனும் வெற்றிடக் குப்பியிது.

**கந்தையா:-** உள்ளுக்கிருப்பவற்றை ஒவ்வொன்றாய் உரையன் நீ.

**வடிவேலு:-** கடத்தல் மேற்காவுகையும் கதிர்வீசல் தன்னோடும் மூன்று முறையினிலே வெப்பம் இடம் பெயரும். ஊடகத்தின் அடுத் தடுத்த மூலக்கூறுகள் கூட்டை நின்ற நிலையினிலே கைமாற்றின் கடத்தல் அது பதார்த்தமே தானசைந்து வெப்பம் இடம் பெயர்பின் மேற் காவுகை அது தான் ஊடகத்தின் துணையாயிற்று. வெற்றிடத்தை ஊடறுத்து வெய்யோன் ஒளிக்கற்றை பற்றி யெமைச் சுடுதல் தான் கதிர்வீசல் முறையாலே.


**கந்தையா:-** இவ்வகைகளில் வெப்பம் இடம்பெயரா வகை எதுவோ?

**வடிவேலு:-** வெளிச்சுவரின் உட்புறமும் உட்சுவரின் வெளிப்புறமும் வெள்ளிமுலாம் பூசியதும் இடையுற்ற வளியை எல்லாம் வெளியே அகற்றுவதால் வெற்றிடமாய்ப் ஆகியபின் தக்கைகம்பளி போன்ற அரிதிற்கடத்திகளை.

**கந்தையா:-** பக்கபலமாய் சுற்றிப் பவுத்திரமாய்த் தகரத்துள் வைத்தவுடன் கோப்பியேன் சூடாறாதிருக்கிறதோ?

**வடிவேலு:-** வெற்றிடத்தால் கடத்தல் மேற்காவுகையும் நடவாது கதிர் வீசல் குறையாலே கடந்து செல்லும் வெப்பமது வெள்ளிமுலாம் பூச்சினிலே தெறித்துத் திரும்பிவிடும்.

**கந்தையா:-** வெந்நீர் குடவைக்கு விளக்கம் தெளிவாச்சு பின்னேரம் வா போவோம் எம்பிக்கு வரவேற்பாம்.



# தேடல்கள் ஓய்வதில்லை

திரு. செ. பஞ்சநாதன்
ஆசிரியர்

நாளும் பொழுதும் நலமே கற்று
நீளும் உலகில் நற்பயன் பெற்று
சூழும் இடரெலாம் சுத்தமாய் அற்று
வாழ வழிகள் தேடிடு மனமே

கற்றல் இலகெனக் கற்றோர் அறைவர்
நிற்றல் கடிதென நிறைந்தோர் உரைப்பர்
முற்றிலும் உணர்ந்த முனிவரே அறிவர்
பற்றிடம் நெறியைத் தேடிடு மனமே

அன்பது பூணின் அகிலமே அடங்கும்
வன்முறை காணின் வையமும் மடங்கும்
எம்முறை நாடின் ஏற்றம் கிடைக்கும்
அம்முறை நாளும் தேடிடு மனமே

நல்லவர் உள்ளம் நடுநிலை கொள்ளும்
புல்லரைச் சாரின் பூமியும் தள்ளும்
அல்லலை செய்யின் அகிலமும் எள்ளும்
வல்லமை பெறவழி தேடிடு மனமே

ஐயம் எழுந்தான் அறிவு பெருகும்
மையல் புகுந்தால் அதுவும் மழுங்கும்
உய்திடும் வழிதனை உய்த்து உணர்ந்து
செய்திடும் முறைகளைத் தேடிடு மனமே

குப்பையில் இருக்கும் குன்றி மணி
சிப்பியில் இருக்கும் முத்து மணி
காட்சிகள் காணும் கண்ணு மணி
மீட்சியைப் பெறவழி தேடிடு மனமே

வறுமை இருப்பினும் வாட்டம் இன்றி
பொறுமை தன்னையே பூண்டு நின்று
மெலிந்தவர் போல முனைப்பது இன்றி
நலிந்திடா(து) நல்வழி தேடிடு மனமே

பணிவு உள்ளோர் பெருமை கண்டு
துணிவு உள்ளோர் பணிதல் உண்டு
தளர்ந்திடா உறுதி நீ தினமும் கொண்டு
வளர்ந்திட வழி முறை தேடிடு மனமே

களவது என்பது கலந்திடா வண்ணம்
உளமதில் வேண்டும் உயர்ந்த எண்ணம்
ஊக்கம் இருப்பின் உயர்ச்சி திண்ணம்
ஆக்கும் கலைகளைத் தேடிடு மனமே

ஆசிரியார் என்றும் அறிவை ஊட்டுவர்
மாசிலாத புது நெறியை நாட்டுவர்
வியந்திடும் முறையில் விளக்கம் காட்டுவர்
உயர்வுறும் வழிகளைத் தேடிடு மனமே



# பெண் சிங்கம்
# ஜான்சி ராணி லட்சுமிபாய்

**செல்வன்.சி.ரவிசங்கர்**

**கலைப்பிரிவு 2014**

ஆங்கிலேயர்களின் ஆட்சியை எதிர்த்து ஆங்காங்கே இந்தியாவில் புரட்சிகள் நடந்து கொண்டிருந்த காலம் அது. ஆங்கிலேயர்கள் தந்திரமாக ஒவ்வொரு இராச்சியத்தின் மீதும் படை எடுத்து அதைக் கைப்பற்றி வந்தனர்.

ஜான்சியை ஆங்கிலேயர் முற்றுகை இட்டபோது, கோட்டைக் குள்ளிருந்து "ஜான்சியைக் கைப்பற்ற நினைக்கிறார்களா? தைரியம் இருந்தால் முயன்று பார்க்கட்டும்! என்று ஒரு சிங்கக் குரல் கர்ஜித்தது. அந்தக் குரலுக்குரியவர் ஒரு மன்னரோ அல்லது இளவரசரோ அல்ல. அது ஒரு பெண் சிங்கத்தின் குரல். ஆம்! அவர்தான் வீரத்தில் தன்னிகரற்று விளங்கிய ஜான்சிராணி லட்சுமிபாய்! 1830 ம் ஆண்டு மோரோபந்த்தாம்பே பகீரதிபாய் தம்பதிகளுக்கு கோடிசூரியப் பிரகாச முகத்துடன் மகளாய்ப் பிறந்த அந்த வீராங்கனைக்கு பெரியோர் சூழ்ந்து " மணிகர்ணிகா என்று பெயர் சூட்டினர். "மனு" என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர் தன்னையொத்த சிறுமிகளால் முற்றும் வேறுபட்டுக் காணப்பட்டார்.

பிரகாசமான முகம், கம்பீரமான நடை, தன்னிகரில்லா செயற்பாடு ஆகியவற்றின் மூலம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய இவர் மிகச்சிறிய வயதிலேயே எல்லாக் கலைகளையும் கற்று சிங்கக்குட்டியாய் காணப்பட்டார். வாள் வீச்சிலே யாரும் இவருக்கு நிகரில்லை. சிறுவயது முதலே ஆண்களுக்கு சரிசமனாய் நின்று சண்டையிட்டு பல ஆண்களை தோற்கடித்தாள். சிறு வயதிலேயே ஆண்களுக்கு நிகராக வாள்சண்டை போடும் அந்த அதிசய மங்கையை கண்டு அனைவரும் வியந்து போற்றினர் என்பதை விட தெய்வமாக போற்றினர் எனலாம்.

மணிகர்ணிகாவின் அழகையும் ஆற்றலையும் கண்டு வியந்த ராஜ குடும்பத்தினர் மருமகளாக அவரை வரிந்தனர். வெகு விரைவிலேயே அவர் ஜான்சியின் மன்னன் கங்காதாராலவை மணம்புரிந்து ராணி லட்சுமிபாய் என்ற பெயர்பெற்றார். இவர் சகலரையும் ஆதரித்து அரவணைத்துப் போற்றும் ஒரு தாயாகவே வாழ்ந்தார். மணமக்கள் இருவரும் கருத்துத்தொருமித்து இல்லறத்தை நல்லறமாய் நடாத்தினர். இதன் பயனாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

ஜான்சி நகரமே விழாக் கொண்டாடியது. அரச குடும்பத்தினர் மகிழ்ந்தனர். அந்த மகிழ்ச்சி பலகாலம் நிலைத்து இருக்கவில்லை. அந்த குழந்தை அற்ப ஆயுளில் இறந்து போனது. இதைக் கேள்வியுற்ற ராணி அனலிலிட்ட புழுவாய் துடித்தார், கதறினார் எந்தப் பிரயோசனமும் இல்லை. சுற்றத்தவரது ஆறுதல் வார்த்தைகளால் ஆறுதலடைந்தார். பின்னர் தம்பதிகள் இருவரும் தாமோதர்ராவ் என்னும் குழந்தையைத் தத்து எடுத்துக் கொண்டனர்.

ராணி லட்சுமிபாய்க்கு பதினெட்டு வயது நிரம்பியபோது, மன்னர் கங்காதரராவ் இறந்து போக ராணி இளம் வயதிலேயே விதவையானாள். சுவீகரம் எடுத்தமகன் குழந்தையாக இருந்தாலும் லட்சுமிபாய் தானே ஜான்சியை ஆட்சி செய்யத்தொடங்கினாள். போர்க்கலையில் எவ்வளவு வல்லமை வாய்ந்தவளாக இருந்தாளோ அதற்கு சமனாக நிர்வாக திறமையிலும் சிறந்து விளங்கிய ராணியைக் குடிமக்கள் தெய்வமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அப்போது ஆளுனராக இருந்த டெல் ஹௌசி திடீரென ஒரு புதிய சட்டத்தை இயற்றினார். வாரிசுகள் இல்லாத ராஜ்ஜியங்கள் அவற்றை ஆண்டு வந்த மன்னர்கள் காலஞ்சென்றபின் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் வரும் என்ற சட்டத்தை அமுலாக்கினார். அதன்படி, ஜான்சி தங்களுக்கே உரியது என்று ஆங்கிலேயர் அறிவிக்க, அதை ராணிலட்சுமிபாய் கடுமையாக எதிர்த்தாள். உடனே ஜான்சியை பலவந்தமாக கைப்பற்ற ஒரு பெரும்படை ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்டது.

இதன்போது தனது போர்வீரர்களுக்கு ராணி லட்சுமிபாய் கூறிய வாசகம் "ஆபத்து வரும்போது கோழை மாதிரி பின்வாங்கக் கூடாது. அது மரணமாகவே இருந்தாலும் எதிர்த்துப் போராட வேணடும்" என்று கூறி கோட்டைக்குள்ளே தன்வீரர்களை போருக்கு தயாராகும் நிலையில் நிறுத்தி வைத்தாள். ஒவ்வொரு கோட்டை வாயிலுக்கும் தானே நேரில் சென்று காவல் ஏற்பாடுகளை மேற்பார்வை செய்தாள். கோட்டை மதில் சுவர்களில் ராணியின் ஏற்பாட்டின்படி பீரங்கிகள் நிறுத்தப்பட்டன. தானே நேரில் சென்று வீரர்களை உற்சாகப்படுத்தினாள். ஆனால் அதற்கு பெரிதும் தேவை இருக்கவில்லை. ஏனெனில் தாங்கள் தெய்வமாக போற்றும் ராணிக்காய் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்க தயாராக நின்றனர்.இறுதியில் ஒருநாள் கோட்டைக் கதவுகளை திறந்து ஆங்கிலேயர்களை எதிர்கொண்டாள். ஜான்சி ராணியின் தலைமையில் ஜான்சிசேனை வெற்றி வாகை சூட ஆங்கிலேயப்படை தோல்வியுற்றது. இதை ஆங்கிலேயரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும் பெரும்படையை ஜான்சிக்கு அனுப்பிவைத்தனர்.

ராணியின் வீரத்தைக் கண்டு வியந்த தளபதி "ரோஸ்" அவளைப் பற்றி "வீரம், சாமர்தியம், விடாமுயற்சி ஆகிய மூன்றும் சேர்ந்த உருவானவள் ஜான்சி ராணி. குடிமக்கள் மீதும் படைவீரர்கள் மீதும் அவள் காட்டிய அக்கறையும் பரிவும் சொற்களால் சொல்லமுடியாது. அவர்கள் காட்டும் பக்திக்கும் அளவே இல்லை. இவை அனைத்தும் சேர்ந்து ஜான்சி ராணி லட்சுமிபாயை வலிமை வாய்ந்தவளாய் ஆக்கி உள்ளது" என்று கூறியுள்ளார்.

ஆனால் இம்முறை மிகப்பெரிய அளவில் படைதிரட்டி வந்த ஆங்கிலேயர்களை ராணியால் நீண்டகாலம் சமாளிக்க முடியாது போனது. அதனால் அவள் மற்ற மன்னர்களிடம் உதவிகோர விரைவிலேயே தாய்தாதோப்பே என்ற மராத்திய மன்னர் ஒரு பெரும்படையுடன் வந்து ஜான்சியை சூழ்ந்து கொண்டார். ஆனால் ஜான்சியை சேர்ந்த வீரன் ஒருவன் பணத்துக்கு ஆசைப்பட்டு ராணிக்கு துரோகம் செய்தான். கோட்டைக் கதவுகளில் ஒன்றைத்திறந்து விட, ஆங்கிலேயப்படை ஜான்சி கோட்டைக்குள் புகுந்தது.

சற்றும் எதிர்பாராத இந்த துரோகச் செயலைக்கண்டு அதிர்ந்த ராணி அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். அவளுக்கு மூன்று வழிகள் புலப்பட்டன. பகைவரிடம் சரண் அடைவது, கடைசிமூச்சுவரை போராடி இறப்பது. அல்லது அப்போதைக்கு தப்பித்துச் சென்று படைப்பலத்தை பலப்படுத்தி போரிடுவது என்ற வழிகளில் அவள் நீண்ட சிந்தனையின் பின் மூன்றாவதை தேர்ந்து எடுத்தாள்.

ஒரு இரவில் அவள் ஆண் உடை அணிந்து ரகசியமாய் அரண் மனையை விட்டு வெளியேறினாள் தன் குழந்தையை துணியில் சுற்றி முதுகில் கட்டிக்கொண்டாள். குதிரையில் ஏறி தப்பிச் செல்லும் போது, எதிர்ப்பட்ட ஆங்கிலேய வீரர்களால் ஆண் வேடத்திலிருந்த ராணியை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ராணி அரண்மனையை விட்டு வெளியேறிய செய்தி மறுநாள் காலையில் தான் ஆங்கிலேயத் தளபதிக்கு தெரிந்தது. உடனே அவன் தன் படைகளை ராணியைச் சிறைப்பிடிக்க அனுப்பினான். ராணியைத் துரத்தி சென்ற வீரர்களை ராணியுடன் வந்த ஜான்சி வீரர்கள் எதிர் கொண்டனர்.

தப்பித்து ஓடும் நோக்கத்தை தற்காலிகமாய் கைவிட்ட ராணி தன் வீரர்களுடன் சேர்ந்து கோபாவேசத்துடன் போரிட்டாள். துணைத்தளபதி ராணியின் வாள்வீச்சுக்கு இரையானான். பின்னர் அவள் தப்பியோடி சால்பி ராஜ்ஜியத்தை அடையும் போது ராணியின் குதிரை இறந்து விட்டது. அதன்பின் ராணி குதிரையை விடுத்து ஓட்டமாக ஓடி குவாலியூரை அடைந்தாள். அங்கிருந்த மன்னன் தலைமறைவாக ஓடிவிட்டதால் அவளை குவாலியூர் மக்கள் ராணியாக அங்கீகரித்தனர்.

ராணி குவாலியூரில் இருப்பதை தளபதி ரோஸ் அறிந்து கொண்டான். அவளை மீண்டும் தலை எடுக்காது அழிக்க விரும்பிய ரோஸ் பெரும் படையுடன் சென்று குவாலியூர் மீது படை எடுத்தான். மீண்டும் ராணிக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் பயங்கரப் போர் மூண்டது. ராணியின் ஒவ்வொரு வாள் வீச்சுக்கும் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். ராணியால் சமுத்திரம் போல இருந்த ஆங்கிலேய வீரர்களை அதிக காலம் சமாளிக்க முடியாது போனது. ராணியின் தரப்பில் வீரர்கள் இறந்து கொண்டுவர ராணியின் படைப்பலம் குறைந்த வரலாயிற்று.

ஆங்கிலேயர்களது கை ஓங்கிக் கொண்டே சென்றது. ராணியின் போர் வீரர்களில் இறுதியில் இருபதுபேர் மட்டுமே மிஞ்சினர். அந்த நிலையிலும் ராணி அபாரத்துணிச்சலுடன் போரிட்டு நூற்றுக்கணக்கான பகைவர்களை ஒவ்வொரு கணமும் தன் வாளுக்கு இரையாக்கி கொண்டிருந்தாள். ஆனால் ஒரு நிலையில் மேற்கொண்டு போரிட இயலாமல் உடலெல்லாம் காயங்களுடன் தரையில் வீழ்ந்தாள். பகைவர்களிடம் உயிருடன் சிக்காமல் அவளை அவளது வீரனொருவன் ஒரு குடிசையில் கொண்டு போய்ச் சேர்த்தான். தனது இறுதி காலம் நெருங்கிவிட்டதை அறிந்த ராணி "என் உடலைக் கூட பகைவர்கள் தொடக்கூடாது. பார்க்கக் கூடாது. நான் இறந்த பின் என் உடலை தீயிட்டு கொழுத்தி விடு. இது என் கட்டளை" என்றாள்.

அப்போது அந்த பெண் குலத்திலகத்தின் வயது இருபத்தொன்று மட்டுமே.

**நூற்றுக்கணக்கான சாத்தியமற்ற சூழ்நிலைகளில் நெப்போலியன் தமது வாய்ப்புக்களால் உருவாக்கியது போல நீங்களும் செயற்படுங்கள்.**



# இந்து அறவியல்

திருமதி. பு. இராஜசேகர்
ஆசிரியர்.

உலக சமயங்கள் அனைத்தும் தத்தமது கொள்கைகளில் வேறுபட்டாலும் அற ஒழுக்க சிந்தனைகளில் ஒன்றுபட்டுள்ளன. இவ்வுலக வாழ்க்கைக்கும் மறுமை வாழ்க்கைக்கும் ஒழுக்கம் மிகவும் அவசியம் என்பதே இதற்குக் காரணம் ஆகும். இந்த வகையில் ஒழுக்கம் அல்லது அற விழுமியங்கள் இந்து மதத்திலும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது சனாதன தர்மம் என்றும் வைதீக தர்மம் என்றும் சிறப்பிக்கப்படும் இந்துமதம் மக்கள் வையகத்தில் வாழ்வாங்கு வாழப்பல வழிகளை எடுத்துக்கூறுகின்றது. அவற்றுள் இந்து அறவியல் என்பதும் ஒன்றாகும். இந்து என்பது தர்மம், நீதி, கடமை, ஒழுங்கு போன்ற பொருள்களை குறிக்கும். எனவே இந்து சமயம் சார்ந்த ஒழுக்கவியல் சிந்தனைகளையும் அறச்சிந்தனை களையும் உள்ளடக்கியதே இந்து அறவியல் எனலாம்.

இந்த வகையில் இந்து அறவியல் பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு வடமொழி, தமிழ்மொழி என்பவற்றில் உள்ள இலக்கியங்கள் துணை புரிகின்றன. அதாவது வேத, உபநிடதம், பகவத்கீதை, புராண இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் போன்ற வடமொழி நூல்களும் திருக்குறள், திருமந்திரம், சிலப்பதிகாரம், ஆத்திசூடி, மூதுரை, கொன்றை வேந்தன், நாலடியார், பன்னிரு திருமுறைகள் போன்ற தமிழ்நூல்களும் இவ்விடயம் பற்றி எடுத்துக் கூறுகின்றன.

இந்துக்களின் முதல் நூல்களுள் ஒன்றாகிய வேதங்களை நோக்கின் அறம் பற்றி முதன் முதலில் குறிப்பிடும் இலக்கியமாக இது விளங்குகின்றது. இதனாலேயே "வேதோகிலோ தர்மமூலம்" என வேதங்கள் சிறப்பிக்கப் படுகின்றன. அதாவது இவை பிற்காலத்தில் எழுந்த அனைத்து தர்மங்களுக்கும் அடிப்படை என்பது இதன் பொருளாகும். மற்றும் வேதப்பாடல்களில் வர்ணன் அறக்கடவுளாகப் போற்றப் பட்டுள்ளதுடன் அவன் கடைப்பிடிக்கும் ஒழுங்கு, ரிதம், நியதி, விரதம் என்று அழைக்கப்படுகின்றது. அத்துடன் உலகினைத் தாங்கு வதும் அதை நிலை நிறுத்து வதும் ரிதமாகிய அறமே எனவும் வேதங்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.

அடுத்து உபநிடதங்களை நோக்கும் போது முண்டக உபநிடதத்தில் "சத்தியம் ஏக ஜயதே" எனும் அறக்கருத்து கூறப்பட்டுள்ளது. தைத்திரிய உபநிடத்தில் குருகுலவாசம் முடிந்த வீடு திரும்பும் மாணவனுக்கு குரு கூறும் உபதேசங்களில் "சத்தியம் வததர்மம் சர" என்னும் மகாவாக்கியங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும் தர்மசாஸ்திரங்களில் தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டும் விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தவகையில் வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடு, புருடார்த்தக் கோட்பாடு என்பன தனிமனிதனது சமூகத்தினதும் கடமைகளாக கூறப்பட்டுள்ளன. மற்றும் தூய்மை தன்னடக்கம், பற்றின்மை, சத்தியம், அகிம்சை ஆகிய அறப்பண்புகள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. மேலும் "விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலும் அறம் ஆகும் என மனுதர்ம சாஸ்திரம் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றும் புராணங்களை நோக்கின் தர்மத்தையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்பவன் தனது பாவங்களிலிருந்து விடுபட்டு ஆத்மீகஞானம் அடைவான் என்பது புராணக் கதைகள் ஊடாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக மாம்பழக்கதை ஊடாக தாய் தந்தையே உலகம் என்பதும் அரிச்சந்திரன் கதை ஊடாக உண்மை பேசுவதும் அறமாக விளக்கப்பட்டுள்ளது.

மேலும் இதிகாசங்களை நோக்கும் போது அன்பு, சத்தியம், பொறுமை, பொதுநலம், கொடை, மாதா, பிதா, குரு, தெய்வம், செய்நன்றிமறவாமை, பணிவு என்பன அறச்சிந்தனைகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அடுத்து பிரஸ்தான திரயங்களில் ஒன்றாகிய பகவத்கீதை மனித அறம் பற்றிய ஒரு நூலாகும். இதில் "யாதோ தர்மஸ்ய ததோ ஜெய" என்னும் மகா வாக்கியம் காணப்படுகின்றது. அதாவது எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உண்டு என்பது இதன் கருத்தாகும். மற்றும் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" செயலைத் துறவாதே செயலின் பலனைத் துற" என்னும் மகா வாக்கியங்களும் அறக் கருத்துக்களாக இடம் பெறுகின்றன.

மேலும் கிறிஸ்துவுக்கு பிற்பட்ட சங்கநூல்களிலும் அறம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக புறநானூறு அரசியல் தர்மம் பற்றி வலியுறுத்து கின்றது. அதாவது "அறம் துஞ்சும் செங்கோல்" என கூறுகின்றது. மற்றும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பன போன்ற அறக் கருத்துக்களும் இவற்றில் காணப்படுகின்றன.

மற்றும் அறநெறிக்காலம் எனப்போற்றபடும் சங்க மருவிய கால நூலாகிய சிலப்பதிகாரம் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என வலியுறுத்துகின்றது. மேலும் திருக்குறளில் அறத்துப்பாலில் வள்ளுவர் முப்பத்தியெட்டு அதிகாரங்களில் அறம் பற்றி வலியுறுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக.

*"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றத அறம்"*

*"ஊழிற் பெருவலியா உள மற்ற ஒன்று*
*சூழினும் தான் முந்துறும்"* என்றும் கூறப்படும் கருத்துக்கள் குறிப்பிடத் தக்கதாகும்.

அடுத்து திருமூலரின் திருமந்திரமும் எல்லா மக்களும் எளிதில் பின்பற்றக் கூடிய அறக்கருத்துக்களை எடுத்து இயம்புகின்றன. எனலாம். அதாவது.

"யாவர்க்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை......" என்னும் பாடலில் அறத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மற்றும் பன்னிரு திருமுறைகளிலும் இவ்விடயம் பற்றி கூறப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக சம்பந்தர் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்...." என்றும் அப்பர் "என் கடன்பணி செய்து கிடப்பதே" என்றும் சுந்தரர் "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்றும் பாடியுள்ளமை நோக்கத்தக்க தாகும்.

மேலும் சோழர்கால நூல்களுள் ஒன்றாகிய சிவஞான சித்தியாரில் அறம் மேலானதாக கூறப்பட்டுள்ளது. உதாரணமாக ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம் உபசாரம், ஒழுக்கில்லாத அறங்கள் என்னும் பாடலைக் குறிப்பிடலாம்.

அடுத்து நாயக்கர் காலத்தில் எழுந்த நீதிவெண்பா, உலகநீதி முதலிய நூல்களிலும் பல அறவியல் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன எனலாம்.

மற்றும் தமிழில் தோன்றிய நீதி நூல்களான ஔவையாரின் ஆத்திசூடி கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நூல்கள் மக்களுடைய வாழ்க்கை நெறியை ஒழுங்கு படுத்தும் அற நூல்களாக அமைந்துள்ளன. இந்தவகையில் ஆத்தி சூடியை நோக்கின்.

*" அறம் செய விரும்பு"*
*" நன்றி மற வேல்"*
*" ஓதுவது ஒழியேல்"*
*" வீடு பெற நில்"* போன்ற கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

கொன்றை வேந்தனில் கூறப்படும் அறக்கருத்துக்களாக

*"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"*
*"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"*
*" பிறர்மனை புகாமை அறம் எனத்தகும்"*

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

*மற்றும் நல்வழியில்*
*"நீறில்லா நெற்றி பாழ்"*
*"நெய் இல்லா உண்டி பாழ்"*
*"ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்"*

போன்றவை அறவியல் சிந்தனைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

அடுத்து வெற்றி வேற்கையில் காணப்படும் அறக்கருத்துக்களாக

*"செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்"*

*"வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்"*

*"மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை"*

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இன்று அறச்செயல்கள் அருகிக்கொண்டு சென்றாலும் ஆங்காங்கே ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள், மூலமாக அறப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இன்று இல்லறத்தானால் பேணப் படும் அறம் முழுமையாக மேற்கொள்ளப்படாவிட்டாலும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றமையையும் காணமுடிகின்றது. எனவே இந்து மதத்தில் அன்றிலிருந்து இன்று வரை அறம் பற்றிய சிந்தனைகள் மிகவும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ள தனையும் மனிதனின் இன்பதுன்பங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளதனையும் அறிய முடிகின்றது.

**தியாகம் செய்யவும், மன்னிக்கவும், நன்றி கூறவும், தெரிந்து கொண்டு விட்டால் நாம் மகிழ்ச்சியைத் தேடி ஓட வேண்டியதில்லை. அதுவே நம்மைத் தேடி வரும்.**



# சேவையின் சின்னம்

## அன்னை தெரேசா

## (வரலாற்றுக் கட்டுரை)

செல்வன். கே. சுலக்ஷன்
தரம் 10C

ஆதரவற்றவர்களின் அன்புத் தெய்வம், கருணையின் ஓர் வடிவம், சிவனினதும் கர்த்தரினதும் அருட் கொடை என்றெல்லாம் போற்றப்படும் பெருமை மிக்கவர் அன்னை தெரேசா. ஐரோப்பாக் கண்டத்தில் அல்பேனியா வில் விவசாயக் குடும்பம் ஒன்றில் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் (27.08.1910) பிறந்தார் அன்னை தெரேசா. அவர்கள். இவ் வூரின் அரசினர் பாடசாலை யில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். குழந்தைகள், பெரியோர் கள், நோயாளிகள் போன்ற பலரோடும் இளமையிலே அன்பாகவும் மரியா தையாகவும் பழகி வந்தார்.

கிறிஸ்தவ மதத்தில் ஆழ்ந்த பற்றும் உறுதியும் கொண்டவர் தெரேசா. இயேசு பெருமானைப் போன்று மக்களுக்குத் தாமும் தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணம் சிறு வயதிலிருந்து அவரது கனவாகவும் விருப்பமாகவும் இருந் தது. மக்களது தேவைக்காக தனது பணத்தையும் தம்மையும் அர்ப்பணித் தார்.1925 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து அல்லற்படும் மக்களுக்குத் தொண்டாற்ற விரும்பினார். கிறிஸ் தவமத பொதுநலச் சேவை என்னும் அமைப்பில் தன் இளமைப் பருவத்திலேயே அவர் சேர்ந்திருந்தார். இதனால் இந்தியா வந்து தொண்டாற்றுவதற்கு அனுமதி தருமாறு அங்குள்ள தலைமைப் பாதிரியாரைக் கேட்டுக் கொண்டார். ஆனால் இவரது இளவயதைக் காரணம் காட்டி அனுமதி வழங்கப் பாதிரியார் மறுத்து விட்டார்.

1928 ஆம் ஆண்டு அவர் லோரேட்டா கன்னியர் மடத்தில் சேர்ந்தார். பின்னர் இந்தியாவிற்கு விந்துடார்ஜிலிங்கில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். ஆசிரியர் பயிற்சி யின் பின் கொல்கத்தாவிற்கு வந்து அங்குள்ள கன்னியர் மடத்தில் நிரந்தர உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார். கொல்கத்தா வீதிகளில் அம்மையார் கண்ட காட்சிகள் அவரது உள்ளத்தைப் பெரிதும் நெகிழச் செய்தன. பசிக்கொடுமையினாலும் நோயா லும் மக்கள் வருந்துவதைக் கண்டு மனம் வருந்தினார். பஞ்சத் தால் வாடும் மக்களுக்கு உணவு வழங்கியதோடு ஏழைக் குழந்தை களுக்கு கல்வி உதவியை செய்ய வேண்டும் என அவரது கருணை யுள்ளம் விரும்பியது. ஆனால் கன்னியர் மடத்து விதிகள் அவற் றினை மேற்கொள்ள இடம் அளிக்க வில்லை. இது குறித்து ரோமாபுரி யில் உள்ள தலைமை மதகுருவிற்கு பலமுறை எழுதினார். அவரது விடா முயற்சி பலனளித்து 1948 ஆம் ஆண்டு

ரோமாபுரியிலிருந்து அனுமதி கிடைத்ததும் தன்னலமிக்க மகிழ்ச்சி கொண்டார். கன்னியர் மடத்து உடைகளைச் சாதாரண சேலையி னையே தெரிந்து எடுத்துக் கொண்டார். நீலக்கரை யுடன் கூடிய வெள்ளைப் புடைவையை உடுத்தி வெள்ளை முடிக்கைச் சட்டையைப் போட்டுக் கொண்டார். இடது தோளில் உலோகத்தினாலான சிலுவைச் சின்னம் தொங்க, காலுக்குச் சாதாரண செருப்பு அணிந்து கொண்டார்.

சேரியின் மத்தியிலே ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். சேரியைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டார். சேரி வாழ் மக்கள் அன்னையுடன் அன்பு டனும், மரியாதையுடனும் பழகினர். அவரது பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். சேரியில் உள்ள சிறுவர் களுக்குக் கல்வி புகட்ட முற்பட்டார். பள்ளிக்கூடம் ஒன்றை அங்கு ஆரம்பித்துப் பாடம் சொல்லிக் கொடுத்தார். சிறுவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து உதவினார்.

1950 ஆம் ஆண்டு "அன்பின் தூதுவர்கள்" என்று பொருள்படும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். இவ்வியக்கம் மக்கள் ஆதரவுடன் வளரத்தொடங்கியது சாதி, மத வேறுபாடு எதுவுமின்றி இவ்வியக் கத்தில் பலர் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். பாடசாலைகள் அமைத் தல் மருத்துவ வசதி இல்லாத இடங்களில் மருத்தவ மனைகள் அமைத்தல் குழந்தைகள் காப்பகங் கள், அனாதை இல்லங்கள் அமைத்தல் ஆகிய பணிகளை இவ் வியக்கம் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது.

அநாதைக் குழந்தைகளை ஆதரித்து வளர்க்கும் பொருட்டு "நிர்மல் கென்னடி இல்லம்" என்ற இல்லத்தை நிறுவினார். தொழு நோயாளர்களுக்காகத் தொழு நோயாளர் இல்லத்தை தொடக் கினார். சாவின் விளிம்பில் தவிக்கும் அநாதைகளுக்கு உதவும் பொருட்டுத் தருமசாலையை ஏற்படுத்தினார். இந்த இல்லங்களை நடத்துவதற்காக அன்னை தாமே வீதிகளில் இறங்கி நிதி திரட்டினார். அவரது வாழ்வில் நிகழ்ந்த மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும்.

40 ஆண்டுகளின் முன் ஒருநாள் அழுக்குத் தெரு ஒன்றின் ஓரத்தில் அவர் தொடங்கிய நிறுவனத்திற்கு நன்கொடைக்காகக் கையேந்தி நின்று கொண்டிருந்தார். அன்னையின் அரும்பணிகளை உலகம் போற்றிய வேளையில் அவரை நாடிப் பல பரிசுகளை வழங்கினார். இப்பரிசுகள் போல பாப்பரசர் விலையுயர்ந்த கார் ஒன்றைப் பரிசாக வழங்கினார். இப்பீரியல் இரசாயனத் தொழில் நிறுவனத்திற்கு இவருக்கு 13 இலட்சம் பெறுமதியான சொத்தை கொடுத்து இவ் நிறுவனத்திற்கு பெருதும் உதவினார்.

அனைத்து உயிர்களிடத்தும் அன்பையும் நம்பிக்கையையும் துளிரச் செய்த அன்னைதெரேசா தமது 87 ஆம் வயதில் 1977 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி காலமானார். கருணை பொழியும் அத்திருவடிவம் மறைந்து விட்டது. அன்னாரின் திருநாமம் அனைத்துலகிலும் என்றும் நின்று நிலவும் என்பது மகிழ்ச்சி.



# உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் புகைப்பிடிக்கும் பழக்கம்

செல்வி. ச. பாமினா
கலைப்பிரிவு 2014

இன்றைய மனித சமூகம் குறிப்பாக இளைஞர் சமுதாயம் எதிர் நோக்கி இருக்கும் பிரச்சினைகளுள் புகைப்பிடித்தல் மிகவும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இது தனிநபர் சார்ந்த ஒரு பிரச்சினையல்ல சமுதாயத்தையே அச்சுறுத்தும் பிரச்சினையாக மாறியுள்ளது.

இன்று உலக நாடுகளில் மக்கள் சமுதாயம் என்றுமில்லாதவாறு புகைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிக் கொண்டு வருகிறது. ஏழை பணக்காரன், சிறுவர், முதியவர், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரையும் இந்த புகைப்பழக்கம் விட்டு வைப்பதில்லை.

உலகளாவியரீதியில் புகைத்தல் பழக்கம் மனிதவர்க்கத்திற்கு கேடு விளைவிக்கும் காரணியாக இருக்கின்றது. புகைப்பழக்கம் இன்று நேற்று வந்ததொன்றல்ல. பன்நெடுங்காலமாக மனிதர்கள் பாவித்து இன்று உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் புகுந்து விட்ட நாகரிகம் தான் புகைப்பழக்கம். சிறியோர் முதல் பெரியோர் வரை வயது வித்தியாசம் இன்றி புகைப்பிடிப்பதற்கு தானாகப் பழகுவது என்பது மிகவும் குறைவு. புறச்சூழலின் செல்வாக்குத்தான் அவர்களை புகையின் பால் இழுக்கின்றது.

இதனைப்பாவிப்பதால் மனிதனுக்கு என்ன கிடைக்கின்றது. உண்மையில் இதில் ஒரு நன்மையும் இல்லை ஆனால் மரணத்தை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். அநேகமானோர் பொழுது போக்கிற்காகவும் விருந்துபசாரத்திலும் நண்பர்கள் ஒன்று கூடும் இடங்களிலும் சினிமாத் தியேட்டர்களிலும் புகைப்பிடிக்கின்றார்கள். எத்தனையோ பேர் புகையிலையில் அடங்கியிருக்கும் நச்சுத்தன்மையை அறியாமல் இன்று புகைத்தலுக்கு அடிமையாகிக் கொண்டு வருகின்றார்கள். புகைப்பிடிப்பதில் இளவயதினரே அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். வளர்ந்தவர்கள் புதிதாக ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றன.

புகைத்தல் காரணமாக 50 சதவீதமானவர்கள் இருதய நோயினாலும் 40 சதவீதமானவர்கள் புற்று நோயினாலும் மரணிக்கின்றனர். இத்துடன் புகைப்பழக்கம் உடைய ஒருவருக்கு பிறக்கும் குழந்தைக்கு 40 சதவீதம் புற்று நோய்வர வாய்ப்புண்டு ஒரு நாளைக்கு 10 சிகரெட்டை புகைப்பவன் ஒரு நாளைக்கு 11 நிமிட ஆயுள் குறைகின்றான்.

இதனால் மற்றவர்களைவிட 10 வருடங்களுக்கு முன்னதாகவே மரணத்தைத் தழுவிக் கொள்கின்றான். மேலும் இலங்கையில் பாடசாலை செல்லும் மாணவர்கள் 7 வீதமானோர் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

புகைப்பிடிப்பதால் புகைப்பவர் அருகில் இருப்பவரின் கண்பார் வைக்கும் கேடு விளைவிக்கின்றது. முகத்துக்கு நேராக புகைப்பது கேடு விளைவிக்கும் என்று பலரும் அறிந்தாலும் உங்கள் நண்பரோ, குடும்பத்தினரோ அருகில் இருந்து புகையை சுவாசித்தால் விழித்திரையின் மையப்பகுதி பாதிக்கப்படும். மேலும் உங்களுடைய படிக்கும் திறன்பாதிக்கப்படுவதோடு பார்வை சம்பந்தமான குறைபாடுகளும் ஏற்படும். ஆகவே நீங்கள் புகைப்பிடிக்காவிட்டாலும் உங்கள் அருகில் இருப்பவர்கள் புகைத்தால் தீமை இருவரது கண்களுக்கும் ஏற்படும். மேலும் புகைப்பிடிப்பவர்களுக்கு பக்கத்தில் சிறுவர் இருந்தால் சிறுவர்களின் மூளை வளர்ச்சிகுன்றும்.

எனவே நீங்கள் சற்று தள்ளியே நில்லுங்கள். புகைப்பவரிடம் புகைப் பிடிப்பதை நிறுத்துங்கள் நிறைய நன்மை கிடைக்கும் என்று மருத்துவ உலகம் அவ்வப்போது கூறிவருகின்றது. இருந்த போதிலும் புகைப்பிடிப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகிறதே தவிர குறைவில்லை. மேலும் புகைப்பிடிப்பதை தவிர்த்தால் பல்வேறு ஆபத்தில் இருந்து தப்பிக்கொள்ளலாம். என்று மருத்துவ உலகம் கூறுகின்றது.

மாரடைப்பு ஏற்படும் அபாயம் குறைதல், இரத்தத்தில் கொலஸ்ரோல் குறைதல், நுரையீரல் பாதிப்பு குறைதல், இருமல் கட்டுக்குள் வருதல், நுரையீரல் புற்றுநோய்க்கான வாய்ப்புக் குறைதல், இரத்தத்தில் புற்றுநோய்க்கான வாய்ப்புக் குறைதல், உணவின் சுவையினை அறிதல், வெண்மை அடையும் பற்கள் வயிற்றுக்குடல் புண்நீங்குதல் போன்ற பல்வேறு நன்மைகளை புகைப்பிடித்தலை நிறுத்துவதன் மூலம் கிடைக்கப்பெற முடிகின்றது.

புகைப்பது இல்லை என உறுதியான முடிவினை எடுத்தல், புகைப் பிடிப்பவரை விலகியிருத்தல், பணத்தை மிச்சம் பிடிக்கவும் முடியும், தினமும் திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்தல், போசாக்கான உணவுகளை உண்ணுதல் குறிப்பாக பழவகைகளை உண்ணுதல் போன்றன புகைத்தலை விட பின்பற்றும் முறைகள் ஆகும்.

ஈற்றில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை கருத்தில் கொண்டு உடலில் சுகத்தைப் பெற வேண்டுமாயின் புகைத்தலை விட்டு சுகதேகியாக மக்கள் வாழவேண்டும் அதுவே உலகிற்கும் நமக்கும் நன்மை பயக்கும்.



# நுண்கலையின் வரிசையில் ஆடற்கலையின் முக்கியத்துவம்

செல்வி. யோ. வைஸ்ரபி,
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்,
தேசியக்கல்வியற் கல்லூரி.

நடனக்கலையானது இந்துக்கள் பேணி வளர்த்த நுண்கலையில் அதிக செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. இந்துக்களினுடைய ஆன்மீக நெறியிலும் சமய நெறியிலும் வாழ்க்கை முறையிலும் கல்வி முறையிலும் இந்தக்கலை செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆன்மாக்களின் ஈடேற்றம் பற்றி வலியுறுத்தி கூறுகின்ற இந்துமதத்திலே அந்த ஈடேற்றத்தை பெற்றுக் கொள்வதற்காக கூறப்படும் மார்க்கங்களில் நடனமும் ஒன்றாகும். முறைப்படி இறைவனை நாடிவழிபட்டால் இந்த ஈடேற்றத்தினை அடைய முடியும்.

இறைவனிடம் தோன்றிய கலை இறைவனுக்கே அர்ப்பணம் செய்யும் வகையில் காணப்படுகின்றது. இந்துப் பண்பாட்டு வரலாற்றிலே மிகப் பழைய காலத்திலிருந்து இந்து கலாசாரத்தின் சகல துறைகளோடும் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

சமயத்திலே நடனக்கடவுள் வடிவங்கள் பல காணப்படுகின்றன. நடனக் கிரியைகளும் வழிபாட்டு முறைகளும், நடன உபசாரங்களும் இறைவனுக்காக பின்பற்றப்படுகின்றது. ஆலயங்களில் நடன மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. ஆலயங்களில் நடனத்தை பிரதிபலிக்கின்ற சிற்பங்கள் ஓவியங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நடனக்கலையானது சமயத்திலே செல்வாக் குச் செலுத்தியுள்ளது.

சிறந்த நடனக் கடவுள் மூர்த்தம் எனப் போற்றப்படுவது நடராஜர் மூர்த்தமாகும். இந்த நடராஜர் மூர்த்தமானது ஐந்தொழில் தத்துவத்துவத்தை குறித்து நிற்கின்றது. இவர் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் வடிவமாக அமைந்துள்ளார்.

ஆரம்பக் கல்வி முதல் பட்டப்படிப்புக்கள் வரை நடனம் கற்பிக்கப்படுகின்றது. பட்டப்படிப்புக்களிலும் நடனத்தைக் கற்பிக்கின்றார்கள். பட்டப்படிப்பிலே நடனத்தைக் கற்று முடிப்பவர்களுக்கு நடனக்கலை மாமணி என்ற பட்டம் வழங்கப்படுகின்றது. பட்டப்படிப்பு பின் நடன முதுகலைமானி, நடனக்கலாநிதி, ஆகிய பட்டங்கள் வழங்கப்படுகின்றது. கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளை கலை நிறுவனத்தை நிறுவி நடனத்தைக் கற்பித்து வருகிறார்கள். உதாரணமாக இராமநாதன் நுண்கலைப்பீடம் குறிப்பிடலாம். இவ்வாறு நடனக் கலையானது கல்வித்துறையிலே செல்வாக்குப் பெற்றுத்திகழ்கின்றது.

வாழ்க்கை முறையிலும் நடனம் செல்வாக்குச் செலுத்துகின்றது. வாழ்க்கையிலுள்ள இன்பகரமான துன்பகரமான நிகழ்வுகளில் எல்லாம் நடனம் பின்பற்றப்படுகின்றது. சடங்குகள் வைபவங்களில் இந்த நடனம் அதிகமாக பின்பற்றப்படுகின்றது.

இவ்வாறு நடனக் கலையானது நுண்கலைகளிலே அதிக செல்வாக் கைப் பெற்றிருப்பதனால் ஆரம்ப காலங்களில் இருந்து அறிஞர்கள் அதனை வளம்படுத்தி வந்துள்ளார்கள். இந்த வகையிலே இந்துக்கள் பேணிய நுண்கலைகளில் நடனக்கலை உன்னத இடத்தினைப் பெற்று இன்று வரை திகழ்கின்றது. என்பதில் ஐயமில்லை.

**மற்றவர்கள் எதை உங்களுக்குச் செய்யக் கூடாது என்று நினைக்கிறீர்களோ அதை மற்றவர்களுக்கும் செய்வதை தவிருங்கள்.**



# இலங்கையில் நாட்டியக்கலை வளர்ச்சியும் அதன் பாங்கும்.

திருமதி.பகீரதி நகுலேஸ்வரன்,
நடன ஆசிரியை.

உலகளாவிய ரீதியில் பரத நாட்டியம் என்னும் தமிழரின் ஆடற் கலையானது கோயில் கலையான சதிர் மரபுக் கலையினூடாக காலக்கிரமத்தில் பலதரப்பட்ட பாங்கு பண்பாட்டுக் கலை, கலாசார, நாகரிக, சம்பிரதாய விழுமியங்களால் மெருகூட்டப்பட்டு வளர்ந்து ஆன்மீகம் தோய்ந்து காலக்கிரமத்தில் பரத நாட்டியமாயிற்று.

ஆடற்கலை அரசனான நடராஜர் பெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு, நடராஜப் பெருமானாலேயே ஆடப்பெற்று தத்துவார்த்தரீதியில் ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிவகுத்த ஓர் அருங்கலை இப் பரதக்கலையாகும்.

இத்தகைய ஆடற்கலை வடிவமானது இலங்கையில் 1950 ஆண்டுக்கு பின்னரே அக்கால இளம் சமூகத்தினரால் உறுதியாக சக்தியுடன் பெரிதும் போற்றப்பட்டது. ஆடற்கலையை பலரும் பலதரப்பட்ட இடங்களுக்கு (மத்திய இந்தியா) சென்று இக்கலையை பல்வேறு நிறுவனங்களிலும் கலைக் கூடங்களிலும் தனிப்பட்ட பிரபல்யம் வாய்ந்த நடன வித்துவான்களிடமும் குருகுலவாசமாக மிகுந்த பிரயாசையுடன் கற்றுத்தேறி தாய்நாடு திரும்பினர். இலங்கையின் பல பாகங்களிலும் குறிப்பாக தலைநகர் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய முன்னணி நகரங்களில் இவர்களால் இக்கலை வடிவம் வளமுடன் வளர்க்கப்பட்டது.

அக்கால மாணவசமூகம் இக்கலையின் உயரிய பாங்கினை பண்பாட்டுக் கோலங்களை உணர்ந்து ஆர்வத்துடன் கற்றுத்தேறினர். அக்கால ஆசிரியர் மாணவசமூகத்தின் பாங்கும் பங்களிப்பும் உயர்கலை வளம் போற்றும் நோக்கும், அர்பணிப்பு நிறைந்ததாயும், அர்த்த முள்ளதாயும் பரந்தும் விரிந்தும் விளங்குகின்றது. சேவை மனப்பான்மை செறிந்த ஆசிரிய மாணவ சமூகம், அக்கால கலைவளர்ச்சிக்கு வித்திட்டது.

முதலில் கலாசார நாட்டியம் சாஸ்திரியம் தோய்ந்த ஆடல் வடிவங்களுக் கேற்ப இவ் ஆசிரியர்களால் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதுவே ஏராளமான நாட்டிய மணிகள், இக்கலை பால் ஈர்ப்புக் கொள்ள வழிவகுத்தது.

மேலும் அவர்களது கலையுணர்வின் பிரதிபலிப்பினை அவர்களது ஆடற்தரம், அபிநயம், அந்தசுத்தம், அடவு, சுத்தம், முகபாவம் போன்ற அம்சங்களின் ஊடாக செவ்வனே உணர முடிந்தது.

மேலும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நடன உருப்படிகள், தேவாரங்கள், ஆன்மீகப் பதங்கள், கீர்த்தனங்கள் மற்றும் கவிதை உலக தத்துவார்த்தப் பாடல்கள் என்பன அக்கால ரசிகப் பெருமக்களைப் பெரிதும் கொள்ளை கொண்டன. இக்கலை மூலம் ஆன்மீகப் பக்தி உணர்வு ரசிகப் பெருமக்களிடையே வித்திடப்பட்டு வளர்க்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்டகாலப் பகுதியில் இதன் பால் மக்களிடையே ஏற்பட்ட பெருமதிப்பு பாடசாலை மட்டத்திலும் ஏற்பட்ட பெருமதிப்பு பாடசாலை மட்டத்திலும் ஈர்க்கப்பட்டதன் விளைவாக பாடசாலை மட்டத்தில் இக்கலை மெருகூட்டி வளர்க்க ஏதுவாயிற்று.

குறிப்பாகவும், சிறப்பாகவும், நாட்டிய நாடகங்கள் என்பன ஒரு குறிப்பிட்ட புராண இதிகாசக் கதையை கருப்பொருளாகக் கொண்டு நாட்டிய நெறியாகச் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்தன. இவை தவிர பல்வேறு தனிப்பட்ட ஆசிரியரால் அவர்களது தனிப்பட்ட கலை நிறுவனங்கள் மூலம் "குறவஞ்சி" நாட்டிய நாடகங்கள் "சிவகாமியின் சபதம்" " அனார்கலி" போன்ற கதைகளைக் கருப்பொருளாகக் கொண்டு நெறியாக்கம் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது.

இந்நாட்டிய நாடகங்கள் மூலம் சாதாரண மத்தியதர வர்க்கச் சிறார்கள், கதையின் கருப்பொருளை உணர்ந்து கொண்டது மட்டுமன்றி அப்பாத்திரங்களின் ஒப்பனை ஆடை அலங்காரம் ஆகியவற்றின் மூலம் பாத்திரங்களின் பாங்கினை, பண்பாட்டுக் கோலங்களை, அவற்றின் இயல்புகளை மிக இலகுவாக அறிய ஏதுவாயிற்று. இவை தவிர தமிழ் இலக்கியத்தின் ஆழத்தை இந்து மத தத்துவத்தின் சன்மார்க்கத்தினை, தர்மத்தின் அர்த்தத்தினை, கர்மத்தின் ஊழ்வினைப் பயனை, வாழ்க்கையின் அர்த்தத்தினை, மனித நேயத்தை, மனித மேம்பாட்டு உணர்வினை இந்நாட்டிய நாடகங்கள் இடைக்கால மாணவ சமூகத்திடையே வளர்க்க வழிவகுத்தனர்.

துரதிஷ்டவசமாக 1970 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் 1983 ஆம் ஆண்டு காலகட்டத்திலும் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு இனக்கலவரம் போன்றவற்றால் உயர்கலை வளம் பேணும் கலைஞர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறினர். இவர்களது ஒட்டுமொத்த வெளியேற்றத்தால் கலை உலகம் பரவலாக பல பரிமாண ரீதியில் ஆங்காங்கே தேக்க மந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. எது எவ்வாறாயினும் குறிப்பிட்ட சில காலமாக மேடை நிகழ்வுகள் பெரிதும் குறைந்து நலிவுற்றுக் காணப்பட்டன.

ஆயினும் இலங்கையில் இக்காலப் பகுதியில் அறிமுகமான தொலைக்காட்சி ஊடகத்தின் ஊடாக இக்கலைத்துறையானது ஓரளவிற்கு தன் நிலைப்பாட்டினை தக்கவைத்துக் கொண்டது. ஆயினும் கலைகள் மேலோங்கி வளர்ந்த யாழ்மண்ணில் போர்ச்சூழல் உக்கிரம் அடைந்த காலகட்டத்தில் பெருமளவு மேடையேற்றப்பட்ட கலைநிகழ்ச்சிகள் பின்னடைவு கண்டன.

இந்நிலையில் பாடசாலை மட்டத்தில் பாடமாகவும் சில அங்கீகரிக்கப் பட்ட சபைகளினால் தரம் ஒன்று தொடக்கம் ஆசிரியர் தரம் வரை பாடவிதானம் வகுக்கப்பட்டு வழி நடத்தப்பட்டதனாலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஆரம்பத்தில் டிப்ளோமா இக்கலைத் துறையானது தரம் உயர்த்தப்பட்டதனாலும் ஏராளமான மாணவர்களுக்கு வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கும் ஒரு தொழிற்துறையாக இது பரிணமிக்கத் தொடங்கியது. வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட போர்ச்சூழலினால் கொழும்பில் குடியேறி, நாட்டியம் வளர்க்க முற்படும் போது பல்வேறு சவால்களையும் கஷ்டங்களையும் எதிர்வு கொண்டு பல கலை நிகழ்வுகளையும் எதிர்வு கொண்டு பல கலை நிகழ்வுகளை மேடையேற்றினார்.

ஆயினும் இன்றைய மாணவர் ஆசிரியர் அணுகுமுறையில் பல மாற்றங்களைக் கலை வளம் பேணும் சமூகம் எதிர்பார்க்கின்றது. மாணவர்கள் நிலைப்பாட்டில் அரங்கேற்றங்களை எல்லையாகக் கொண்டு பயிலுதல் பட்டப் படிப்புக்காகப் பயிலுதல் சான்றிதழ் வெகுமதிக்காகப் பயிலுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றுவதற்காக பயின்று வீடியோ பதிவுகள் செய்ததின் பிற்பாடு அக்கலைத்துறையிலிருந்து விலகி வெளியேறுதல் ஆகிய நிலைப்பாட்டினால் இக்கலைத்துறையின் எதிர்கால வளர்ச்சிப்படி நிலையை மந்தகதிக்கு இட்டுச் செல்ல வாய்ப்பாகின்றது.

ஆசிரியர் மட்டத்திலும் தமது நிலைப்பாட்டினை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. இக்காலைத்துறையைப் பொறுத்தமட்டில் இன்றியமையாத தாகும். ஒருநாட்டிய ஆசிரியர் என்பவர் அர்பணிப்பு ஆற்றல், தனித்துவம், சமயோசிதம், சாதுரியம் மிக்கவராக விளங்க வேண்டும். சந்தர்ப்பவாதப் போக்கிலிருந்து விலகி இருப்பதன் மூலம் அவர்கள் சமூகத்தின் நோக்கில் கண்ணியமாக தரமாக எடைபோடப்படுவர்.

மேலும் இந்த ஆசிரியர்கள் இயலுமானவரை என்றும் மேடைக் கலைஞர்களாக பரிணமிக்க முயலுதல் வேண்டும். அவ்வாறு முயலுமிடத்து மாணவர்களுக்கு ஒரு முன்னோடியாகவும், உயர்ந்த கலைத்துவம் பேணும் கலைஞராகவும் வழி காட்டியாகவும் விளங்கமுடியும். கலையானது ஆயிரம் காலத்துப் பயிர் கலை கலையாகவே அன்றி கலைதமக்காகவோ அல்ல என்பதினை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.



கரப்பந்தாட்ட அணியினர்



வலைப்பந்தாட்ட அணியினர்



தமிழ் மன்றம் மேற்பிரிவு



தமிழ் மன்றம் கீழ்ப்பிரிவு



# உருவ வழிபாட்டின் சிறப்பு

செல்வி. உ. திசோதினி
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்
தேசியக்கல்வியற் கல்லூரி.

பெறுதற்கு அரிய மானிடப் பிறவியைப் பெற்ற மனிதன் ஒழுக்க நெறியில் நின்று வாழாது வீணென காலத்தைப் போக்குகின்றான். தன்னை உணர்ந்து இறைவனை அறிதலே இவன் கடமையாகும். மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழாதவனே இறைவனைப் பற்றியும் உருவ வழிபாட்டைப் பற்றியும் குறைகூற முற்படுகிறான்.

மனிதர்க்கு ஐம்பொறிகளை அடக்கவும் மனதை ஒருநிலைப்படுத்தவும் உருவவழிபாடு உதவுகின்றது. உலக இன்பங்களிலே கிடந்து உழலும் ஒருவனை நன்னெறியில் வாழச் செய்வது ஆலயமும் உருவவழிபாடுமாகும். இவ்வுருவ வழிபாடு இன்று நேற்று எழுந்ததல்ல எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நமது சமய தத்துவஞானிகளால் ஆக்கப்பட்டதொன்றாகும். இறைவனை அருவ உருவ அருவுருவத்திலும் அதற்கப்பாலும் கண்டவர் நம் முன்னோர்.

இறைவன் பல நாமம் உடையவனாக இருக்கின்றான். ஆதலாலே தான் எல்லா மதங்களும் அவன் ஒருவனையே பல நாமத்துடன் வாழ்த்துகின்றன. நமது இந்து சமயத்தை எடுத்து ஆராய்ந்தால் அதனுள்ளேயே பல பிரிவுகளும் பல வடிவ உருவங்களும் இருப்பதைக் காணலாம் ஓர் நாமம் ஒரு உருவம் இல்லா இறைவனுக்குப் பல்லாயிரம் நாமங்கள் கூறுவதைக் காண்கிறோம்.

பக்தன் தான் விரும்பியவாறெல்லாம் இறைவனை வாழ்த்த முற்படு கின்றான். இறைவனின் உண்மைத் தத்துவங்களை வெவ்வேறு வழியிலே உருவத்திலே காணமுற்படுகின்றான். யாம் சைவசமயத்தினர். எமது தெய்வம் சிவன். இவர் பல வடிவங்களாகத் தோன்றி அடியார்களுக்கு அருள்புரிவதாக நம் முன்னோர் கூறியிருக்கின்றனர்.

மான் எவ்விதம் துள்ளிக் குதிக்கின்றதோ அதே மாதிரி மனிதனின் மனமும் நேரத்திற்கு நேரம் துள்ளிக் குதிப்பதாகும். அத்தகைய மனதை அடக்க வேண்டியதே மனிதனுக்கு முதற்கண் உரியது என்பதைக் காட்டிலும் வெட்டி நீக்குவதைக் காட்டிலும் ஞான நிலையிலுள்ள ஆன்மாக்களை இறைவன் விரும்பித் தன் முடியில் வைத்திருப்பதைச் சந்திரன் குறிப்பிலும் உணரவேண்டியதே.

ஒரு குழந்தை பிறந்த உடனே மொழி பேசவோ உண்ணவோ நடக்கவோ முடியாத நிலையில் இருப்பது தெரிந்ததே. ஆனால் அக் குழந்தை காலம் செல்லச் செல்ல உண்ணவும் பேசவும் நடக்கவும் பயிற்சி பெறுதலை எடுத்துக் கூற வேண்டியதில்லை.

மனிதன் ஆத்மநிலைக்கு அதாவது அனுபூதிமானாக ஞானியாக உயர வேண்டிய நிலை ஒன்றுண்டு. அவன் அந்நிலையை அடைவதற்கு இவ்வுருவ வழிபாடு மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றதை உணரவேண்டும். ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை உணரவே நம்முன்னோர் ஆலயத்தையும் உருவவழிபாட்டையும் உண்டாக்கி இருக்கின்றார்கள் என்பது வெளிப்படையாகும். சமயக்குரவர்கள் பாடிய தேவார திருவாசகங்களில் இதன் உண்மை தெளிவுறுகின்றது.



# இலட்சியம்

செல்வி. நா. கார்த்திகா
தரம் 10C

சிறுவயதிலே இருந்து என்
தாய் எனக்காகப் பட்ட கஷ்டத்தை
உணர்ந்து கொண்டு படிப்பில்
கவனத்தை செலுத்தினேன்
அன்றிலிருந்து இன்று வரை
நான் எனது தாய்க்காக
மட்டுமே வாழ்வேன் என உறுதி கொண்டேன்
நான் எவ்வளவு பாடுபட்டாலும் என்
லட்சியம் எனது தாய் என்ற
தெய்வத்தை பூப்போல வைத்து
அவள் கண்ணிலிருந்து ஒருதுளி கண்ணீரும்
வராது வைத்து காப்பேன் என்பதே ஆகும்.
அப்படி அவளது கண்களிலிருந்து ஒரு துளி
கண்ணீர் வந்தால் அந்த நிமிடமே
என் உயிரை விடுவேன் இது தான் நான் அவர்
மகள் என்ற பெருமையை உணர்த்திடும்

**பிறர் செய்வது உனக்கு பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்கு செய்யாதே.**

(கன்பூசியஸ்)



# இதுவா மனிதப் பண்பு ?

செல்வி. த. சாகித்தியா
தரம் 7C

கல்வி என்னும் செல்வம் பண்பை
காக்கவில்லை என்றால் – பெரும்
செல்வம் கோடி சேர்த்த போதும்
சிறுமை வேறு உண்டோ?

நெறிபடைத்த முன்னோர்காட்டும்
நியதிவாழ்க்கை பாதைவிட்டு
வெறி பிடித்த விலங்கு போல
விலகிப்போதல் நன்றோ?

அறிவியலின் தெய்வம் என்று
அறியும் மேலை நாட்டார் நல்ல
நெறி துங்கும் வாழ்க்கை நீதி
நியதி அங்கு இல்லை

மனித நாகரிகம் என்னும்
மானிடத்தின் மேன்மை தன்னை
மனதினாலும் கீழ்மை செய்யும்
மதியிலாரை எதிர்ப்போம்.

நெறி தவறி யாழ்பவர்கள்
நிலை தவறுதல் கண்டோம் இந்த
அறிவிலிகள் செயல்கள் நீங்க
அனுதினமும் உழைப்போமே.



# தாய் மனசு

செல்வி. நா. மதுசிகா.
தரம் 10C

இலங்கையிலே ஒரு சிற்றூரில் வசித்து வந்தான் வசந்தன். இவனுடைய தந்தை இவனுடைய சிறு வயதிலேயே இறந்து விட்டார். இதனால் இவன் தாய் கமலா இவனை மிகவும் பௌத்திரமாக வளர்த்தாள். ஒரு பிள்ளை என்பதால் அவனை எப்படியாவது படிக்க வைத்து விட வேண்டும் என்று மிகவும் கஸ்ரப் பட்டு படிக்க வைத்தாள். அவனும் அவனுடைய தாயின் ஆசைப்படி நன்றாகப் படித்து பெரியவன் ஆகினான். அவன் எப்படித்தான் படித்து பெரியவனாகினாலும் அவனுடைய மனதுக்குள் ஒரு உறுத்தல் அவனுடைய தாயை எல்லோரும் முட்டக்கண்ணி என்று தான் அவன் முன்னாலும் கூப்பிடுவது. அவனைக் கண்டால் முட்டைக்கண்ணி மகன் என்று கூப்பிடுவது அவனுக்கு வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது.

இவ்வாறு பல நாட்கள் ஓடின. இவனுக்கு மேற்படிப்பு படிப்பதற்கு இந்தியாவில் அனுமதி கிடைத்தது. அவன் மிக சந்தோஷமடைந்தான். அவன் தாயின் ஆசைப்படி மேல்ப் படிப்பு படித்தான்.

பின் தாய் கமலா இவனின் சம்மதத்திற்கு இணங்க இவனிற்கு திருமணம் செய்து வைத்தார். திருமணம் முடிந்த பின்பு இவன் மீண்டும் இந்தியா சென்றான். இந்தியா சென்ற மகனை பலவருடமாகப் பார்க்கவில்லை என்றும் தனது பேரப்பிள்ளைகளையும் காண் பதற்காக தாய் இலங்கையிலிருந்து இந்தியா சென்றாள். "தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும் என்பார்கள்" அதே போலத்தான் இந்தத் தாயும். அங்கு சென்ற தாயை மிகவும் நன்றாக கவனித்து தன் தாய்க்கு ஏற்ற மாதிரி நடந்து கொண்டான். பின்பு தாயை ஓரமாகக் கூப்பிட்டு ஏன் இங்கு வந்தாய் உன்னை எல்லோரும் முட்டைக் கண்ணி.... முட்டைக் கண்ணி... என்று எல்லோரும் கூப்பிடுவது எனக்கு அங்கு வெட்கமாக இருந்தது. இப்ப நீ இங்கு வந்து முட்டைக்கண்ணீரை பேரப் பிள்ளைகள் என்று கூப்பிடுவதை நான் விரும்பவில்லை. நீ மீண்டும் இலங்கைக்கு போ என்று கூறியதும் வேடனின் அம்பில்பட்ட மான் துடிப் பதைப் போல் துடித்து மகனிடம் சொல்லாது இலங்கை வந்து சேர்ந்தாள். மகனின் வார்த்தை அவளுக்கு முட்களாக குத்தின. சில நாளில் இவள் உடல் நிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப் பட்டது. தான் இறக்கும் போது தன் ஒரே மகனை பார்க்க முடியாது போய்விடுமோ என்று நினைத்து தன்கையால் மகனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். எழுதி முடித்த பின்பு தன் நெஞ்சோரமாக அந்தக் கடிதத்தை அணைத்துக் கொண்டாள்.


அப்பொழுது அவர் உயிர் உடலை விட்டு பிரிந்து விட்டது. இந்த விடயத்தை ஊர் மக்கள் ஒன்று கூடி ஆலோசித்த பின் மகனுக்கு தந்தி அனுப்பினார்கள். மகன் உடனடியாக ஊருக்கு வந்தான். வந்ததும் அவன் கையில் உன் அம்மா உன்னிடம் கொடுக்கச் சொன்ன கடிதம் என்று கடிதத்தைக் கொடுத்தார்கள். அவன் வாசித்தான்.

அன்பின் மகனிற்கு அம்மா எழுதிக்கொள்வது நீ என்னை முட்டைக் கண்ணி என்று ஊராக்கள் கூப்பிடுவதை வெட்கமாக நினைத்தாய். ஏன் என்னை முட்டைக் கண்ணி என்று கூப்பிடு கிறார்கள் தெரியுமா? நீ சிறுவனாக இருக்கும் போது பட்டாசு கொழுத்தினாய் அப்போது பட்டாசுப் பொறிபட்டு உன் கண் தெரியாமல் போய்விட்டது. அப்போது நான் என் கண்ணை வைத்தியர் மூலம் உனக்கு வைத்தேன் இதனால்தான் கண் எனக்கு இப்படி வந்தது. மகனே என் பேரப்பிள்ளை களையும் என் கண்ணையும் பௌத்திர மாகப் பார்த்துக் கொள் என்று கடிதத்தை முடித்திருந்தாள். இதைப் புரியாத மகன் தாயின் மனதைப் புரியாது தான் இவ்வாறு நடந்து விட்டேன். ஊரார் கூப்பிடுகிறார்கள் என்று நானும் என் தாயை வெறுத்து விட்டேனே என்று நினைத்து வாய் விட்டு அழுதான். தன் சோகத்தை தனக்கே சொல்லிக் கொண டான்.

***"தாயிற்சிறந்த கோயிலும் மில்லை"***

**வாழ்க்கையில் நம்பிக்கை வேண்டும் அது இருந்தால்**
**நாம் நினைத்தது போன்று வாழ்க்கை அமையும்.**

(தோமஸ் அல்வா எடிசன்)





# பல்கலைக்கழக அனுமதியும் Z புள்ளியும்

திருமதி. யோகேஸ்வரி சந்திரகுமார்,
பிரதி அதிபர்,

இலங்கையில் க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 1.8 சதவீதத்தினர் மட்டும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றனர். மிகுதி 98.2 சதவீதமான மாணவர்களாலும் பல்கலைக்கழகங்களுள் பிரவேசிக்க முடிவதில்லை. நமது நாட்டில் இவ்வாறாக பல்கலைக்கழகக் கல்வியானது மிகுந்த போட்டித் தன்மையுடன் ஆரம்பிக்கப்படவேண்டிய ஒன்றாகிவிட்டது. இதுவரை காலமும் உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் நான்கு பாடங்களிற்குத் தோற்றி அதில் பெறும் மொத்தப்புள்ளிகள் கருத்தில் கொள்ளப்பட்டு அவ்வத் துறைகளிற்கான வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்பட்டது. புதிய கல்விச் சீர்திருத்த அமுலாக்கலின் பின் மாணவர்கள் தோற்றும் பாடங்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்பட்டுள்ளது. எனவே இரு முறைகளிலும் தோற்றும் மாணவர்களைப் பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவு செய்வதற்கு சராசரிப்புள்ளி முறை கையாளப்பட்டது. 2001ம் ஆண்டு வரை இம்முறையில் தான் பல்கலைக்கழக அனுமதி தீர்மானிக்கப்பட்டது.

இம்முறைகளில் பல குறைபாடுகளைக் கல்வியியலாளர்கள் இனம் கண்டனர்.

01. தெரிவுப்பாடங்களிற்கு இடையேயுள்ள வேறுபாடுகள் மாணவனைக் கூடிய அல்லது குறைந்த சராசரிப்புள்ளிகளைப் பெறும் நிலைக்கு வழி கோலி விடுகின்றது.
02. நான்கு பாடங்களிற்கு தோற்றிய மாணவனையும் மூன்று பாடங்களிற்கு தோற்றிய மாணவனையும் ஒரே முறையில் சராசரிப்புள்ளியினை வைத்து ஒப்பிடுவது பொருத்தமற்றது. (மாணவர்களின் முயற்சிகள் வெவ்வேறு அளவினதாய் இருப்பது இங்கு நோக்கத்தக்கது)

இவ்வாறான பல விமர்சனங்களைக் கருத்திற் கொண்டு Z புள்ளி முறை பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. விஞ்ஞானத்துறையைப் பொறுத்தவரை குறித்த பாடங்களுக்கூடாக மாணவரின் கற்றல் துறைகள் தெரிவு செய்யப் படுகின்றன. உதாரணமாக பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் என்பன உயிரியல் விஞ்ஞானத் துறைக்கான பாடத்தெரிவுகளாகும். ஆனால் கலைத்துறைக் கற்கை களிற்குப் பல்வேறு பாடங்களிற் கிடையே தெரிவு செய்து கற்கும் வசதி மாணவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் இலகுவான பாடங்கள் என சிலவற்றை இனங்காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான பாடச்சேர்க் கையைக் கொண்ட மாணவன், மற்றைய மாணவனை விட சிறந்த பெறுபேற்றினைப் பெறவாய்ப்புண்டு. இவ்வாறான வேறுபட்ட பாடச்சேர்க் கைகளுடைய மாணவர்களை ஒரே விதமாக ஒப்பிட்டு அனுமதி வழங்கு வது பொருத்தமற்றதாகும்.

ஒரு பாடத்தில் மாணவன் பெற்ற மூலப்புள்ளி X எனவும் அப் பாடத்தின் சராசரிப்புள்ளி (நாடளாவிய) $\overline{X}$ எனவும், நியமவிலகல் எனவும் கொண்டால் அப்பாடத்திற்கான Z புள்ளி z ஆனது $\frac{X - \overline{X}}{\sigma}$ இனால் தரப்படும். ஒரு மாணவன் தனது 3 பாடங்களிலும் பெற்ற Z புள்ளிகள் முறையே $Z_A, Z_B, Z_C$ எனின் அவன் பெற்ற சராசரி Z புள்ளி $\frac{Z_A + Z_B + Z_C}{3}$ ஆகும். Z புள்ளி கணிக்கப்படும் போது குறித்த பாடத்திற்கான இடை, நியமவிலகல் என்பவை கருத்திற் கொள்ளப் படுவதால் இலகுவான, கடினமான பாடங்களிற்கிடையிலான வேறு பாடுகள் நீக்கப்படுகின்றன.

குறித்த ஒரு துறைக்கான புள்ளிப் பரம்பலில் மாணவனின் நிலை Z புள்ளி மூலம் தீர்மானிக்கப்படும் போது மாணவனின் தகுதி உறுதி செய்யப்படுகின்றது. இதனால் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி முறை ஓரளவு பொருத்தமான நியாயமான செயன் முறையாக அமைகின்றது எனலாம். எனினும் இது சம்பந்தமான விமர்சனங்களும் எழுவதை நாம் அறியமுடிகின்றது. குறித்த ஒரு பாடத்திலும் வினாத்தெரிவுகள் உள்ளபோது அவ் வினாக்களின் இலகுத்தன்மை, கடினத்தன்மை என்பவை மாணவர்களின் புள்ளிகள் பெறும் நிலையை மாற்றிவிடும். எனவே வினாத்தெரிவிற்கு (CHOICE) வாய்ப்பளிக்காமல் வினாத்தாள் அமைவது இக் குறைபாட்டை நீக்க உதவும்.

புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என்ற இருபிரிவுகளாக க.பொ.த (உ/த) பரீட்சை 2011 ஆகஸ்ட் நடைபெற்றது. வெவ்வேறு வினாத்தாள் அமைப்பு, வழங்கப்பட்ட நேரம் எனப் பல காரணிகள் மாணவர்கள் பெற்ற புள்ளிகளில் செல்வாக்குச் செலுத்தின. எனினும் ஒரே அடிப்படையில் வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்பட்டது. இவ்விடயம் கல்வியுலகில் பெரும் விமர்சனத்திற்குள்ளானது.

அண்மையில் இவ்விடயம் தொடர்பாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இப்பிரச்சினைக்கான தீர்வு பெறப்பட்டது. இரு பாடத்திட்டங்களுக்கும் தனித்தனியே z புள்ளி கணக்கிடப்பட்டது. மேலதிகமாக மாணவர்களைப் பல்கலைக்கழகங் களுக்கு அனுமதிப்பது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பான விமர்சனங்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. z புள்ளி முறையால் மாணவர்களுக் கான நியாயமான பல்கலைக்கழக அனுமதி முறை தீர்மானிக்கப்படுகிறது. இது மாணவர்களின் உளவியல் தாக்கத்தை ஓரளவு குறைக்கும் என்பதில் ஐயமில்லை.

**நீ வாழ்க்கையில் உயரும் போது மனிதர்களிடம் சுமுகமாக இரு ஏனெனில் நீ கீழே இறங்கும் போது அவர்களைச் சந்திக்கலாம்.**



# சிந்தனைத் துளிகள்

செல்வி. த. ஜசோதினி
தரம் 7C

கடவுளைப் போற்று மனிதனை நேசி

வெற்றியின் இரகசியம் நம்பிக்கை

அளவுக்கு அதிகமாக ஆசைப்படக்கூடாது

பெண்ணுக்கு சீதனம் குணம் ஆகும்

சுயநலம் அற்றவர்களாக வாழ்தல் வேண்டும்

மதிப்பு என்பது கேட்டுப் பெறுவதில்லை

இரண்டு கைகள் சேர்ந்தால்த்தான் ஓசை வரும்

மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு வாழவேண்டும்

உண்மையான அடக்கமே எல்லா விதமான நற்பண்புக்கும் அடிப்படை

கல்வி ஆபரணம் அல்ல ஆடை ஆகும்.

கல்வியே நாட்டின் பொருளாதாரம்

இரகசியமான இலட்சியமே என்றும் வெற்றி பெறும்



# பொது அறிவு

செல்வன். ஓ. கிசோகரன்
தரம் 7 C

01. முறிந்த எழும்புகள் ஒன்று சேர எவ்வளவு காலம் ஆகும்?

சுமார் 1 மாதம்

02. மிகக் கூரிய மூக்குடைய மீன் எது?

ஆயிரை

03. தேனீக்களுக்கு எத்தனை கண்கள் உள்ளன?

5 கண்கள்

04. நினைவு மறதி நோய்க்குப் பெயர் என்ன?

அம்னீசூியா

05. ஓசையை அளக்கும் யுனிட் எது?

டெசிபல்

06. இருளில் ஒளிரும் பாஸ்பரஸ் எது?

வெண் பாஸ்பரஸ்

07. ஒட்டகம் நீர் அருந்தாமல் எத்தனை நாள் வாழும்?

34 நாட்கள்

08. மிகச் சிறிய இதயம் கொண்ட விலங்கு எது?


சிங்கம்

09. மான்கள் எவ்வளவு வேகத்தில் ஓடக்கூடியவை?

மணிக்கு 80 கி.மீ வேகத்தில்

10. பூனைகள் எத்தனை வகைகளில் காணப்படுகின்றன?

சுமார் 330 வகைகளில்



# மனித உணர்வுகள் ஒன்றுபட்டால்

செல்வன். கி. லவன்ராஜ்
கலைப்பிரிவு (2012)

மண்ணிலே பிறந்து விட்ட
மாந்தர்கள் எல்லோரும்
மகத்தான வாழ்வு வாழ
மாண்புற வேண்டும் இயல்புகள்

மனதிலே தோன்றுகின்ற
மாசற்ற உணர்வுகள்
மதிக்கப்படா விட்டால்
மரணிக்கும் மனித மனம்

துள்ளி திரியும் பருவத்தே
துடுக்கு தனத்தை அடக்கி
துணிந்து பள்ளிக்கு வந்தால்
துன்பமாக காலத்தை கழிக்கலாமா?

அகத்தில் இருக்கும் கலையை
ஆழமாக வெளிக் கொண்டு வர
அன்பான உணர்வுகளை என்றும்
அள்ளி நாம் சென்றிடுவோம்

பாங்கிருடனே பழகிவரும்
பாங்கரும் நாமும்
பசித்த வயிற்றுடன்
படிப்பை தொட முடியுமா?

பட்டங்கள் பெற்றிடவே
பாருக்குள் நாம் பிறந்தோம்

பாவிகள் எமை அடக்கி
அழிக்கலாமா? நம் உணர்வுகளை
பசுமையுகம் காண பாரதியும்
பார்த்து விட்ட புதுமைகளை
பாலமாக அமைத்த நாம்
பாரிய உணர்வுகளை காண்போம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமையே பலம் என்று
ஓங்கிடுவோம் கையை நாம்
ஒழித்திடுவோம் பேதமையை

ஆழப் பிறந்தவர்கள்
அயல் நாடு எங்கும் அகதிகளாய்
அலைந்து திரிவதை இனிநாம்
அடியோடு அழித்திடுவோம்

வேற்றுமையில் ஒற்றுமையை
வேண்டும் என்றே அனைவரும்
வேறுபட்ட உணர்வுகளை
வேன்றிடுவோம் ஒன்றாக

மண்ணில் நல்ல வண்ணம்
வாழ்ந்திடவே
மன மொத்த உணர்வுகளை
மக்கள் நாம் மதித்து
மாநிலத்தை உயர்திடுவோம்.

# பெற்ற கடன் நாலு இலட்சம்

செல்வி. த. சுகன்ஜா
தரம் 11A

லொக்கு லொக்கு லொக்கு ... என இருமிக் கொண்டே "டே சண்முகம் ... டே சண்முகம் தண்ணி கொஞ்சம் வாத்து தாவன்டா" முனகலுடன் முருகேசு கேட்கிறார். முருகேசு கேட்டது எங்கே சண்முகத்தின் காதில் விழப்போகிறது. வுஏ முன் இருந்து சின்னமருமகளை ஒன்றிப் போயிருக் கும் சண்முகம் எங்கே எழும்பப் போறான். தண்ணியை கட்டிலில் இருந்து தாவி எடுக்க முயன்றார். தண்ணீர் குவளை விழுகிறது. சத்தத்தை கேட்ட சண்முகம் ஓடி வருகிறான். ஐயா என்னைக் கேட்டால் எடுத்துதர மாட்டேனா ஏன் இப்ப .... என அவன் கேட்கும் முன்னே இல்லை சண்முகம் ஒரே இருமலாக இருக்கு என்றுமுருகேசு பதில் கூறுகின்றார்.

மாசம் மாசம் ஐம்பதாயிரம் ரூபா சும்மாவா? நான்கு பிள்ளைகளும் வெளிநாட்டில சும்மாவா டொக்ரர் இஞ்சினியர் எண்டு வாழுதுகள் இந்த முருகேசர் பிள்ளைகளோடு போய் இருக்கலாம் வீடு வாசல் காணி பூமி எண்டு சொத்து பாதுகாக்க நினைத் தவர் இன்று யாரும் அற்ற அநாதை. .... சொத்தையும் அனுபவிக்க பிள்ளைகள் இனி வரமாட்டார்கள். தகப்பனைப் பராமரிக்க ஒருவனை நியமித்தனர் அவன்தான் சண்முகம். சண்முகம் இந்த வீட்டுக்கு வந்து ராஜ வாழ்க்கை வாழ்கின்றான். பாவம் முருகேசுக்கிழவன் தான் மாடி வீட்டு ஏழையாக இருக்கிறார்.

விரும்பியதை விரும்பிய உடன் கொடுக்க யார் இருக்கிறார்கள். சண்முகம் கவனிப்பான் தான் தேன் ஒழுகக் கதைப்பான்தான் அவனுக்குத் தனது சுகம் தான் முக்கியம் முருகேசுக் கிழவன் நல்லவர். யார் மனதையும் நோகடிக்க மாட்டார். அதனால் சண்முகம் என்ன செய் தாலும் பாவம் என்று விட்டு விடுவார். தனக்கு பக்கத்தில் ஒரு துணை அவன் என்று நினைப்பார்.

முருகேசர் சரியான பிரயாசைக் காரர். அந்த காலத்தில தன் பிள்ளை களை படிப்பிப்பதற்காக எத்தனை தொழில் புரிந்தவர். அவர் சும்மா வெட்டிப் பேச்சுப் பேசியதைக் காண முடியாது. கடைக் குட்டிக்கு ஐந்து வயது இருக்கும் போதே முருகேசு வின் மனைவி பார்வதி இறந்து விட்டாள். நான்கு பேரையும் படிக்க வைத்துத் தாய்க்குத் தாயாக தந்தைக்

குத் தந்தையாக இருந்து பிள்ளைகள் நால்வரையும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்தவர். மூத்தது இரண்டும் பெண்கள் கடைசியில் தான் ஆண்கள். அனால் அவர் பெண்களையும் கல்விமான்களாகவே ஆக்கினார். மூத்தவள் பானு மருத்துவத்துறைக்கு புலமைப் பரிசிலில் இலண்டனுக்கு சென்றாள். பின் ஒவ்வொரு பிள்ளையாக புலமைப்பரிசிலில் கனடா, அமெரிக்கா, யப்பான் என வாழ்கிறார்கள். தந்தையோடு நேரம் கிடைக்கும் போது பாசமழை பொழிவார்கள். ஆனால் முருகேசுவுக்கு ஒவ்வொரு வினாடியும் பிள்ளைகளோடு கதைக்க வேண்டும் போல் ஆசை.

தனது பேரக் குழந்தைகளுக்காக நட்ட பழமரங்கள், பழங்களைச் சொரியும் போதொல்லாம் அவர் மனம் கவலை கொள்ளும். ஊர் பிள்ளைகளை அணைத்து அவற்றைக் கொடுக்கும் போது தனது பேரப்பிள்ளைகள் பற்றிக் கதை பிளப்பார். அது தான் அவரது பொழுது போக்கு. அப்படித்தனது காலங்களைக் கனவில் கழித்த முருகேசு இன்று கட்டிலோடு கட்டிலாகக் கிடக்கிறார். ஆயிரம் உறவுகள் இருந்தும் பொருள் பண்டம் இருந்தும் அவர் ஒரு அநாதை. கண்களை மூடுகிறார். உலகத்தைப் பார்க்க விரும்பாதவர் போல கண்ணீர் வழிகிறது. சண்முகம் வருகிறான். பார்க்கிறார் வைத்தியர் வருகிறார். நாடி பார்க்கிறார். ஒரு கிழமை தாங்காது, சொந்தங்களுக்குக் கூறுங்கள் சொந்தக்காரர் வந்தனர் முருகேசு வாய் பிள்ளைகளின் பெயரை முணுமுணுத்தது. அங்கு நின்ற ஒரு பெரியவர் பிள்ளைகளுக்கு அறிவியுங்கோ பிள்ளைகளை கண்டால்த் தான் உயிர் போகும் போல இருக்கு. எங்கே ஈ மெயில் விலாசத்தைத் தாங்கோ கதைக்கிறன். இப்போது அவர்களுக்கு நேரம் இல்லையாம், ஒரு இலட்சம் அனுப்புகிறார்களாம், செத்த வீட்டை ஒரு குறையும் இல்லாமல் செய்யட்டாம் இது தான் அவர்களின் பதில். பெரியவர் முகம் குறுகியவராக வந்து பாலை வாயில் விடும்போது ஒவ்வொரு பிள்ளையின் பெயரையும் கூறுகிறார். பெத்த கடன் 4 இலட்சம் என்பது புரியாமல் பிள்ளை பாசத்தை எதிர்பாக்கும் முருகேசு கண்களை மூடுகிறார்.

**கடலலைகள் உன் கால்களை முத்தமிடுவதா**
**அதை ஆபத்தற்றது என்று நினைத்து விடாதே.**



# ஊமை ராகங்கள்
# (சிறுகதை)

செல்வி. யோ. டினோஜா
A/L 2012

பானு உன்னைத் தேடி அதிஸ்டமே வந்திருக்கு நீ ஏன் மௌனம் சாதிக்கிறாய் சங்கரைப் பார் சங்கர் வீட்டாரைப் பார். அவர்கள் எவ்வளவு நல்லவர்கள். உன்னை எதுவும் தரவேண்டாம் என்று கூறுகிறார்கள். உன் தங்கை, தம்பியையும் அவர்களோடு நீ வைத் திருக்கச் சம்மதித்திருக்கிறார்கள். இனி என்ன யோசனை என அவளது தோழி பாருவின் குரல் கனக்கிறது. எதனையும் காதில் வாங்கிக் கொள்ள முடியாதவளாக பானு அமர்ந்திருக் கிறாள். பானு உனக்கு எத்தனை தரம் எடுத்துக் சொல்லுவது. அதிஸ்டம் ஒரு சிலவேளைதான் நம்மைத் தேடிவரும். இப்போது உன்னைத் தேடி வந்துள்ளது. இதை விட்டால் பின்பு ..... என்று கூறிவிட்டு பாரு எழுந்து சென்று விட்டாள்.

பானு தனது இருப்பிடத்தில் தலையை சுதாகரித்துக் கொண்டு எழுந்திருக் கிறாள். முன்பு இப்படித் தானே அண்ணாவும் வந்து நின்றான். என அவளது எண்ணங்கள் பின் னோக்கி அசை போடுகின்றன. பானு ஐந்து சகோதரருடன் கூடப் பிறந்தவள். மூத்தவன் ரமேஸ் அடுத்து அக்கா சாருலதா அடுத்தது இரு தங்கை கடைக்குட்டி தம்பி அப்பா ஒரு இருதய நோயாளி. இலாவணியனின் முகத்தைக் கூடப் பார்க்காமல் மிக விரைவில் போய்ச் சேர்ந்து விட்டார். அம்மா சோகங்களை மனதில் பூட்டி வைத்து விட்டு இறுகிய மனதோடு பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும். என்ற வெறியோடு தோட்ட வேலை, வீட்டு வேலை என மாடாக உழைத்தார். ஆனால் தனது மூத்த ஆண்பிள்ளையை எண்ணி மன ஆறுதல் அடைந்தார். அண்ணா ரமேசும் வீட்டு நிலை உணர்ந்து படித்தான். படிப்பில் அவன் கெட்டிக்காரன்.

அண்ணன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது எங்கள் குடும்பமே ஆகாயக் கோட்டை கட்டியது. அண்ணன் எங்களுக்கு வழி காட்டுவான். என்ற நம்பிக்கையோடு நாங்கள் இருந்தோம். ஒருநாள் அண்ணா வந்து தன்னுடன் ஒன்றாகப் படிக்கும் காயத்திரியை விரும்புவதாகக் கூறினான். காயத்திரி செல்வந்த வீட்டின் ஒரே வாரிசு. அவள் ஆசைப்பட்டதை அவளது பெற்றோர் நிறைவேற்ற முனைந்தனர். அம்மா தலை தலையாக அடித்து அழுதாள். வயதுக்கு வந்த பெண் பிள்ளைகள் இருக்க உனக்கு ஏன் கலியாணம், ஒரு தொழில் கிடைக்கட்டும், இருக்கிற பெண்பிள்ளைகளை கரையேற்றி விட்டு நீ செய் என அம்மா பிடிவாதம் பிடித்தார். அண்ணனோ இந்த இடம் எமக்குக் கிடைகிற அதிஸ்டம் அதனைக் கெடுக்க வேண்டாம். என அம்மாவிடம் கெஞ்சினான். அவர்கள் எங்கள் எல்லோரையும் கரை சேர்ப்பார்கள் என்றும் கூறினான். நாங்களும்

அம்மாவின் மனதை மாற்றி அண்ணாவுக்கு திருமணம் செய்து வைத்தோம். மூன்று மாதம் அண்ணா வந்து போனான். பின்பு அவனைக் காணவே முடியவில்லை. பின்பு அக்காவும் படிப்பை முடித்து விட்டு வேலை தேடும் படலம். வேலை கிடைக்காததால் சுயமாக தையல் பழகி வீட்டில் தைக்கத் தொடங்கினாள்.

எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்த போதும் நான் தொழில் தேடுவதில் தான் கவனம் செலுத் தினேன். அக்காவுக்கு நாற்பது வயது அவளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். தம்பி, தங்கைகளைப் படிக்க வைக்க வேண்டும். எழுதுநர் பரீட்சை எழுதியதால் எனக்கு வேலை கிடைத்து விட்டது. எனக்கு மகிழ்ச்சி என் குடும்ப சுமை தீரும் என நினைத்தேன். வேலைக்குச் செல்லத் தொடங்கினேன். வெளி மாவட்டத்தில் தான் எனக்கு வேலை கிடைத்தது. ஒரு வீட்டில் அறை வாடகைக்கு எடுத்து இருக்கிறேன். நான் பெரிதாக அழகி என்று சொல்வதற்கில்லை. வறுமைப்பிடியில் அடிபட்ட எனக்கு செழுமையான அழகு இல்லை ஆனாலும் ஏதோ ஒரு வசீகரம் தான் இன்று எனக்கு தலை வலியாக அமைந்துள்ளது.

நான் குடியிருக்கும் வீட்டின் ஒரேபிள்ளை சங்கர் ஒரு பொறியியலாளர் எனது குணம், நடத்தைகள் அவர்களைக் கவர்ந்ததால் என்னை சங்கருக்கு மணம் பேச என் சம்மதத்தைக் கேட்கிறார்கள். ஏணி வைத்தாலும் எட்டாத இடம் சங்கர் குடும்பம் நான் வறுமைக் கோட்டினுள் வாழ்கிறேன். மற்றும் என் அக்கா, அண்ணா எங்களைக் கைவிட்ட போது தையல் இயந்திரத்தோடு இயந்திரமாகி எங்களை முன்னேற்றத் துடிப்பவள். அவள் திருமணம் நடக்குமா? நடக்காதா? என ஏக்கத்தோடு இறந்துபோன அம்மா. நான் தங்களைப் படிக்க வைத்து நல்ல நிலைமைக்கு ஆக்குவேன் எனத் துடிக்கும் தங்கை, தம்பி இவர்களின் கனவுகளை விட என் வாழ்வு பெரிதா? நான் சுயநலக்காரியா? இதை எடுத்துக் கூறியும் ஏன் பாரு என்னை வற்புறுத்துகிறாள்?. அண்ணா அன்று அப்படித்தானே கூறினான். அதிஸ்டம் ஒருமுறைதான் வரும் என்று சங்கரைத் திருமணம் செய்தால் நான் அதிஸ்டசாலி தான் ஆனால் என் அக்கா என் சகோதரர் துரதிஸ்வாதிகள் அல்லவா ஆவார்கள்.

என் மனம்படும் வேதனை இங்கு உள்ளவர்களுக்கும் புரியுமா?. அக்காவிடம் கேட்டால் நீ சங்கரைத் திருமணம் செய் என்று தான் கூறுவாள். அவள் தியாக உள்ளம் கொண்டவள் நான் சங்கரை ஏற்றால் அவள் சகோதரி என்று சொல்லும் தகுதி எனக்கு இல்லை. முதலில் அக்காவின் திருமணம் எப்படியும் நடக்க வேண்டும். தங்கையை நல்ல நிலைக்கு ஆக்க வேண்டும். தம்பி பொறியியல் நெறிக்கு தெரிவு செய்யப்படுவான். அதில் சந்தேகம் இல்லை. என் குடும்பம் தான் என் வாழ்க்கை எனது ஊமை ராகங்கள் இங்கு உள்ளவர்களுக்கு விளங்குமா?

பானு பானு என்ற லிகிதர் அழைத்த போது சிந்தனை கலைந்தவளாக தன் வேலையைக் கவனிக்கிறாள். கூடிய விரைவில் நான் வீடு மாற வேண்டும் என அவள் மனம் கூறுகிறது.



# எனது எதிர்கால இலட்சியம்

**செல்வி. ப. கீர்த்திகா**
**தரம் 10C**

"மாணவ சக்தி மாபெரும் சக்தி" என்று சொல்வார்கள். ஆம்! அது உண்மையே. நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் தூண்களாக மாணவர் சமுதாயம் உள்ளது. இன்று மாணவர்களாக மாணவர் சமுதாயம் உள்ளது. இன்று மாணவனாக இருப்பவன் நாளை மாபெரும் தலைவனாக உயருவான். அந்த திறமையும் திடமும் அவனிடம் உண்டு.

இவ்வாறு பெருமை கொண்ட மாணவர்கள் தமது பொறுப்பையும், திறமையையும் மனதில் கொண்டு சிறப்பாகச் செயற்பட வேண்டும். எப்படியும் வாழலாம் என்பதை விட இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஓர் நோக்கு நிலை மாணவர்க்கு வேண்டும். இந்த வகையில் மாணவியாக இருக்கின்ற எனக்கும் ஓர் எதிர்கால இலட்சியம் உண்டு.

நான் வைத்தியராக வரவேண்டும், ஆசிரியராக வர வேண்டும், பொறியியலாளராக வரவேண்டும் என்றுதான் ஒவ்வொருவரும் சொல்வார்கள். நான் அப்படி எல்லாம் சொல்வேன் என்று எதிர்பார்த்தால் அது உங்கள் தவறு. நான் அப்படிச் சொல்ல மாட்டேன். இதற்கெல்லாம் மேலாக நான் இறுதிவரை ஒரு மனிதனாகவே வாழவேண்டும். இதற்குப் பிறகுதான் ஏனையவை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

*மனிதனாக வாழ்ந்திட வேண்டும்*

*மனதில் வையடா நீ*

*மனதில் வையடா*

*வளர்ந்து வரும் உலகத்திற்கே நீ*

*வலது கையடா*

என்று பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் சும்மாவா சொன்னார்கள்?

எனது பேச்சு நடவடிக்கை, செயற்பாடுகள் எவையும் இன்னொருவரைப் பாதிக்கக் கூடாது என்பதில் மிக முக்கியமாகக் கவனம் கொள்வேன். எம்மால் முடிந்த உதவிகளை முடிந்தவரை பிறருக்குச் செய்ய வேண்டும். அவர்களது முகத்தில் காணும்


மகிழ்ச்சியை இரசித்து மகிழவேண்டும். சரி நாம் யாருக்கும் உதவி செய்ய முடியாத நிலையில் உள்ளோம் எனில் அப்போது கூட உதவி செய்யா விட்டாலும் உபத்திரவம் கொடுக்காது அவர்களுக்குத் துன்பத்தையும் கொடுக்காது விட்டால் அதுவும் ஓர் உதவிதானே.

எமது சமூகத்தினது, நாட்டினது தேவை, நன்மை கருதி நன்றாகப் படித்துப் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித் தந்து உயர் கல்வி கற்றுப் பொருத்தமான ஓர் வேலையில் இணைந்து என் கடமையை சரியாகவும் திறமையாகவும் பொறுப்பாகவும் செய்ய வேண்டும் தொழில் எதுவாக இருந்தாலும் "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற எண்ணம் மனதில் நிறைந்திருக்கப் பெறுகின்ற ஊதியத்துக்கு நியாயமான முறையில் உழைக்க வேண்டும்.

இவை எல்லாவற்றையும் ஒழுங்கு முறையில் திருப்தியாக மேற்கொள்ள நான் மேலே சொன்னது போல நான் ஒரு மனிதனாக வாழ வேண்டும். ஆம் ஒரு மனிதனாக வாழ்ந்தால் எல்லாமே நினைத்த படி நடக்கும்

எனவே எனது எதிர்கால இலட்சியம் எதுவெனில் எப்பவுமே நான் ஒரு மனிதனாக வாழ வேண்டும் என்பதே.

**வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு**
**தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு.**



# துன்பமாலையில் அவலச்சுவையின் சிகரம்

திரு. பா. இளங்கோ
BA.Dip.in Edu
ஆசிரியர்.

இலக்கியங்களில் வரும் சுவை எட்டு. அவையாவன நகைச்சுவை, அழுகைச்சுவை, இழிவரச்சுவை, மருட்கைச்சுவை, அச்சச்சுவை, பெருமிதச்சுவை, வெகுளிச்சுவை, உவகைச்சுவை என்று தொல்காப்பியர் கூறுகின்றார். சிலப்பதிகாரம் எண்வகைச் சுவைகளையும் கொண்ட முழுமையான காப்பியமாகும். அவற்றில் அழுகைச்சுவை முதலிடம் பெறுவது துன்பமாலையிலேயே ஆகும். துன்பமாலை என்ற காதையின் பெயரே துன்பத்தின் தொடர்ச்சி என்பதைக் கூறுகின்றது. அந்தக்காதை படிப்போர் கண்களில் கண்ணீர் மாலையை ஏற்படுத்துகின்றது. எத்தனை முறை படித்தாலும் படித்தவர் அத்தனை முறையும் கண்ணீர் வடிப்பார்.

மதுரைக்குச் சிலம்பு விற்கச்சென்ற கோவலன் கொலையுண்ட செய்தியை மதுரைக்குச் சென்று வந்து இருந்த ஆயர்குலப் பொண்ணொருத்தி அறிந்திருந்தாள். கண்ணகி அந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ள மாட்டாள் என்பதை அறிந்திருந்த ஆயர் குலப்பெண் தனது துன்பத்தை மறைத்து நிற்கின்றாள். கோவலன் கொலையுண்டதால் கண்ணகி அறியாமலே அவள் உடலில் பதற்றம் உண்டாகின்றது தனது மெய்நடுக்கம் மூலமும் ஆயர்குலப் பெண்ணின் முகக்குறிப்பின் மூலமும் ஓரளவிற்கு நிலைமையை புரிந்து கொள்கிறாள்

*"காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்*
*ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே*
*ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சாயின்*
*ஏதிலார் சொன்ன தெவன் வாழி யோதோழீ"*

காதலனாகிய எனது கணவனை நண்பகல் பொழுதில் சென்றவரை மாலைப் பொழுதாகியும் காணவில்லை. அந்தக்கவலையால் துருத்தியும் தோற்கும் படியாக எனக்கு பெருமூச்சு உண்டாகின்றது. இப்படித் துன்பம் ஏற்படுவதால் மதுரையில் நீ கேள்விப்பட்டதை எனக்கு நீ சொல்லு அதற்கு

*"அரைசுறை கோயி லணியார் நெகிழம்*
*கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே*
*கரையாமல் வாங்கிய கள்வனாமென்றே*
*குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே"*

அரசன் தங்கியிருக்கின்ற அந்தப்புரத்தில் இருந்த அழகிய சிலம்பை சிறிதும் வருந்தாமல் திருடிய கள்வன் கோவலனை, பாண்டியன் கொலை செய்யக் கருதினான் என்றாள். கண்ணகி அதிர்ச்சி அடைவாள் என்பதால் கொலை செய்தனர் என்று கூறாமல் கொலை குறித்தனர் என்று கூறுகின்றாள். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட கண்ணகி

*"பொங்கியெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்*
*திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டெனச்*
*செங்கண் சிவப்ப அழுதாள் கேள்வனை*
*எங்கணா என்னா இணைந்து ரங்கி மாழ்குவாள்"*

திருடன் என்ற கொடிய வார்த்தையைக் கேட்டதும் ஆத்திரத்தில் பொங்கி எழுந்தாள். அவள் கொல்லப்பட்டான் என்பதை அறிந்ததும் துன்பத்தில் விழுந்தாள். செங்கண் சிவக்க அழுதாள் . கோபத்தில் கண் சிவந்தது. துன்பத்தில் கண் கண்ணீர் விட்டது. அவள் துன்பம் தாங்காது வருந்தி மயங்கினாள்.

கணவன் இறந்ததும் தீ மூட்டி தற்கொலை புரிவதுதான் பெண்களின் அக்கால வழக்கம். ஆனால் கண்ணகி அவ்வாறு தற்கொலை செய்யவில்லை. அவளுக்கு கணவன் கள்வன் அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய பாரிய பொறுப்பு இருந்தது.

கண்ணகி தனது ஆற்றாமையால் நிலத்தினின்றும் வேகமாக எழுந்து மீண்டும் வசமிழந்து கதிர் வீசும் சந்திரன் முகிலுடன் சேர்ந்து பெருநிலத்தில் விழுந்ததைப் போல கீழே விழுந்தாள். தன் கண்கள் சிவக்கும் படி அழுதாள். பின்பு தன் கணவனை எண்ணி நீ எங்கு இருக்கின்றாய் என வருந்தி ஏங்கி மயங்கினாள்.

இவ்வாறு எண்வகைச் சுவையும் கொண்டு விளங்கும் சிலப்பதிகாரம் அழுகைச் சுவையில் தனித்துவம் பெறுகின்றது. துன்பம் என்ற முத்துக்களால் கோர்க்கப்பட்ட துன்பமாலை என்ற காதை வாசிப்போர் மனதில் துன்பத்தினை உண்டாக்கி கண்ணீர் கோர்வையை ஏற்படுத்தி துன்பமாலை ஆகின்றது. துறவியாகிய இளங்கோவடிகள் கண்ணகியின் துன்பத்தினை புரிந்து துன்பமாலை பாடியது அற்புதமே.

**எவன் ஒருவன் புகழை வெறுக்கின்றானோ**
**அவனுக்கு உண்மையான புகழ் தானாக வந்தடையும்.**



# திருக்குறள் கூறும் நட்பு

திருமதி. க. கஜதீபன்,
BA(Hons)
ஆசிரியர்.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும் மூவர் தமிழும், முனிமொழியும், கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்" என்பது ஔவை வாக்கு. ஓதுதற்கு எளிதாய் உணர்வதற்கு எளிதாய் உள்ளுதோறுள்ளுதோறுள்ளம் உருக்கும் தகையது திருக்குறள். சிந்தைக்கு இனியது செவிக்கு இனியது. வந்த இருவினைக்கு மருந்தாய் அமையும் திருக்குறளில் இல்லாதது எது? எதுவுமில்லை. கல்வி, ஒழுக்கம், அறிவியல், பொருள், இன்பம், இல்வாழ்க்கை, வான்சிறப்பு, நட்பு என அனைத்துப் பொருளுமடங்க அழகுற எளிய நடையில் வடித்துள்ளார். வள்ளுவர் நட்பு பற்றி என்ன கூறுகிறார் என்பதை நோக்குவோம்.

நட்பு பற்றிக் கூற விளைந்த வள்ளுவர் நட்பு எனும் அதிகாரத்தில் நட்பின் இயல்புகள் பற்றிக் கூறியதுடன் ஆராயாமல் செய்யும் நட்பு எப்படியானது ஒருவருடன் நட்புக் கொள்ளும் போது ஆராய்ந்து செய்து கொள்ளும் நட்பு எப்படியானது என்பதை நட்பு ஆராய்தல் என்னும் அதிகாரத்திலும் தீய குணமுடையவரது நட்பின் தன்மையை தீ நட்பு என்னும் அதிகாரத்திலும் கூடாத நட்பு எப்படியானது என்பது பற்றி கூடா நட்பு என்னும் அதிகாரத்திலும் மொத்தமாக நாற்பது பாடல்களில் அழகுற வடிவமைத்துள்ளார். நட்பின் தன்மை பற்றி

*"செய்தற்கு அரிய யாஉள நட்பின் அதுபோல்*
*வினைக்கு அரியயா உள காப்பு"*

எனும் குறளில் கூறியுள்ளார். அதாவது நட்பு போல செய்து கொள்வதற்கு அரிய பொருள்கள் எவை உள்ளன. அந்த நட்பை செய்து கொண்டால் அது போலப் பகைவர் செய்யும் செயலுக்கு காவலாக இருப்பவை யாவை? என்கிறார்.

அறிவுடையவரது நட்பானது பிறைச்சந்திரன் நிறைவதைப் போல நிறையும். அறிவில்லாதவரது நட்பானது பிறைச்சந்திரன் தேய்வதைப் போல குறையும் என்பதை

*"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்*
*பின்நீர பேதையார் நட்பு"*

என்று அழகாக கூறியுள்ளார் மனதோடு மனம் மகிழ கொள்ளும் நட்பே உண்மையான நட்பு என்று கூறும் வள்ளுவர் பண்புடைய ஒருவரது நட்பானது "நவில் தொறும் நூல் நயம் போலும்....." பழகுந் தோறும் இன்பத்தை தரும் என குறிப்பிடுகின்றார். நட்பு எனும் உரிமையைத் தரவல்லது ஒத்த உணர்ச்சியே என்பதை குறிப்பிட வந்த வள்ளுவர்.

*"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பு ஆம் கிழமை தரும்"*

எனும் குறளில் அழகுற வடிவமைத்துள்ளார். உண்மையான நட்பு எதுவெனில்

*"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு"*

அதாவது ஆடை குலைந்தவனுக்கு விரைவில் கை சென்று உடை நழுவாமல் காத்தல் போல நண்பனுக்கு துன்பம் வந்த பொழுது சென்று உதவுவதே நட்பு என்கிறார்.

இவர் நமக்கு இவ்வளவு அன்பினர் நாம் இவருக்கு இத்தன்மையம் என்று ஒருவரை ஒருவர் புனைந்து சொன்னால் நட்பு அற்பமாகத் தோன்றும் தன்மையை உடைய நட்பை ஆராய்ந்து நல்ல நட்பைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை " நட்பு ஆராய்தல்" எனும் அதிகாரத்தில் அழகாகக் கூறியுள்ளார்.

ஒருவனை ஆராயாது நட்புச் செய்வது போல கேடு தருவது வேறு எதுவுமில்லை என்பதனை

*"நாடாது நட்டலின் கேடு இல்லை நட்பின்*
*வீடு இல்லை நட்பு ஆள்பவர்க்கு"*
*என்ற குறளில் அழகுற பாடியுள்ளார்.*

ஒருவனது குணம், குற்றம் ஆராய்ந்து கொள்ளாதவன் கொண்ட நட்பு பிற்காலத்தில் தான் சாவதற்கு காரணமான துன்பத்தை தரும் எனவே நட்பினை ஆராய்ந்து மேற்கொள்வதில் சிறந்தது எது வெனில்

*"குடிப்பிறந்து தன்கண் பழிகாணுவானைக்*
*கொடுத்ததும் கொளல் வேண்டும் நட்பு"*

என்கிறார். குற்றம் கண்டால் அழுமாறு சொல்லி நெறியல்லாதவற்றிற்கு இடித்துக் கூறி உலக வழக்கு அறியவல்லவரது நட்பை ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

ஒருவனுக்கு பேறு என்று சொல்லப்படுவது அறிவில்லாதவரோடு நட்புக் கொண்டானாயின். அதனை விடுத்து நீங்குவது என்றும் தம் ஊக்கம் கெடுவதற்குக்

காரணமாகிய வினைகளைச் செய்ய வேண்டாம். அது போல துன்பம் வந்த பொழுது கைவிடுவார். நட்பினைக் கொள்ள வேண்டாம். என்றும் குற்றமற்றாரது நட்பைக் கொள்வதுடன் தனக்கு நிகர் இல்லாதவர் நட்பிலிருந்து ஒரு பொருளைக் கொடுத்தாயினும் நீங்குதல் வேண்டும். என்றும் கூறுகிறார்.

தீய நட்பு பற்றிக்கூற வந்த வள்ளுவர் அன்பு மிகுதியால் பருகுவார் போன்றாராயினும் தீக்குணமுடையார் நட்பானது வளர்தலிலும் தேய்தல் நல்லது என்பதை

*"பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை*

*பெருகலிக் குன்றல் இனிது"*

என்று கூறிய வள்ளுவர் நட்புச் செய்து அஃது இல்லாத என்றும் கூறும் கூறிய வள்ளுவர் தமக்குப் பயனுள்ள வழி நீங்கும் தகுதி இல்லாதவரின் நட்பினைப் பெற்றால் நன்மை என்ன? இழந்தால் கேடு என்ன? இரண்டுமே ஒன்று தான்

மேலும் அறிவில்லாதவரது நட்பு அகத்திலே அன்பு இன்றி புறத்தே நகைப்பவரின் நட்பு, தம்மால் இயன்ற காரியத்தை செய்யாது விடுபவரின் நட்பு, செயலும் சொல்லும் வேறு வேறாய் இருப்பவரது நட்பு, என்பன தீய நட்பு எனக் கூறுகின்றார்.

கூடா நட்பு பற்றி கூறும் போது, கண்ட பொழுது மனத்தால் இனியவனாகச் சிரித்து எப்பொழுதும் மனதினால் தீயவராய் உள்ள வஞ்சகர்களுக்கு அஞ்சுதல் வேண்டும் என்றும், பொது மகளிரது மனம் எவ்வாறு வேறுபடுமோ அது போல தமக்கு நண்பர் போன்று மனதிலே நட்பு இல்லாதவரோடு உள்ள நட்பும் வேறுபடும் என்றும் கூறுகின்றார்.

*"பல நல்ல கற்ற கடைத்தும் மனம் நல்லர்*

*ஆகுதல் மாணார்க்(கு) அரிது"*

எனும் குறள் மூலம் நல்ல பல நூல்களை கற்றபோதும் மனம் திருந்தி நட்பாதல் பகைவருக்கு இல்லை என்கின்றார்.

வில்லினது வளைவு எதிர்த்தவர்க்கு தீமை செய்வதைக் குறித்தமையால் பகைவரிடத்தில் பிறக்கும் சொல்லினது வணக்கத்தினையும் தனக்கு நன்மை செய்தலைக் குறித்தது என்று கொள்ளல் ஆகாது என்பதனை

*"சொல்வணக்கம் ஒன்னார் கண் கொள்ளற்க வில்வணக்கம்*

*தீங்கு குறித்தமையான்"*

எனும் குறளின் ஊடாக கூறுகின்றார். தொகுத்து நோக்கும் போது நட்பின் தன்மையை உணர்ந்து நல்ல நட்பினை ஆராய்ந்து மேற்கொள்வது சாலச்சிறந்தது.



# மாணவர்களது ஒழுங்குணர்வும் பாடசாலையின் தூரநோக்கும்

செல்வி. தே. மிருசாயினி
(B.A) ஆசிரியர்

"கல்வியின் முழு மொத்த நோக்கம்: அல்லது தலையாய நோக்கம் கற்பவனின் நடத்தையில் பொருத்தமான மாற்றத்தை வருவித்தலேயன்றி கற்பித்தல் என்றிருக்கக் கூடாது" என்பது கல்வியியல் சிந்தனையாகும்.

பாடசாலை என்ற நிறுவனம் கற்பித்தல் என்ற செயல் தொடர் கருமத்தின் ஊடாக மாணவனை மையமாகக் கொண்ட நடத்தை மாற்றத்தினையே தனது குறிப்பான இலக்காகக் கொள்ள வேண்டும். பாடசாலையின் செயற்பாடுகள்: கருமத் தொடர்கள், மதிப்பீடுகள் அனைத்தும் மாணவனை மையமாகக் கொண்டே திட்டமிடப்படல் வேண்டும். அவை மாணவனின் ஆற்றலுக்கேற்ப ஒழுங்கமைக்கப்பட்டு வழி நடத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு விரைவுகளை அல்லது பெறுபேறுகளை மதிப்பிடப்படல் வேண்டும். என்பது கல்வி முகாமைத்துவக் கோட்பாடாகும்.

பாடசாலையின் பிரதான நோக்கம் உள்ளீடான ஒவ்வொரு மாணவனும் தனியாகவோ, அல்லது குழுவாகவோ ஓர் இயங்கு ஒழுங்குணர்வுடன் அறிவு, திறன் மனப்பாங்கினைப்பெற்று வளரக்கூடிய விதத்தில் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

மாணவர்களின் ஒழுங்குணர்வே பாடசாலை முகாமைத்துவத்தின் இலக்குகளை இலகுவாக வெற்றி கொள்ளுவதற்கான பிரதான உபாயமாகும்.

ஒழுங்குணர்வு:- ஒழுங்குணர்வு பற்றிய ஓரளவு தெளிவான இரு எண்ணக் கருக்கள் இனங் காணப்பட்டுள்ளது. ஒன்று ஒழுங்குணர்வு முக்கியமாக தனி நபர்பற்றியதாகக் கொள்ளலாம். ஒரு மாணவன் தான் சார்ந்துள்ள பாடசாலையின் செயற்பாடுகளினாலும் அச் செயற்பாடுகளில் அவனது பங்களிப்பு தொடர்பாகவும் ஒரு பாடசாலையின் அங்கத்தவர் என்ற வகையில் அனுபவிக்கும் மனத்திருப்திகளின் கூட்டு மொத்தம் எனலாம். இங்கு மாணவனின் தேவைகளும் அத்தேவைகளை நிறைவேற்றுவதில் பாடசாலையின் தன்மையும் தொடர்புபடுகின்றது. இந்நிலை மாணவனின் செயற்பாடுகளில் காணப்படும் சீரான தன்மையிலும், பாடசாலைக்கான பங்களிப்புகளிலிருந்து கணிக்கப்படலாம்.

ஒழுங்குணர்வு பற்றிய இரண்டாவது எண்ணக்கரு சமூகம் அல்லது குழுக்களுடன் தொடர்புடையது. இது குழுவின் முழு உணர்வையும் வலியுறுத்துகின்றது எனலாம். இதனை குழு மனப்பாங்கு எனவும் விபரிக்கலாம். உதாரணமாக நிலையான போக்கு மனவுறுதி ஒரு பொதுவான இலக்கை நோக்கிய குறிக்கோளை ஏற்றுக் கொள்ளுதலும் அவ்விலக்கை அடைவதற்கு உந்தப்படுதலும் இதில் பிரதிபலிக்கும் நீண்டகால அனுகூலங்களை அடையக் கூடிய உணர்வை பகிர்ந்து கொள்ளும் நிலையாகும்.

இலக்கை அடைய முழு அங்கத்தவர்களிடையே நிலவும் ஒழுங்கினை, அபாயத்தை உணர்தல், திருத்தம், முன்னேற்றம் திடமாக நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது. ஒழுங்குணர்வு என "வாட்சன்" என்பவர் விபரிக்கின்றார்.

"சாதகமற்ற சூழ்நிலைகளிலும் மனத்திடம் சுயநம்பிக்கை தனிநபர்களுடன் சேரும் ஆற்றல் பேணப்படுதல் ஒழுங்குணர்வு" என கார்டர், விகுட் என்பவர் கூறுகின்றார். பொதுவாக பாடசாலை மாணவர்கள் பாடசாலையில் அல்லது பாடசாலைக்கு வெளியே சமூக அங்கத்தவர்களிடையே சுமுகமான உறவை அல்லது தொடர்புகளை விபரிக்க ஒழுங்குணர்வு என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். மாணவர்கள் நல்லுணர்வுடைய வர்களாகத் தோன்றினால் மகிழ்ச்சியாக எந்நிலையிலும் நன்றே நிகழும் என்ற எதிர்பார்புடனும் நட்புள்ளம் கொண்டவர் களாக இருப்பவர்களை நல்ல உயந்த ஒழுங்குணர்வு கொண்டவர்களாக கருதலாம். ஆனால் அவர்கள் பிரச்சினைக்கு உரியவர்களாக, சினம் கொள்பவர்களாக, அமைதியற்று காணப்பட்டால் அந்நிலைமையை தாழ்ந்த குறைவான ஒழுங்குணர்வு எனலாம். இங்கு ஒழுங்குணர்வு என்பது அமைதியுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது.

பாடசாலையில் நடைபெறும் சகல செயற்பாடுகளிலும் மாணவர்களின் உணர்வுபூர்வமான பங்குபற்றுதல் ஆசிரியர்களுடன் ஆரோக்கியமான தொடர்பினை பேணிக்கொள்ளல் குழுச் செயற்பாடுகளில் உயரிய பங்களிப்பு பாடசாலைப்பற்று தலைமைத்துவத்தில் விருப்பு போன்ற அம்சங்கள் ஒழுங்குணர்வாக கருதப்படுகின்றது.

ஒழுங்குணர்வு ஒருவரின் செயற்பாடுகளின் உணர்ச்சி: பிரவாகம், அல்லது பதகளிப்புத்தாக்கமெனலாம். இது உயர்வாக அல்லது தாழ்வாக இருக்கலாம். ஒழுங்குணர்வை மாணவனின் செயற்பாடுகளைக்கொண்டே அளவிடமுடியும் எனினும் இது பண்புசார்ந்த மதிப்பீடாகவே அமையும்.

நல்லுணர்வுப் பாடசாலை ஒன்றில் ஒழுங்குணர்வு பொதுவாகக் காணப்படுகின்றது. இது ஒருவரின் தன்னம்பிக்கை, மனப்பாங்கை வளர்க்கிறது. இது குழுவுணர்வை வளர்க்கிறது. சுய விருப்பங்களுக்கும் சுய தேவைகளுக்கும் அப்பால் ஒரு குழுவின் அல்லது கூட்டத்தின் விருப்பத்திற்கும் அபிலாசைகளுக்கும் இடங்கொடுத்து

அவர்களின் நன்மைக்காக கஷ்டங்களை எதிர் கொண்டு தீர்க்க வேண்டுமென்ற ஆர்வமும் ஆற்றலும் இங்கு கட்டியெழுப்பப்படுகின்றது. இந்நிலை ஒரு வகுப்பறையில் ஒரு பாடசாலையில் காணப்பட்டால் அது உயர்வான ஒழுங்குணர்வு எனலாம். ஒழுங்குணர்வு குறைந்து தாழ்ந்த நிலையில் உள்ள போது ஒற்றுமையின்மையும் முரண்பாடுகளும் நடத்தைப் பிரச்சினைகளும் அதிகரிக்கும்.

**பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளின் ஊடாக அடைய எதிர்பார்க்கும் ஒழுங்குணர் விற்கான அம்சங்கள்**

பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளின் ஊடாக பின்வரும் அம்சங்கள் மாணவர்களிடையே கட்டியெழுப்பப்படல் வேண்டும். இதன் ஊடாகவே நல்லதொரு ஒழுங்குணர்வு நிலை மாணவரிடையே ஏற்பட்டு பாடசாலை முகாமைதுதுவம் தனது இலக்குகளை உயரிய முறையில் அடைய முடியும்

பயனுள்ள நோக்க அடைவு:..
வினைத்திறன் மிக்கவர்களாக ....
மனித நேயமும் ஒற்றுமையும் கொண்டவர்களாக ...
அமைதியான சுபாவம் கொண்டோராக ....
சுய வழிப்படுத்தல் கொண்டவர்களாக ....
சமூக ஒத்துழைப்புள்ளவர்களாக....
மாணவர்களின் மௌனப் பண்பாட்டைக் கலைத்தலும் ஒழுங்குணர்வும் ...
போன்ற பல்வேறுபட்ட ஒழுங்குணர்வு அம்சங்கள் காணப்படுகின்றன.
பயனுள்ள நோக்கை அடைய .....

பாடசாலையின் உயரிய நோக்கத்தினை மாணவர்கள் நன்றாக விளங்கி பயனுள்ள வகையில் அதனை அடைதல் வேண்டும். நற்பண்புகளையும் விழுமியங் களையும் கடைப்பிடிப்பவர்களாக நாட்டுப்பற்று உடையவர்களாக பாடசாலை பாடங்களில் உயரிய பெறுபேற்றை வெளிக் காட்டுபவர்களாக மணவர்கள் திகழ வேண்டும். இவ்வாறு திகழ்வதற்கு பாடசாலையின் மாணவர் மையமான நோக்கமானது ஒவ்வொரு முகாமைத்துவச் செயற்பாடுகளின் ஊடாகவும் தெளிவாக வலியுறுத்தப்படல் வேண்டும்.

வினைத்திறன் மிக்கவர்களாக ....

பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகள் மாணவர்களை நேரம் உழைப்பு, பணம், முதலியவற்றில் உச்சப்பயன்பாட்டைப் பெறுபவர்களாகவும் வளவிரயத்தைத் தடுத்து வளங்கள் தொடர்பான விழிப்புணர்வு கொண்டவர் களாகவும் வளப்பாதுகாப்பில் அக்கறை கொண்டவர்களாகவும் வளர்த்தெடுத்தல் வேண்டும்.

திட்டமிடல், கட்டுப்படுத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற பல முகாமைத்துவச் செயற்பாடுகளின் ஊடாக மாணவர்களும் பாடசாலை வளப்பயன்பாட்டில் முற்று முழுதாக பங்கேற்பவர்களாக விருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

இவ்வகையில் எழும் மாணவர் ஒழுங்குணர்வானது பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் மாணவர்களின் வளம் பிரயோகம் தொடர்பில் மாணவரின் வினைத்திறனைப் பிரதிபலிக்கும்.

**மனித நேயமும் ஒற்றுமையும் கொண்டவர்களாக**

பாடசாலையிலும் வெளியிலும் ஆழ்ந்த விசுவாசமான அக்கறை உணர்வு கொண்டவர்களாகவும் தனதும் ஏனையோரதும் பண்பாடுகளை விளக்கி நயப்பதில் அக்கறையுள்ளவர்களாக மாணவர்கள் வளரும் போது மனித நேயமும் ஒற்றுமையும் கொண்ட கூட்டு ஒத்துழைப்புக்கான ஒழுங்குணர்வு ஏற்படும். இன மத குல பேதமற்றவர்களாக ஏனையோரது கருத்துக்களை மதிப்பவர்களாக ஒற்றுமை உணர்வுடனும் பொறுமையுடனும் அறிவுடனும் ஒத்திசைவுடனும் செயல்புரியும் ஆற்றலைக் கொண்டவர்களாக சமூகப் பொறுப்புணர்வு மிக்கவர்களாக மாணவர்கள் வளர்த்தெடுக்கப் படுதல் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடு களினால் திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட வேண்டிய தொன்றாகும்.

ஆக்கபூர்வமான திறனாய்வு கருத்துத் தெரிவிப்பு எதிலும் நம்பிக்கையுடன் செயல்படும் தன்மை கொண்டவர்களாக மாணவர்கள் வளரும் போது பாடசாலையில் ஒழுங்குணர்வு ஏற்பட்டு பாடசாலை முகாமைத்துவம் சிறப்படையும்.

**அமைதியான சுபாவம் கொண்டோராக**

அமைதியான சுபாவமே ஒழுங்கணர்வின் பிரதான அம்சமாகும் மாணவர்கள் குழப்பமடைந்தவராகவோ அமைதியற்றவர்களாகவோ இல்லாதிருக்கும் வகையில் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

பாடசாலையின் அன்றாட கருமத் தொடர்களில் ஏற்படும் சிக்கல்கள் தெளிவற்ற தன்மை ஒன்றுக் கொன்று முரணான அம்சங்கள் என்பன மாணவர்களிடையே குழப்பத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தும்.

அழகியல் உணர்வு மிக்க செயற்பாடுகள் நட்புடன் உறவாடுவதற்கான சந்தர்பங்கள் முதியோருக்கான உதவும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன மாணவர் களிடையே இளகிய மனம், இரசிக்கும் திறன் கருத்துக்களை உன்னிப்பாக செவிமடுக்கும் திறன் காப்புணர்வு என்பவற்றை ஏற்படுத்தி ஒழுங்ணர்வின் அளவை உயர்த்தும்.

**சுயவழிப்படுத்தல் கொண்டவர்களாக**

மாணவர்கள் பிறரது வழிப்படுத்தல்களில் மட்டும் எல்லாச் சந்தர்பங் களிலும் தங்கியிராது சுயமாகவே செயற்படும் தன்மையும் படிப்படியாக தன்னையும் வழிநடத்தி ஏனையோரையும் திறமையாக வழப்படுத்தக் கூடியவர்களாக ஆற்றல் பெறும் போது ஒழுங்குணர்வு ஏற்படும். இவ் மாணவர்களிடையே தன்னம்பிக்கை ஜனநாயக தலைமைத்துவப் பண்புகள் போன்ற திறன்களை ஊக்குவிக்கின்றது.

ஆகவே பாடசாலை முகாமைத்தவச் செயற்பாடுகள் மாணவர்களின் சுயாதீன மான செயற்பாடுகளுக்கும் சுய வழிப்படுத்தலுக்கும் ஓரளவு இடமளிப்பதாகவும் மற்றவர்களளை வழிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக அமைக்கப்படல் வேண்டும்.

**சமூக ஒத்துழைப்புள்ளவர்களாக**

மனித உரிமைகளை மதிப்பவர்களாகவும் கடமையுணர்வு மிக்கவர்களாகவும் சட்டத்தையும் சம்பிரதாயத்தையும் மதிப்பவர்களாகவும் பரஸ்பர மதிப்புணர்வு கொண்டவர்களாகவும் மாணவர்கள் வளரும் போது மாணவர்கள் சமூக ஒத்துழைப்பு உள்ளவர்களாக மாறுகின்றனர்.


பாடசாலையில் ஆசிரியர்களையும் அதிபரையும் ஏனைய மாணவர் களையும் ஏனையோரையும் மதித்து அவர்களுடன் இணைந்து செயற்படும் ஒத்துழைப்புமிக்க ஒழுங்குணர்வு மிக்கவர்களாக வளர்தல் வேண்டும். இவ்வாறு பாடசாலை ஒத்துழைப்புள்ளவர்களாக மாணவர்கள் ஒழுங்குறும் போது இயல்பாகவே அவர்களிடம் சமூக ஒத்துழைப்பு மனப்பாங்கு விருத்தியடையும். ஆகவே பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகள் மாணவர்கள் சமூக ஒத்துழைப்புள்ளவர்களாக மாறக் கூடிய வகையில் மனித உரிமைகளுக்கு அமைவாகவும் பரஸ்பர தொடர்பு, ஒத்துழைப்பு என்பவற்றை வளர்த்தெடுப் பதாகவும் ஒழுங்கமைத்தல் வேண்டும்.

மாணவர்களின் ஒழுங்குணர்வினை விருத்திசெய்யும் வகையில் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளான திட்டமிடல், பாடவிதானச் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், மேற்பார்வை, மதிப்பீடு, நிதிவளமுகாமைத்துவம், சமூதாயத் தொடர்பு, அலுவலக முகாமைத்துவம் என்பன கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

**நல்லோருடன் கூடி இருப்பது சொர்க்கத்தில் இருப்பதற்குச் சமன்**



ஆங்கில மன்றம் மேற்பிரிவு




ஆங்கில மன்றம் கீழ்ப்பிரிவு



இந்துமா மன்றம்



சமூக விஞ்ஞான மன்றம்



# முதலாம் குடியரசு யாப்பில் சட்ட சபையான தேசிய அரசுப்பேரவை

திரு. வீ. விஜயகுமார்
ஆசிரியர்

1947 ஆம் ஆண்டு சோல்பரியாப்பில் உள்ள சட்டசபையான செனற்சபை செனற்பிரதிநிதிகள் சபை என்ற ஈரங்க சபையைக் கொண்ட பாரளுமன்ற முறை மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக சட்டம் இயற்றுவதற்கு ஓரங்க சபையான தேசிய அரசுபேரவை என்ற புதிய ஒரு சட்டமன்றம் முதலாம் குடியரசு யாப்பில் சட்டம் இயற்றுவதற்கு ஏற்படுத்தப்படலாயிற்று.

இச்சபை 1947ஆம் ஆண்டு பாரளுமன்றத்தைப் போல் அல்லாது அரச அதிகாரத்தின் மிக உயர் கருவியாக விளங்கியது இச்சட்டம் இயற்றுவது மட்டுமன்றி நிர்வாகம், நீதித்துறையிலும் அதிகாரம் கொண்டதாக விளங்கியது இதன் உறுப்பினர் தொகை வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. காலத்திற்கு காலம் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு இதனை தீர்மானித்தது எனலாம்.

இப்பேரவையின் பதவிக்காலம் 6 வருடங்கள் ஆகும். இப்பேரவையின் உறுப்பினர்கள் தேர்தல் தொகுதி நிர்ணயக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் தொகுதிகளில் இருந்து 21 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகளின் வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

இப் பேரவையின் வேட்பாளர் தகுதியை நோக்கும் போது வாக்களிக்கத் தகுதியுடைய எவரும் போட்டியிலாம் எனக் கூறப்படுகின்றது. எனினும்குறிப்பிடட் தொகைக்கு மேல் சம்பளம் பெறும் அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், இராணுவ உத்தியோகத்தர்கள், நீதிபதிகள், கிராம சேவகர்கள் போட்டியிட விரும்பின் தமது பதவியை இரஜினாமா செய்ய வேண்டும் என கூறப்படுகின்றது.

இப்பேரவையின் கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர் சபாநாயகர் ஆவர். இவர் பொதுத்தேர்தல் முடிந்து பேரவையின் முதலாவது கூட்டத்தொடரில் பேரவை உறுப்பினரால் தெரிவு செய்யப்படுவார்.

1ஆம் குடியரசு நிறைந்த அதிகாரத்தை கொண்டிருந்த பிரதமர் விரும்பின் இப்பேரவையைக் கலைக்கலாம் எனவும் எனினும் பேரவையைக் கலைக்கின் பொதுத்தேர்தல் திகதியையும் புதிய தேசிய அரசு பேரவை கூடும் திகதியையும் குறிப்பிட வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

இப்பேரவை சட்டம் இயற்றலில் மிக உயர்ந்த அதிகாரத்தை கொண்டிருந்தது. இங்கு இப்பேரவை பூரண இறைமை உடைய சபையாக மாற்றப்பட்டது. இது இயற்றும் சட்டங்களில் நீதிப் புணராய்வு செய்யும் அதிகாரம் சதாரண நீதிமன்றங்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை எனினும் இப்பேரவை இயற்றும் சட்டங்கள் அரசியல் அமைப்புக்கு முரணானது எனின் அது தொடர்பாக மீள்பரிசீலனை செய்து பேரவைக்கு ஆலோசனை கூறவென அரசியல் அமைப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது அரசியல் அமைப்புக்கு முரணான சட்டம் என கூறினாலும் கூட இப்பேரவை 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் பொறுப்பினை இச்சபை கொண்டிருந்தது.

இப்பேரவை தன் சட்ட வாக்க அதிகாரத்தை துறக்கவோ அல்லது வேறு நிறுவனத்திடம் கையளிக்கவோ அல்லது தன்போன்ற அதிகாரம் பொருந்திய எந்தவொரு ஸ்தாபனத்தை அமைக்கவோ முடியாதென யாப்பில் கூறப்பட்டுள்ளது. இப்பேரவையின் சட்டவாக்க அதிகாரத்தை நோக்கும்போது

(அ) சகல விதமான சட்டங்களையும் இப் பேரவை ஏற்கும்.

(ஆ) இது இயற்றிய சட்டத்தை யாரும் தடுக்க முடியாது.

(இ) இப்பேரவை இயற்றும் சட்டத்தை எந்தவொரு நீதிமன்றமும் மீள் பரிசீலனை செய்ய முடியாது இங்கு ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு நீதிமன்றங்கள் கூட இப்பேரவைக்கு ஆலோசனை கூறுமே தவிர சட்டத்தை தடுத்து நிறுத்தும் அதிகாரத்தை கொண்டிருக்கவில்லை.

**இப்பேரவையின் நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரத்தை நோக்கும் போது**

(அ) நிர்வாகத்திற்கு பொறுப்பான அமைச்சரவை காணப்படுகிறது இது தேசிய அரசு பேரவைக்கு கூட்டுப்பொறுப்பு உடையது.

(ஆ) இப்பேரவை அமைச்சரவைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வருவதன் மூலம் அமைச்சரவையை பதவியில் இருந்து நீக்கலாம்

(இ) இவ் அமைச்சரவை உறுப்பினர்கள் யாவரும் இப் பேரவையின் உறுப்பினர்களாக காணப்படுகின்றனர்.

(ஈ) அமைச்சரவை உறுப்பினரே அவர்களது கடமை தொடர்பாக கேள்வி கேட்கும் அதிகாரம் தேசிய அரசுப் பேரவைக்கு உண்டு இதற்கு பதில்கூறவேண்டிய கடமை அமைச்சரவைக்கு உண்டு.

**இப்பேரவையின் நீதித்துறை அதிகாரத்தனை நோக்கும் போது**

அ. புதிய நீதிமன்றங்களை உருவாக்குதல்.

ஆ. நீதி சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்குப் புறம்பாக அமைச்சரவை நியமனங்களை மேற்கொள்ளின் அது தொடர்பாக விளக்கம் கேட்டல்.

இ. குற்றவியல் நீதி ஆணைக்குழுவின் கால எல்லையை நீடித்தல்.

போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்வாறு இப் பேரவையின் சிறப்பம் சங்களை நோக்கும் போது இப் பேரவையின் உறுப்பினர்கள் யாவரும் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். மேலும் இப்பேரவை இறைமை உடையதாக காணப்பட்டது. இத்துடன் சட்ட ஆக்கத்தில் வீண் கால தாமதத்தையும் தடுத்து நிறுத்தியமையும் பல் உறுப்பினர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டமையும் குறிப்பிடலாம். மேலும் மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு இது வலுவூட்டியது.

எனினும் இப்பேரவையின் மிக உயர் அதிகாரம் வலு வேறாக்கல் கோட்பாட்டிற்கு முரணாக அமைந்ததுடன் சட்ட ஆக்கம் தொடர்பாக சிறுபான்மை இனத்தவருக்கு எந்தவித பாதுகாப்பும் இருக்கவில்லை.

**உசுஷாத்துணை நூல்கள்:-**


01. இலங்கை அரசியல் யாப்பு திரு. எஸ். யோதிலிங்கம்
02. இலங்கையின் அரசியல் திட்டங்களின் பரிணாம வளர்ச்சி திரு.யோ. குணரத்தினம்.
03. நோர்த் முதல் – கோபல்லாவரை இலங்கையின் அரசியல் வரலாறு. திரு.எஸ்.குலரத்தினம்.


**விவேகமும் நற்குணமும் வாழ்க்கையின் இரு சக்கரங்கள்.**

**நல்லோருடன் கூடி இருப்பது சொர்க்கத்தில் இருப்பதற்குச் சமன்**



# குறுந்தொகை காட்டும் வாழ்வியல் கோலங்கள்

செல்வி. சி. பவானி
ஆசிரியை.
அச்சுவேலி மத்திய கல்லூரி.

வாழ்வியல் கருத்துக்களை வளம் மிக்க களஞ்சியமாகத் தரும் பழந்தமிழ் இலக்கியங்களில் குறுந்தொகையும் ஒன்றாகும். சங்க காலத்தில் எழுந்த பதினெண்மேற்கணக்கு நூல்களில் எட்டுத்தொகை நூலின்கண் இது உள்ளது. குறும் பாடல்களைக் கொண்டதால் குறுந்தொகை எனப்பெயர் பெறுகின்றது. ஒருவர் கூற்றாக அமையப்பெற்ற நாடக வடிவப் பாடல்களாகவே அமைகின்றன. அவர்தம் வாய்ச்சொல் வழி யாரிடம், எதற்காக கூறுகிறார் என்பதனை உய்த்து உணர முடிகின்றது. குறுகிய அடியாக இருப்பதால் முதல் கரு என்பன ஏனைய அகத்திணைப்பாடல்களை போல் விரைவி வராவிடினும் தலைவன், தலைவி, பெயர்க்குறியீடு நிலம் பற்றிய பெயர் மலர்கள், விலங்குகள் உயிரினம் பற்றிய உவமைகள், அடைமொழித் தொடர்கள் போன்றன வற்றால் முதல்கரு உணர்த்தி எத்திணை என்பதனை வெளிப்படுத்துகின்றது. உரிப்பொருள் மட்டும் அமைந்த பாடல் இருப்பதும் இந்நூலின் சிறப்பம்சமாகும் 400 பாடல்கள் உண்டு ஆயினும் ஏடு எழுதுவோரின் தவறுதலால் 401 பாடல்கள் என அமைகின்றது இந்த நூலில் அகத்திணை வாழ்வியல் அம்சங்கள் நயம் மிக்கதாக எடுத்துரைக்கப்படுகின்றன.

அகத்திணை இலக்கியங்களின் இலக்கியப் பொருள் காதல். இந்நூலின் கண் காதல் பாடல்கள் பல்வேறுபட்ட சுவையுடன் அவர்தம் வாழ்வியல் அம்சங்களை விளக்குகின்றன. தலைவன் தலைவியின் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர் கூட்டம், இராக்குறி, பகற்குறி போன்ற அம்சங்கள் தனிச்சிறப்புடன் விரவிவருகின்றன. தலைவன் தலைவியை கண்டு அவள் மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்த கையுறை வழங்குகின்றான். தோழியோ அதனை ஏற்க மறுக்கிறாள். ஏனெனில் ஆடவரின் காதலை பெண்கள் எளிதில் ஏற்பது தவறு என்ற உயர்தன்மை உணர்த்தப்படுவதனை பின்வரும் குறுந்தொகைப் பாடல் காட்டுகின்றது.

*“செங்களம் படக்கொன்று அவுணதர் தேய்த்த*
*செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்*
*கழல் தொடிச் சேஎய் குன்றம்*
*குருதிப் பூவின் குலைக் காந்தட்டே”*

தலைவன் தலைவியைக் கூடும் போது ஐம்புல இன்பத்தோடு துய்ப்பதும் அவள் நலம் விதந்துரைப்பதும் சிறப்பான அம்சமாகும். இதனை இறையனாரால் அருளிச் செய்யப்பட்ட பாடல் மிகவும் அழகாக விளக்கி நிற்கின்றது.

*“கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ*
*பயிலியது கெழிஇய நட்பின் மயில் இயல்*
*செறி எயிற்று அரிவை கூந்தலில்*
*நறியவும் உளவோ நீ அறியும் பூவே”*

இதில் கூறப்படும் ஒவ்வொரு அடிகளும் நயம் மிக்கனவே. தலைவன் தலைவியின் இயற்கைப் புணர்ச்சியின் போது அவள் நலன் கண் தன்னை இழந்த தலைமகன் அவள் கூந்தலின் நறுமணம் கண்டு தன்சந்தேகத்தை பூந்தாதுகளை உண்டு பூக்களை நன்கறிந்த வண்டுகளிடமே கேட்பது மிகவும் சுவையாகவே உள்ளது. அதாவது "நீ செல்லும் மலர்களில் தலைவியின் கூந்தலின் நறுமணத்தை விட மலர்கள் ஏதாவது வாசனையில் மிகுந்தனவோ? நீ உள்ளதை உள்ளபடி சொல்" என்று கூறுவது மிகவும் இன்புறத்தக்கது.

இயல்பான உணர்வுகளுக்கும் இடம் அளிக்கப்படும் வாழ்க்கை முறையில் திருமணமாகாத கன்னிப் பெண்கள் காலில் சிலம்பு அணிவதும் ஆண்கள் கால்களில் கழல்கள் அணிவதும் வழக்கம். திருமணம் ஆன பின்பு அவை அகற்றப்படும். இதனை பெரும்பதுமனார் இயற்றிய " வில்லோன் காலனகழலே ...." என்றபாடல் அடிகள் விளக்கி நிற்கின்றன.

மருத நில ஆடவர் பரத்தையர் இல்லங்களில் தஞ்சம் புகும் தன்மையும் அதனால் ஊடல் கொண்ட தலைவி கலக்கம் அடைவதும் தலைவன் மீது கொண்ட உண்மையான அன்பு அவனைபிறரிடம் விட்டுக்கொடுக்காத தன்மையும் அவனை மன்னித்து அணைத்துக் கொள்வதும் இயல்பு. இதனை பின்வரும தோழி கூற்றுப் பா விளக்குகின்றது.

*"யாய் ஆ கியளே விழவு முதலாட்டி*
*பயறுபோல் இணர பைந்தாது படிஇயர்*
*உழவர் வாங்கிய கழுமு பூ மென்சினைக்*
*காஞ்சி ஊரன் கொடுமை*
*கரந்தனளாகலின் நாணிய வருமே."*

என உள்ளுறை உவமை மூலம் காட்டப்படுகின்றது. உழவர்கள் உடலில் உதிர்ந்து படிந்த மகரந்தப் பொடிகள் அவர்கள் காஞ்சிமரக் கிளைகளை வளைத்ததைக் காட்டுகின்றது. அதுபோல்த் தலைவன் பரத்தை வீடு போய் வருகின்றான். என்பதனை உடலில் பூசியுள்ள சந்தனம் முதலிய நறுமணப் பொருள்கள் காட்டி நிற்கின்றன. ஆனாலும் தலைவி அவனது கொடிய ஒழுக்கத்தை மறைத்து தாயைப் போல அணைத்து ஏற்றுக் கொள்கின்றாள். என்பது உயர்ந்த பெண்மைத் தன்மையை பறைசாற்றுகின்றது.

உண்மைக்காதலுக்காக உயிர்விடவும் ஆடவர் துணிவர். தலைவன் தலைவிமீது கொண்ட சொல்லொணாக்காதலினால் அவள் வசம் தன்னை இழந்தவனாகி வாழுங்கால் தலைவியோ அதனை ஏற்காதபோது மடல்ஏறி உயிர் விடத்துணிகின்றான்.

*"மா என மடலும் ஊர்ப்ப பூ எனக்*
*குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப*
*மறுகின் ஆர்க்கவும் படுப*
*பிறிதும் ஆகுபகாமம் காழ்க்கொளினே*

குறிஞ்சித்திணைக்குரிய தலைவன் கூற்றுப்பாடலில் காமம் முற்றினால் ஆடவர் பனை மடல்மீது ஏறி ஊர்வர். எருக்கலம்பூவை அடையாளப் பூப்போலச் சூடிச்செல்வர். நாற்சந்தியில் இவளால் இவன் இவ்வாறு ஆனான் என ஊரவர் ஆரவரிப்பர். இதனை உணர்ந்த பெண் தன்னை மாற்றுவாள் சிலவேலைகளில் உயிர் விடவும் அவன் மடல் ஏறல்மூலம் துணிவதனையும் அறியலாம்.

அன்பை அடிப்படையாகக் கொண்ட அகவாழ்விலே குறிசொல் கேட்பதும் அலருக்குப் பயப்படுவதும் தலைவனை விரைவில் வந்து வரைவு கடாவச்சொல்வதும் அவர் தம்வாழ்வில் அம்சங்களாக அமைகின்றன.

கைமை நோன்பு காப்பது வழக்காறாக உள்ளது. குறிஞ்சித் திணைப்பாடலில் தோழி கூற்றாக வரும் கருங்கட்கரவீரன் என்னும் புலவருடைய பாடலில் கூறப்பட்டிருக்கும் விதம் நம்மை மெய்மறக்கச் செய்கிறது. ஆண்குரங்கு ஒன்று இறந்துபடுதலை அறிந்த பெண்குரங்கு கைமை தாங்கமாட்டாது பாசம் மிகுந்து தாவுதல் முதலிய இயல்புகளை இன்னுமே அறிந்து கொள்ளாத தாயைத் தழுவி வாழும் தன் குட்டியையே தனது சுற்றத்தோடு ஒப்படைத்துவிட்டு மிக உயரமான மலையின் மேல் ஏறி கீழே பாய்ந்து அதாவது வரை பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் என்பதால் சிற்றறிவு உடைய உயிரினங்களே இப்படியாக வாழும் என்றால் மனித இனத்தின் ஒழுக்கலாறு எவ்வாறு அமையும்? இதனை நினைக்கும் போது மெய்சிலிர்கிறது. இதனை பின்வரும் அடியில் காண்போம்.

*"கருங்காட் தாக்கலை பெரும் பிறிது உற்றெனக்*
*கைமை உய்யாக் காமர்மந்தி....."*

இத்தகைய உயர்வான அடிகள் பாசப் பிணைப்பை எடுத்தியம்புவதை அவதானிக்கலாம். பெண்களுக்கு அடங்கி நடக்கும் ஆடவரை நாம் நம் கையையும் காலையும் தூக்கித் தானும் அதுபோலவே தூக்கும் கண்ணாடியில் தெரியும். நிழற்பாவைபோல விரும்பிய படி ஆடுவான் என விமர்சிக்கப்படுகின்றது. மற்றும் தமது கணவர் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இதனை முல்லைத் திணைப்பாடலில் கார்காலம் வந்ததும் தலைவன் தலைவியை நாடி வருவான். ஆனால் கார்காலத்துக்குரிய செயற்பாடுகள் இயற்கையில் தோன்றியபோதும் கூட தலைவி அதனை நம்பமறுக்கின்றாள். ஏனெனில் தலைவன் மீது கொண்ட நம்பிக்கைதான். இதனை பின்வரும் பாடலடி காட்டுகின்றது.

*"கானம் கார் எனக் கூறினும்*
*யானோ தேறேன் அவர் பொய்வாழ்கலரே"*

தமிழர் தம் பண்பாடான விருந்தோம்பல் பண்பும் கருணைநிறைந்த உள்ளமும் காணப்படுகின்றது. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கமைய தல்லவன் பொருள் ஈட்டும் பொருட்டு தம் உயிரினும் மேலான தலைவியைப் பிரிந்து செல்வதும் தவிர்க்கமுடியாத பண்பாகும். தாய்ப்பாசம் மிக்கவர்களாக இவர்கள் இருக்கின்றனர். உடன் போக்கில் தன் மகள் காதலனுடன் சென்று விடவே அவர்களைத் தேடிப் போகும் செவிலித்தாய் பாலைநில வழியிடையே அவர்களைக் காணாமல் செயலற்று வருந்திச் சோர்கிறாள். இணை இணையாக செல்வோரைக் காண்கிறாள் ஆனால் அவள் கண்ணுக்கு புலப்படவில்லை. நாம்தேடுகின்ற பொருள் தவிர மற்றவை எல்லாம் எதிர்படும் என்ற மனநிலை மாந்தரிடம் உண்டு. இதனை விளக்கும் சிறந்த உளவியற் கருத்துக்களும் இடம் பெற்றிருக்கின்றன. இதனை பின்வரும் பாடல் கோடிட்டுக் காட்டுகிறது.

"காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே
அகல் இரு விசும்பின் மீனினம்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே"

ஈய்த்துவக்கும் இன்பமும் இங்கு காணப்படுகிறது. தலைவன் பொருள் ஈட்ட வேண்டியதன் அவசியத்தைத் தன் நெஞ்சுக்குச் சொல்லும் விதமாக பாலைத்திணையில் கூறப்படுகின்றதைக் காணலாம். பிறருக்கு ஈய்தலில் உண்டான இன்பம் பொருள் இல்லாதவரிடம் இல்லை என்று கூறுவதன் மூலம் புலப்படுத்தப்படுகின்றது. அத்தோடு பிற உயிர்களையும் தம்வீட்டுச் சூழலிலே வாழ்விடுகின்ற கருணை மனப்பாண்மை சிறுவர் சிறுமியர் பாவை விளையாட்டுப் போன்றவற்றை ஆடல் தலைவன் தலைவியிடையே பாங்கன் தோழி தூது செல்லும் தன்மைகளும் காணப்படுகின்றன. தந்திரமாக உள்ளுற உவமைகளைக் கையாண்டு தம் கருத்தை பதிக்கின்ற மதி நுட்பம், உணர்ச்சிமிக்க மன எழுச்சித்தன்மை, தலைவன் தன் வரவை தலைவிக்கு அறிவிக்கும் முகமாக ஒலி எழும்பும் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. அலர் ஏற்படும் போது தலைவியை காப்படங்க வைத்தல் போன்றனவும் காணப்படுகின்றன. ஒருவர்தாம் செய்த குற்றத்தை உணரும் போது மன்னிப்பு வழங்கும் தன்மையும் காணப்படுகின்றது.

ஆண் பெண்களின் கடமை உணர்வுகளும் வரையறை செய்யப்படுகின்றன. இதனை பெருங்கடுங்கோ என்ற புலவரின் பாலைத்திணைப் பாடலின் கண் உயிர் பெறுகின்றது

"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என
நமக்கு உணரத் தோரும் தாமே
அழா அல் தோழி அழுங்குவர் செலவே"

என்ற பாடல் புறத்தே சென்று பொருள் தேடுதல் அரசருக்கு உதவுதல், ஆடவர்க்கு உயிராகும். வீட்டில் இருந்து வாழும் மகளிருக்கு தம் கணவரே உயிராவர் என வரையறை செய்து காட்டுகின்றது. நம்பிக்கை தன்மையில் வாழுதல் அதாவது காக்கை கரைவதால் விருந்தினர் வருவார் என்று நினைக்கின்ற தன்மையையும் காணமுடிகின்றது.

இவ்வாறாக குறுந்தொகைப் பாடல்கள் அன்பாலே இணைந்த அகத்திணை மரபைக் கூறவந்ததோடு வாழ்வியல் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இலக்கியப் பொருளான காதல் பல்வேறு பட்ட சுவைகளில் தலைவன் தலைவி தோழி கூற்றாக அமைந்து பலதரப்பட்ட அம்சங்களை உள்ளடக்குகின்றது கைமைநோன்பு, கொடை, தர்மம், விருந்தோம்பல், கருணைமனப்பாங்கு, மன்னிக்கும் மனத்திண்ணம் போன்ற அம்சங்களை விளக்கி உன்னத இலக்கியமாக காலத்தால் அழியாத நெஞ்சை அள்ளும் பாக்கள் மூலம் காலத்தை வென்று என்றும் இன்பம் தருகின்றது.



# Transportation

Mas . S. Ravivarman
Grade 13

Transportation must be a notable word in the modern world. It is the way of moving people and goods from one place to another. There are three main ways of transport. They are land, sea, and air.

As a result of modern science and technology, there has been a massive development in transportation .Many thousand years ago, there was no nee d for people to move about much. They were very slow and lazy. People travelled on foot carrying their goods. Then they learnt to use animals. Horses, camels, elephants, oxen, yaks, donkeys, asses and other domesticated animals became their carriers People found that it was faster to travel using animals than walking.

Next came the wheeled vehicles. Carts and wagons were the first. Wheeled vehicles transported.

More than one person at a time. They were fast than the humans riding animals. Also they were able to transport heavy loads of goods in them.

Water transport is another popular mode of travel and transport. Inland water ways and seas are tapped for this purpose. James Watt invented the steam engine in 1775.This brought about a revolution in movement. Steam power was introduced to ships, boats, trains and many other vehicles.

In 1903, Wright brothers invented the first air plane. The speed and the comfort of travel increased with this invention. Passenger and cargo planes began to fly through the skies bringing the World together. Now it is possible to travel in space carriers from planet to planet.



# *Peace*

Miss. A. Ajanthini
Grade 11C

There are diverse people in this world. Co-operation among the people is essential for their survival. There is a special force that keeps living beings together. That is peace.

Peace is the unity, trust, love, harmony and understanding prevailing among people. Human nature differs from individual to individual which results in conflicts. One small conflict may develop into a war gradually. A world without smiles is like a dry, parched land.

Peace is the only solution which controls war among nations. To make peace, all of us have to get together and work in harmony. Unity and strength can destroy evil. We have to act reasonably and bring peace upon our mother earth. Then our planet will be the most pleasant place to live. So let's put aside our cultural, religious and ethnic differences and work to achieve peace.





# *The Sinharajah Forest*

Miss O.Kiruthiga
Grade 11C

The Sinharaja rainforest is the only undisturbed rainforest left in Sri Lanka. It is about 9000 hectares in extent. The climate is humid because of heavy rainfall. It is the largest rainforest in Sri Lanka.

The Sinhjaraja forest is home to rare animals, birds, butterflies, insects, reptiles and trees. The average height of trees varies between 35 to 40 meters. Some trees are above 50 meters.

Sinharaja provides a habitat for animals. There are herbivores carnivores as well as mixed feeders. Wild pig, leopard, barking deer and mouse deer are the animals we find in the Sinharajah. There are many other varieties of small mammals.

Studies have recorded 45 varieties of reptiles. This includes snakes lizards and tortoises. The viper and the cobra are among the venomous species.

Conservation of Sinharaja is of vital necessity .It ensures the maintenance of water resources. So, it is important to conserve this rich , valuable and fragile habitat.



# My Favourite Game

Mas. S. Arudkumaran
Grade 10C

There are so many games in the world. Some of them are football, cricket, netball, volleyball and badminton. Some are indoor games and some are outdoor games. Some are individual games and some are team events. I like cricket most.

Cricket is a team and outdoor game. It is an exciting one. Cricket is played all over the world. It is a popular game. A lot of people watch cricket matches on the television. Cricket is played by two teams and each team has eleven players. Cricket is an international game.

The materials needed to play cricket are bats, balls, bails, pads, gloves and helmet. A batsman scores by running between wickets. The side which gets more runs wins the match. A batsman is made out by being bowled, caught, and stumped or leg before wickets. A bowler can bowl six times in an over.

There are test matches, one day matches, twenty over matches, fifty over matches and IPL cricket matches. A test match will continue for five days. One day matches are more interesting than test matches.

Cricket is an expensive game. By playing cricket, leadership qualities are developed among school students. Obedience, respecting others, tolerance and helping others are the good qualities which can be developed by cricket.

Our muscles and joints become strong by playing cricket. There are lots of tactics in this game. We can enjoy it well. I love cricket a lot.



# *Red Fort*

Miss.A.Kapilaveny
Grade 12 Arts

The Red Fort is a 17th century fort complex constructed by the Mughul Emperor Shah Jahan in the walled city of Old Delhi. It served as the capital of the Mughuls until 1857, when Mughul emperor Bahadur Shah Zafar was exiled by the British Indian government. The British used it as a military camp until India was made independent in 1947.

It is now a popular tourist site, as well as a powerful symbol of India's sovereignty. The Prime Minister of India raises the flag of India on the ramparts of the Lahori Gate of the fort complex every year on the Independence Day. It was designated a UNESCO World Heritage site in 2007.

Mughul Emperor Shah Jahan started construction of the massive fort in 1638 and work was completed in 1648.It was the residence of the royal family.

Red Fort showcases the very high level of art form and ornamental work. The art work in the Fort is a synthesis of Persian, European and Indian art which is very rich in form, expression and colour. The walls open at two major gates, the Delhi and the Lahore gates. The Lahore gate is the main entrance; it leads to a long covered bazaar street. The southern end of this street is the Delhi Gate. The Red Fort is one of the most popular tourist destinations in Old Delhi, attracting thousands of visitors every year.

The Fort is also the site from which the Prime Minister of India addresses the nation on 15 August, the day India achieved Independence from British. It also happens to be the largest monument in Old Delhi.



# *News Papers*

T. Thigitharan
Grade 9C

Newspapers play an important role in the modern world. Although there are many information sources, newspapers are more powerful and popular. They have reduced time and distance. They bring news from all parts of the world. It makes us feel that something is happening in your neighborhood.


Newspapers are the true mirror of the public opinion. It is a link between the people and government. They help to find out the public opinion about the various plans and works of the government.

Newspapers have something for everybody. The headlines give the main points of the news items. There are many advertisements and foreign news, sports news, Notices, stories, cinema and others.

Some newspapers have many more pages. Every member in family reads and enjoys them. Every newspaper has an editorial. It is a very important future. It is written by the editor. Notice, advertisements and articles cover a wide range of subject. We can find many kinds of employment advertisements in the newspaper.

The very short advertisement in small print is called classified. They give us information about many kinds of things and services.

A newspaper must be impartial. It must give the real news to the public. Hence the editors must be very careful in the publishing their newspapers.



# The Subramaniam Park

T.Nirojan
Grade 9c


The Subramaniam Park is in Jaffna town. It is situated between Jaffna central college and the public library, Duraiyappa stadium, the court and the post office are near the park.

Many children and adult come in the evening. Children like to play in the golden swings in the park. Lot of people visit the park during the holidays to enjoy the nature.

There are many kinds of flowers. There is also a pond in the middle of the park. They are some cement seats under the trees. The park is always neat and clean. It is a very nice entertaining place for children.

# சாதனையாளர்கள்

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் (2010)



தி. விதுஜனன்



சு. சுலக்சன்



ஞா. சோபிதன்



ச. பிரவீன்



செ. ஆரபி



ம. டென்சிகா

பி. நிருஜன்

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் (2011)



அ. சரணியா



ந. கைலரூபன்



பா. கவியரசன்



சி. நிவேதிகா

## க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை (2010)



இ. கஸ்தூரிராஜன்
(8A, B)



பே. கஜமுகன்
(7A, B,S)



செ. தனுசன்
(5A, 2B,2C)



சி. கலைவரதன்
(5A, 2B, 2C)



சி. மேரிதர்மஸ்ரீ
(5A, B, 2C, S)

## க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை (2011)



சி. நிறோஜி
(5A, 4B, )

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை (2010)
## பல்கலைக்கழக அனுமதி



சி. அர்ச்சிகா

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை (2011)
## பல்கலைக்கழக அனுமதி



ஞா. கஜனி



க. தாட்சாயினி



பா. சுரேகா

## போதைப்பொருள் தடுப்பு ஆக்கப் போட்டி (2011)



கு. நேருஜன்
(தேசியமட்டம் முதலாம் இடம்)

## அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டி (2012)



உ. ராம்கி
(தேசியமட்டம் முதலாம் இடம்)

அச்சு மத்தியதீபம் சஞ்சிகை சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

## இம்முறை நாங்கள் பாரிஸிற்கு!

சீனா மற்றும்
சிங்கப்பூருக்கும் செல்கிறோம்

2,000 வெற்றியாளர்கள் லைஷர் டூர்ஸ்டுக்கு

200 வெற்றியாளர்கள் சிங்கப்பூருக்கு

40 வெற்றியாளர்கள் சீனாவிற்கு

20 வெற்றியாளர்கள் பாரிஸிற்கு

**செலிங்கோ லைஃப் குடும்ப சவாரி 6**

**செலிங்கோ லை:.ப் காப்புறுதிதாரர்களுக்கு மட்டுமே**

நாடு முழுவதுமுள்ள ஒவ்வொரு செலிங்கோ லை:.ப் கிளைக்கும் வெற்றி வாய்ப்புகள்
செலிங்கோ லை:.ப் பெமலி சவாரி 6 இம்முறை புது விதமாக! நீங்களும்
செலிங்கோ லை:.ப் காப்புறுதிதாரராகி இவ்வரிய வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்

# செலிங்கோ லைஃப்

அச்சு மத்திய தீபம் சிறப்பாக அமைய வாழ்த்தும்

# சியான் ரேடர்ஸ்

அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்,
பாதனிகள் என்பவற்றை தரமானதாகவும்
குறைந்தவிலையிலும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்

## சியான் ரேடர்ஸ்

*பிரதான வீதி,*
*அச்சுவேலி.*

T.P.: 077 4041792

# மக்கள் வங்கி

- எதிர்கால தலைவர்கள் உருவாக்கும் எமது பெறுமதிமிக்க வளங்களாகிய பாடசாலை மாணவர்களுக்கான கணக்கு.
- 5 – 18 வரை வயதான பிள்ளைகளுக்கு ரூபா 100/= வினை வைப்புச் செய்து "சிசு உதான" கணக்கை ஆரம்பிக்கலாம்.
- பாடசாலைகளிலுள்ள மக்கள் வங்கியின் "சிசு உதான" சேமிப்பு அலகினூடாகவோ அல்லது அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையினூடாகவோ சிறார்களாலேயே இக் கணக்கினை நடைமுறைப்படுத்த முடியும்.
- சேமிப்புத் தொகை அதிகரிப்புக்கேற்ப கவர்ச்சிகரமான பரிசுகள்.
- க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சையில் முதல் அமர்வில் அதி விசேட சித்தி பெறும் பிள்ளைகளுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- அன்றாட கணக்கு மீதிக்கு வட்டி கொடுக்கப்படும்.

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

மக்கள் வங்கி



யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் "அச்சு மத்திய தீபம்" சஞ்சிகை சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

வட்டிக்கு 50% போனஸ் வட்டி

கோடிக்கணக்கான பெறுமதி கொண்ட பரிசில்களும் போனஸ் வட்டியும்

சேமிக்கும் உங்களை என்றும் வெற்றிபெறச் செய்யும்
தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து

பரிசு மழை மீண்டும் WIN WIN பரிசு மழை

NSB யுடன் சேமிக்கும் அனைவருக்கும் வெற்றி
ரூபா 35,000,000,00 வெல்லுங்கள்



NSB

கல்லூரி அன்னையின்
மலர் சிறப்புற மலர
ஆக்கங்களை
தந்து உதவியவர்கட்கும்
விளம்பரங்களை தந்து
உதவியவர்கட்டுகும்,
பல வகையில் ஆக்கமும்
ஊக்கமும் தந்து உதவிய
நல் உள்ளங்கட்கும்,
சீரிய முறையில் அச்சிட்டு உதவிய
ஷாம்பவி பதிப்பகத்தினருக்கும்
வாசகர்கள்
அனைவருக்கும்



# நன்றிகள் பல

"அச்சு மத்திய தீபம்" மூன்றாவது மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்

BANK OF CEYLON

BOC

ලංකා බැංකුව இலங்கைவங்கி

# உங்கள் கனவை நனவாக்கும்

- திருமணத்தன்று தங்கநாணயம், சாதாரண சேமிப்பு கணக்கை விட கூடிய வட்டி
- முதற்குழந்தைக்கு ரண் கெகுளு கணக்கு, 10 பாரதூரமான நோய்க்கு வைத்திய காப்புறுதி
- இலவச ஆயுட் காப்புறுதி மொபைல் வங்கி சேவை (Pay Mate வசதி)
- கணக்கு நிலுவையில் 90% வரை கடன் வசதி
- சர்வதேச பற்று அட்டை
- நிலையியல் கட்டளை வசதி
- இணையத்தள வங்கி வசதி



தகுதி வாய்ந்தவர்களுக்கு பல்கலைக்கழக புலமைபரிசு மற்றும் கடன் அட்டை வசதி
நீங்கள் இலங்கை பிரஜையாயின் 18 -25 வயதிற்குட்பட்டவராயின் இன்றே 18 + கணக்கை ஆரம்பித்து 35 வயது வரை சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


## ரண் கெகுளு Ran Kekulu

உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்கான நிதி அடித்தளம்

"ரண் கெகுளு" கணக்கின் மூலம் உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்கான நிதி அத்திவாரத்தைக் கட்டியெழுப்புங்கள். இக் கணக்கு பாதுகாவலருக்கான இலவச ஆயுட்காப்புறுதி, பிள்ளைக்கான விபத்து மற்றும் சுகயீனக் காப்புறுதி, பிள்ளைக்கான விபத்து மற்றும் சுகயீனக் காப்பீடு 5ஆம் ஆண்டு மற்றும் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைகளுக்கான புலமைப்பரிசில்கள் போன்ற பல தனித்துவமான தன்மைகளையும் கொண்டுள்ளது.

From Bank of Ceylon

BOC MEGA වාසි




**At the Grand draw**

Mitsubishi Lancer | Toyota Yaris | Nissan Sunny

75 home packages worth Rs.100,000 each from Singer or Damro
25 Pilgrimage packages worth Rs.100,000 (for Senior citizen accounts only)
1500 Cargills Food City vouchers valued at Rs.15,000 each
2000 cash deposits valued at Rs. 10,000 each

**Gift Vouchers through Every Quarterly draws** Singer | DAMRO | Cargills

50 home packages worth Rs.100,000 each from Singer or Damro
25 Pilgrimage packages worth Rs.100,000 (for Senior citizen accounts only)
1000 Cargills Food City vouchers valued at Rs.15,000 each
1000 cash deposits valued at Rs. 10,000 each

**Mega Prizes**

3 Valuable Motor Vehicles
295 Singer or Damro Home Packages
100 Pilgrimage packages
6500 Cargills Gift Vouchers
3000 Cash Deposits

Maintain a minimum balance of Rs.10,000 or its multiples in Boc savings account for a period 3 months, commencing from the begining of the quarter and be eligible to enter the draw.

* Conditions Apply

Multiples of Rs.10,000 entitle you to have more chances.

Ran Ginum | Normal Savings Accounts | SENIOR | Ranaviru Ran Ginum | Ran Govi Thanpathu

Hurry to your nearest bank of Ceylon for details.

Bank of Ceylon Head Office, "BOC Square", No. 01, Bank of Ceylon Mawatha, Colombo 01.

BANK OF CEYLON BOC Bankers to the Nation

www.boc.lk Hotline: 011 220 4444 AA+(lka)

ஷாம்பவி பதிப்பகம், நீர்வேலி, & யாழ்ப்பாணம்.021 2224143